பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 26 செவ்வாய்க்கிழமை (12.10.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 320

# ஆணைக்குழு முன் சாட்சியமளிக்க முடியாது பலரும் ஏமாற்றம்!

## மட்டக்களப்பு எம்.பியிடம் முறையீடு

மட்டக்களப்பு,ஒக்ரோபர்12

மட்டக்களப்பில் விசாரணை நடத்திய நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியம் அளிக்கச் சென்ற பாதிக்கப்பட்ட மக்கள் பலர், ஏமாற்றத்துடன் திரும்பினர். அவர்கள் சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்படவில்லை.

ஆணைக்குழுவின் அமர்வு நேற்று நண்பகல் 1.30 மணியுடன் நிறுத்தப்பட்டதால் தம்மால் சாட்சியமளிக்க முடியவில்லை என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரனிடம் மக்கள் முறைப்பட்டனர்.

இதுகுறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தத்தின் போது மக்கள் பலர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்; பலர் காணாமற்போயிருக்கின்றார்கள்; பலர் அங்கவீனமடைந்திருக்கின்றார்கள். இந்த நிலையில் நல்லிணக்க ஆணைக்குழுவினர் முன்னிலையில் சாட்சியமளிக்கச் சென்றவர்களில் பலர் சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்படவில்லை. ஏமாற்றத்துடன் அவர்கள் திரும்பிச் சென்றனர். அவர்கள் இது குறித்து முறையீடு செய்துள்ளனர் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை தொடக்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகள் இடம்பெற்றுள்ளன.

இந்த அமர்வுகள் இன்று (நேற்று) பிற்பகல் 1.30 மணியுடன் நிறைவு பெற்றுள்ளன. ஆனால், நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கச் சென்ற மக்களில் பலர் அனுமதிக்கப்படவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் என்னிடம் முறையிட்டனர்.

இந்தச் செயல் மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். எமது மட்டக்களப்பு

(24 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியமளிக்க நேரத்தைக் காரணம் காட்டி அனுமதி மறுப்பு

### பிரஜைகள் குழு வருத்தம் தெரிவித்து ஆணைக்குழுவுக்குக் கடிதம்

கொழும்பு,ஒக்.12

நல்லிணக்க ஆணைக்குழு முன்பாக சாட்சியமளிக்க நேரம் போதாமையினால் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனவும், தமது சாட்சியத்தை அளிக்க முடியாமல் போனமைக்கு வருத்தம் தெரிவித்து மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட பிரஜைகள் குழுவின் முன்னாள் செயலாளர் கதிர் பாரதிதாசன் ஆணைக்குழுவின் செயலாளருக்குக் கடிதம் மூலம் தெரிவித்ததுடன் அக்கடிதத்தில் இது தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 9ஆம் திகதி முதல் இன்று வரை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மட்டக்களப்பில் சாட்சியங்களை பதிவு செய்தது. 9ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்திலும், 10ஆம் திகதி ஓட்டமாவடி பிரதேச செயலகத்திலும், 11ஆம் திகதி ஏறாவூர்பற்று

(24 ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே**

**பெட்றிகாவுக்கு 'சண்டே லீடரின் செய்தி ஆசிரியராக கடமையாற்ற தகுதி இல்லையாம்**
உயர் நீதிமன்றத்தில் பொன்சேகாவின் சட்டத்தரணி தெரிவிப்பு
பக்கம் 3

**அரச ஊழியர்கள், படையினர் இனி 60 வயதுடன் 'அவுட்'**
பாதுகாப்புப் படையினர், பொலிஸார் உட்பட அரச ஊழியர்களுக்கு இனிமேல் 60 வயதுக்கு மேல் சேவை நீடிப்பு வழங்கப்படமாட்டாது
பக்கம் 5

**மணல் அகழ்வுக்கு கட்டுப்பாடு தளர்வு**
மணல் அகழ்வு நடைமுறையிலிருந்த இறுக்கமான நடைமுறைகள் ஓரளவு தளர்த்தப்பட்டுள்ளன.
பக்கம் 11

**முஷாரப் தலையை கொண்டுவந்தால் 100 கோடியும் 1000 ஏக்கர் நிலமும்**
பக்கம் 19

## வடமாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பான வவுனியா கூட்டத்துக்கு வருகிறார் ஜனாதிபதி

### மாவட்ட அரச அதிபர்கள் நேற்றுக் கூடி ஆராய்வு

யாழ்ப்பாணம்,ஒக்.12

வடமாகாண அபிவிருத்தி தொடர்பாக வவுனியாவில் இடம்பெறவுள்ள மீளாய்வுக் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்கவுள்ளார் என்று யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

எதிர்வரும் 19ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ள வடமாகாண அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தில் ஜனாதிபதி பங்கேற்க இருப்பதனால் அது தொடர்பான முன் ஆயத்தக் கூட்டம் நேற்று யாழ். செயலகத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்துக்குப் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமை வகித்தார். வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி,

(24 ஆம் பக்கம் பார்க்க)

## 20 வருடங்களின் பின்னர் சொந்த மண்ணில் கல்வியை ஆரம்பிக்கும் வயாவிளான் மாணவர்

யாழ்ப்பாணம், ஒக். 12

இருபது வருடங்களின் பின்னர் நேற்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் கற்றல் செயற்பாடுகள் அதன் சொந்த மண்ணில் - சொந்தக் கட்டடத் தொகுதிகளில் ஆரம்பமாகின.

பாடசாலை அதிபர் கே.கனகராஜா தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வின்போது 515 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் கேணல் ஜெயசுந்தர, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கற்றல் செயற்பாட்டை நாடாவை வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

இராணுவத்தினரின் அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள இந்தப் பாடசாலை அண்மையில்

(24 ஆம் பக்கம் பார்க்க)

வயாவிளான் மண்ணில் எங்கள் பிள்ளைகள்



## தாய்லாந்தில் நேற்றுச் சுற்றிவளைப்பு 130 இலங்கை அகதிகள் கைதாகினர்

கொழும்பு, ஒக்.12

தாய்லாந்தில் அந்நாட்டு இராணுவத்தினரும், கனேடியன் இன்ரர் போல் பொலிஸாரும் இணைந்து நேற்றுக் காலை 6.30 மணியளவில் நடத்திய சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையின்போது 130இற்கும் மேற்பட்ட இலங்கை அகதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யபட்டவர்களின் 60 ஆண்கள், 50 பெண்கள், 7 கர்ப்பிணித் தாய்மார்கள், 13 குழந்தைகளும் உள்ளனர்.

தாய்லாந்தின் ஒன்சபோன், சபான்மை, பொம்சிங் மற்றும் சபான்மை பிக்சி சுற்று வட்டாரம் ஆகிய பகுதிகளிலேயே இச்சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

விஸா காலவதியான நிலையில், தம்மை அகதிகளாக ஐக்கிய நாடுகள் அமைப்பில் பதிவு செய்திருந்த இலங்கை அகதிகளும், கப்பலில் கனடாவிற்கு செல்வற்காக வந்திருந்த அகதிகளுமே இவ்வாறு கைது செய்யப்பட்டு தாய்லாந்து குடிவரவு திணைக்கள சிறப்பு முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தாய்லாந்திலிருந்து கப்பலில் கனடாவுக்கு இலங்கையர்களை அனுப்பிவரும் நடவடிக்கையைக் (24 ஆம் பக்கம் பார்க்க)

## கெவிளியாமடு சிங்களக் குடியேற்றம்: சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானம்

### மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் முடிவு

கொழும்பு,ஒக்.12

மட்டக்களப்பு, கெவிலியாமடு பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் அத்துமீறிய சிங்களக் குடியேற்றத்துக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு மட்டு. மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் நேற்று முடிவு எடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அபி விருத்திக் குழுக் கூட்டம் மாவட்டச் செயலகத்தில் மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் மற்றும் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா (24 ஆம பக்கம் பார்க்க)

### விசுவமடு-பாலியல் வல்லுறவு வழக்கு:

## 4 சிப்பாய்களுக்கும் விளக்கமறியல் நீடிப்பு பிணை மனு குறித்த தீர்ப்பு எதிர்வரும் 20இல்

கிளிநொச்சி,ஒக்.12

கிளிநொச்சி, விசுவமடுவில் வீட்டில் தனியாக இருந்த இரண்டு பெண்கள் மீது கடந்த ஜூன் மாதம் 06 ஆம் திகதி பாலியல் வல்லுறவு புரிந்தனர் என நான்கு இராணுவச் சிப்பாய்களுக்கு எதிராகத் தாக்கலான வழக்கு விசாரணை நேற்று பூர்த்தியானது. மேல் விசாரணை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினரை பிணையில் விடுவிக்குமாறு சமர்ப்பிக்கப்பட்பட (24 ஆம் பக்கம் பார்க்க)

## பழைய கட்டடங்கள் தரை மட்டமாக்கப்பட்டு

# யாழ்.ஆஸ்பத்திரி நிர்மாணப் பணிகள் ஜப்பானின் உதவியுடன் விரைவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக்.12

ஜப்பானின் நிதியுதவியுடன் யாழ்.போதனா வைத்தியசாலை நவீன வசதிகளைக் கொண்டதாக புதுமெருகுடன் கட்டியெழுப்பப்படவுள்ளது. அதற்கான பணிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

இதற்கென ஜப்பான் அரசாங்கம் 2 ஆயிரத்து 900 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது என்று யாழ்.போதனா வைத்தியசாலையின் உயர் அதிகாரியொருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.போதனா வைத்தியசாலையை நவீன வசதிகளுடன் மாற்றியமைப்பதற்கு ஜப்பான் போதிய நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளது. அதைத் தொடர்ந்து பழைய கட்டடங்கள் இடித்து அகற்றப்பட்டுள்ளன.

புதிய கட்டட நிர்மாணப் பணிகள் அடுத்த மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்தப் பணிகளின் போது அவசர சிகிச்சைப் பிரிவு, சந்திர சிகிச்சைப் பிரிவு, 'எக்ஸ்றே' பிரிவு, என்பன நவீன மயமாகவுள்ளன.

அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்துக்குள் கட்டட நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்றுவிடும் - என்றார். (ஒ-9)

# யாழ்.ஆஸ்பத்திரியில் வேலை வேண்டும்; சிங்கள மக்கள் இப்படிக் கேட்கின்றனர்

குடியேறப் போகிறோம் எனக் கூறிக்கொண்டு யாழ்ப்பாணம் வந்து தங்கியுள்ள சிங்கள மக்கள் தமக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் வேலை வாய்ப்பைப் பெற்றுத் தருமாறு வைத்தியசாலை நிர்வாகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

யாழ்.ரயில் நிலையத்தில் தங்கியுள்ள மக்களின் சார்பில், பிரதிநிதி மல்காந்தி தலைமையில் நேற்றுச் சென்ற ஒரு குழுவினர், தமது பெயர் விவரங்கள் மற்றும் கல்விச் சான்றிதழ் என்பவற்றை கொண்டு யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி பவானியிடம் சமர்ப்பித்தனர்.

இங்கு வந்துள்ள சிங்கள மக்களில் அநேகமான இளைஞர், யுவதிகள் உயர்தரக் கல்வியை நிறைவு செய்தவர்களாக உள்ளனர்.

இவர்களில் தாதிய பயிற்சியை நிறைவுசெய்த மாணவர்கள், கொழும்பு மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதியில் பிரபல தனியார் வைத்திய சாலைகளில் கடமையாற்றியவர்களும் அடங்கியுள்ளனர்.

இத்தகையவர்களுக்குத் தகுதி அடிப்படையில் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்குமாறு தாம் பணிப்பாளரிடம் கேட்டுக்கொண்டுள்ளதாக மல்காந்தி தெரிவித்தார்.

இது தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் திருமதி இ.பவானியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

''இத்தகைய பணிகளை சுகாதார அமைச்சுதான் மேற்கொள்ளும் என்று வைத்தியசாலை நிர்வாகம் அவர்களுக்கு பதிலளித்து அனுப்பியது'' என்றார் அவர். (ஒ-9)



யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், ஆளுநரின் செயலாளர் ஆர்.தங்கராஜன், வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி சாள்ஸ் ஆகியோர் கருத்துக்களைப் பகிந்துகொள்கின்றனர். (படம்: நந்தகுமார்)

## வேதனப் பட்டியலில் ஒப்பமிட ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.12

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நிரந்தரமாக கடமையாற்றி தற்காலிகமாக யாழ்.மாவட்ட கல்வி வலயங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் ஐப்பசி மாத வேதனப் பட்டியல், யாழ்.கல்வி வலய நிதிக் கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஆசிரியர்கள் யாழ். கல்வி வலயத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் வேதனப் பட்டியலில் ஒப்பமிடுமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (ஒ-16)

## ரூபா.12 லட்சத்து 85 ஆயிரம் கையாடல்:

# உணவகத்தில் பணியாற்றிய ஊழியருக்கு 6 மாத கடூழியச் சிறைத் தண்டனை

யாழ்ப்பாணம்,ஒக்.12

தான் பணிபுரிந்த உணவகத்தில் 12லட்சத்து85ஆயிரம் ரூபாவை கையாடிய ஒருவருக்கு யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா நேற்று ஆறு மாத கடூழியச் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார்.

யாழ்.மின்சார நிலைய வீதியில் உள்ள சைவ உணவகத்தில் பணியாற்றிய குறிப்பிட்ட நபர் கடையில் உள்ள பணப் பெட்டியில் இருந்து 12 லட்சத்து 85 ஆயிரம் ரூபாவைக் கையாடிய சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் கடந்த ஓகஸ்ட் மாதம் யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். நேற்று வழக்கை விசாரணை செய்த நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து ஆறுமாத கால கடூழியச் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார். (ஒ-9)

# ராஜபக்ஷாக்களுக்கே 'கொடிபிடிக்கும்' அரச சார்பு ஊடக நிறுவனங்கள்

## அமைச்சுக்களின் ஊடக செயலர்கள் 'பெருமூச்சு'

கொழும்பு, ஒக்.12

லேக்ஹவுஸ், தேசிய ரூபவாஹினிச் சேவை, சுயாதீன தொலைக்காட்சி சேவை (ஐ.ரி.என்) மற்றும் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் ஆகிய அரச ஊடக நிறுவனங்கள் ஜனாதிபதிக்கும் மேலதிகமாக அவரது குடும்ப உறவினர்களுக்கு முன்னுரிமை வழங்கிச் செயல்படுகின்றனவாம். இதனால் அமைச்சர்களின் செய்திகளை வெளிப்படுத்துவதற்கு இயலாத நிலைமை காணப்படுவதாக அமைச்சுக்களின் ஊடகச் செயலாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

ஒக்ரோபர் முதலாம் திகதியன்று தகவல் திணைக்களத்தின் கேட்போர்கூடத்தில்இடம்பெற்ற அமைச்சுக்களின் ஊடகச் செயலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறையில் வைத்து இவர்கள் வெளிப்படையாகவே மேற்படிப் 'பலவான்கள்' மீது குற்றம் சுமத்தியுள்ளனர். அந்த பயிற்சிப் பட்டறை நிகழ்வில் மேற்படி அமைச்சின் செயலாளர் டபிள்யூ.பீ.கணேகல மற்றும் அரசின் தகவல்துறைப் பணிப்பாளர் கலாநிதி ஆரியரத்ன அத்துலகலவும் சமுகமளித்திருந்ததாக பொதுசன ஊடக அமைச்சின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தேசிய ரூபவாஹினிச் சேவையின் மற்றும் லேக்ஹவுஸ் வெளியீடுகளின் தலைவர்கள், விளக்கமளிக்கையில், அமைச்சுக்களின் ஊடகச் செயலாளர்களால் வழங்கப்படும் செய்திகள் மற்றும் அறிக்கைகள் வெளிப்படுத்தும் அளவுக்குத் தரம் வாய்ந்தவைகளாக இருப்பதில்லை என்று தெரிவித்துள்ளனர்.

எவ்வாறான போதிலும், அரச ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அதிகமான ஊடகவியலாளர்கள் ராஜபக்ஷாக்களைச் சார்ந்து நின்றும், வேறும் வரப்பிரசாதங்களை எதிர்பார்த்தும் செயற்படும் நிலைப்பாட்டினுள் தம்மைப் போன்றே தமது எஜமானர்களான அமைச்சர்களும் கடும் விரக்திக்கும் அதிருப்திக்கும் உள்ளாகியிருப்பதாக அமைச்சுக்களின் ஊடகச் செயலாளர்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-22)

## கிளிநொச்சியில் இருந்து லொறி மூலம்

# மரங்களை எடுத்துச் செல்ல லஞ்சம் கோரிய இரு பொலிஸாருக்கு விளக்க மறியல்

கிளிநொச்சி, ஒக்.12

கிளிநொச்சியில் இருந்து மரங்களைக் கடத்திச்செல்ல உதவுவதாகக் கூறி லஞ்சம் கோரியதாகக் கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருவரையும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சியில் இருந்து லொறியில் மரம் எடுத்துச் செல்வதற்கு 25 ஆயிரம் ரூபா லஞ்சம் கோரியதாக கிளிநொச்சிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த முறைப்பாடு தொடர்பாக விசாரணை செய்த பொலிஸார் சந்தேகத்தில் இரு கான்ஸ்டபிள்களைக் கைது செய்து கிளிநொச்சி நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இவர்களை விசாரணை செய்த நீதிவான் இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களையும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-ஐ)

## பட்ட மேற்கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு பதிவுகள்

விசேட தேவை உடையோருக்கான பட்ட மேற்கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு விண்ணப்பித்த மாணவர்கள் பதிவுசெய்துகொள்ளுமாறு இலங்கைத் திறந்த பல்கலைக்கழக பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக பிராந்திய நிலையத்தில் இக்கற்கை நெறிக்கான பதிவுகள் நாளையும், நாளை மறுதினம் வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஒ-16)

## இடம்பெயர்ந்தவர்களுக்கு வவுனியாவில்

# ஐரோப்பிய ஒன்றிய உதவியுடன் மூவாயிரம் வீடுகள் நிர்மாணம்

கொழும்பு, ஒக்.12

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியின் கீழ் வவுனியா மாவட்டத்தில் மீள்குடியேறிய, நிரந்தர வீடுகள் அற்ற குடும்பங்களுக்கு மூவாயிரம் வீடுகளை அமைத்துக் கொடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

ஒவ்வொன்றும் தலா மூன்று லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் இந்த வீடுகளை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

வவுனியா வடக்கு, நொச்சிமோட்டை, பாலமுனை உட்பட மாவட்டத்தில் உள்ள 15 கிராம சேவகர் பிரிவுகளிலேயே இந்த வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன.

இதற்கமைய, இதுவரை 518 வீடுகளை நிர்மாணிப்பதற்கான விவரங்கள் பெறப்பட்டுள்ளன எனவும் ஏனையவர்களின் விவரங்கள் கிடைத்தவுடன் வீடுகள் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்படும் என்றும் மாவட்ட அரச அதிபர் 'உதயனு'க்குத் தெரிவித்தார். (சி)

# சன் சீ கப்பல் தமிழ் அகதிகளில் மற்றுமொருவர் தடுத்துவைப்பு

கொழும்பு, ஒக்.12

'சன் சீ' கப்பலில் சென்றவர்களில் ஒருவர் கனடாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவர் என அடையாளம் காணப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் மற்றும் ஒருவர் அந்நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளார் என தற்போது அடையாளம் காணப்பட்டிருக்கிறார்.

இவரைக் கனேடிய எல்லைப் பாதுகாப்புப் பொலிஸார் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்தான நபர் என்று பிரகடனப்படுத்தியுள்ளனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் தனது மனைவியுடன் இவர் 'சன் சீ' கப்பலில் கனடாவை வந்தடைந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இவர் மீதான விசாரணை நான் காவது தடவையாக இடம்பெற்ற போது போலிக் கடவுச் சீட்டுகளில் இவர் ஹொங்கொங்குக்கும் இலங்கைக்கும் இடையில் பயணித்தமை தெரியவந்துள்ளது.

விசாரணையின்போது இவர் இக்குற்றச்சாட்டை மறுத்திருந்தார். இறுதியில் உண்மையை ஒப்புக்கொண்டார் எனக் கனேடியப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் பற்றிய சரியான விவரங்கள் இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை எனத் தெரிவித்த கனேடிய அதிகாரிகள், இவரைத் தடுத்து வைக்க உத்தரவிட்டுள்ளனர். (சி)

# வடக்கில் தொழிற்சாலைகளை நிறுவ பிரபலமான 6 நிறுவனங்கள் முதலீடு;

## அரியாலையில் 100 கோடி ரூபா செலவில் ஆடை உற்பத்தி நிலையம்

யாழ்ப்பாணம், ஒக்.12

வட மாகாணத்தில் தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு ஆறு முன்னணி நிறுவனங்கள் ஆராய்ந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

வட மாகாணத்தில் பல கோடி ரூபா முதலீட்டில் தொழிற்சாலைகளை நிறுவுவது தொடர்பில் பின் வரும் நிறுவனங்கள் தமது ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றன.

இதன் பிரகாரம் ஒமேகாலைன் நிறுவனம் சுமார் 100 கோடி ரூபா செலவில் யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் ஆடைத் தொழிற்சாலையையும், ஹைதராமணி நிறுவனம் வவுனியா நெலுக்குளத்திலும் மாஸ்கோ நிறுவனம் ஓமந்தையிலும், ஓரிட் அபரல் நிறுவனம் செட்டிக் குளத்திலும், பிரன்டிக்ஸ் நிறுவனம் வவுனியா அல்லது மன்னார் ஆகிய இடங்களில் தமது தொழிற்சாலைகளை நிறுவுவது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றன.

இது தொடர்பாக கலந்துரையாடல் அண்மையில் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி மற்றும் இத் தொழிற்சாலை பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக ஆளுநர் தெரிவித்திருப்பதாவது:-

வட பகுதியில் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் நிறைவு பெறும் நிலையில் அப் பகுதிகளில் கைத்தொழில் துறையை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவையுள்ளது. எனவே இத்திட்டங்களுக்கு வட மாகாண சபை பத்து ஏக்கர் காணியை வழங்கியுள்ளது. இதற்கான நிர்மாணப் பணிகள் அடுத்த மாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றார்.

வட மாகாண அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணிக் குழுவின் தலைவரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷவின் ஆலோசனைப்படி முன்னெடுக்கப்படுகின்ற இந்த நடவடிக்கைகளில் அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 'ட்ரைஸ்டார் நிறுவனத்தின் ஆடைத் தொழிற்சாலைக் கட்டடத்துக்கு அடிக்கல் நடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-16)

# பொன்சேகாவுக்கே இந்த நிலை எனில் தமிழ் மக்களின் பாடு எப்படி இருக்கும்?

## கனேடிய தமிழ்க் காங்கிரஸ் பேச்சாளர் கேள்வி

டொரன்டோ, ஒக்.12

புலிகளை ஒழித்தவர் எனப் புகழப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு ராஜபக்ஷ அரசு வழங்கிய தண்டனையிலிருந்தே தமிழ் மக்களையும் எதிர்த்தரப்பினரையும் எவ்வாறு ராஜபக்ஷ அரசு நடத்துமென்பது தெளிவாகின்றது.

கனேடிய தமிழ் காங்கிரஸ் பேச்சாளர் டேவிட் பூபாலபிள்ளை இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகாவுக்கும் தனக்கும் இடையில் பிரச்சினை இருந்த போதும் அரசியல்வாதியாகத் தனக்கும் அவருக்கும் இடையில் எதுவித பிரச்சினையுமில்லை எனத் தெரிவிக்கும் டேவிட் பூபாலபிள்ளை ஜனாதிபதியும் அவரது குடும்பத்தினரும் நியமித்த இராணுவ நீதிமன்றம் வழங்கிய தண்டனை அநீதியானது எனவும் தெரிவித்தார்.

''முன்னாள் இராணுவத் தளபதிக்கே இந்த நிலை என்றால், இந்த அரசு தமிழ் மக்களையும் தமது எதிரணியினரையும் எவ்வாறு நடத்தும் என்பது இதிலிருந்தே தெளிவாகின்றது.

சரத் பொன்சேகாவுக்கு 30 மாத காலத் தண்டனை வழங்கியது அவருக்கு வாக்களித்த 45 லட்சம் மக்களையும் அவமானப்படுத்துவதாகும்'' சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பொன்சேகாவுக்கு தாம் ஆதரவு வழங்கப்போவதாக கனேடிய தமிழ்க்காங்கிரஸ் அண்மையில் அறிவித்திருந்தது எனவும் அவர் தெரிவித்தார்.(உ-சி)

# வாகனச் சாரதிகளின் பொறுப்பற்ற செயலால் யாழ்.நகரில் போக்குவரத்து நெருக்கடி

யாழ்ப்பாணம்,ஒக்.12

யாழ்.நகரின் பல இடங்களில் வாகனம் நிறுத்தத் தடை என குறிக்கப்பட்டுள்ள இடங்களில் அதிகளவு வானகங்கள் நிறுத்தப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

பொது இடங்களில் பொதுமக்கள் நலன்கருதி 'வாகனங்கள் நிறுத்தத் தடை' எனும் பெயர்ப் பலகைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

வாகனங்களை நிறுத்துவோர் இதனைக் கருத்தில் கொள்ளாமல் செயற்படுவதால் பொதுமக்கள், போக்குவரத்துச் செய்யும் பாதசாரிகள் மற்றும் வாகனங்களில் செல்வோர் சிரமங்களை எதிர்கொள்வதாகக் கூறப்படுகின்றது. (204-313)

# இந்தோனேஷிய தடுப்பு முகாமில் அவதியுறும் 254 தமிழ் அகதிகள்

கொழும்பு, ஒக்.12

இலங்கைத் தமிழ் அகதிகள் 254 பேர் கடந்த ஒரு வருட காலமாக இந்தோனேஷிய தடுப்பு முகாமில் கண்ணீருடன் அவல வாழ்க்கை வாழ்கின்றனர். இவர்களது பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

அவுஸ்திரேலியா நோக்கி கப்பலில் சென்றுகொண்டிருந்த 254 இலங்கையர்களும் கடந்த வருடம் (2009) ஒக்ரோபர் 11ஆம் திகதி இந்தோனேஷிய கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர். மெராக் துறைமுகத்தில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டனர். போதிய வசதிகளோ, மருத்துவ வசதிகளோ இல்லாத காரணத்தால் 30வயது இளைஞர் ஒருவர் மரணமானார்.

இதன் பின்னர் கடந்த ஏப்ரல் 19ஆம் திகதி இந்தோனேஷிய குடிவரவு - குடியகல்வு அதிகாரிகளும் அங்குள்ள யூ.என்.எச்.சீ.ஆர். வதிவிடப் பிரதிநிதியும் அகதிகளைச் சந்தித்து உறுதிமொழி வழங்கியதையடுத்து தன்னிச்சையாக வெளியேறியவர்கள் தவிர்ந்த ஏனையோர் 'தஞ்சோங் பினாங்' என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மெராக் துறைமுகத்திலிருந்து இவர்களை அப்புறப்படுத்திய போது 2009ஓகஸ்ட் 30ஆம் திகதிக்கு முன்னர் அனைவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அகதி அந்தஸ்து வழங்கப்படுமென யூ.என்.எச்.சீ.ஆர். அதிகாரிகள் உறுதியளித்திருந்தனர். ஆனால் அந்த உறுதிமொழி இதுவரை நிறைவேற்றப்படவில்லை. ஒரு வருடத்துக்குள் மூன்றாம் நாடொன்றில் குடியமர்த்தப்படுவர் என இந்தோனேஷிய அரசு வழங்கிய உறுதிமொழியும் நிறைவேற்றப்படவில்லை.

அங்குள்ள இலங்கை அகதிகள் தமது எதிர்காலம் குறித்து எதுவும் தெரியாத நிலையில் நடைப்பிணங்களாக அவல வாழ்க்கை நடத்துகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (சி)

# பெட்றிகாவுக்கு 'சண்டே லீடரி'ன் செய்தி ஆசிரியராக கடமையாற்றத் தகுதி இல்லையாம்

## உயர்நீதிமன்றத்தில் பொன்சேகாவின் சட்டத்தரணி

கொழும்பு, ஒக். 12

'சண்டே லீடர்' பத்திரிகையாளர் பெட்றிகா ஜோன்ஸ் பல தடவைகள் நீதிமன்றத்தால் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார். இவருக்கு செய்தி ஆசிரியராகக் கடமையாற்றும் தகுதி இல்லை - என்று சரத் பொன்சேகாவின் சட்டத்தரணி நலின் லத்துவஹெட்டி நேற்று உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பான வழக்கு நேற்று மூன்றாவது நாளாகவும் நடந்தது.

இந்த வழக்கு மேல் நீதிமன்ற பிரதம நீதிபதி தீபாலி விஜயசுந்தர தலைமையிலான எச்.என்.பி.பி. வராவெல, சர்பிக் ரஷீன் ஆகிய நீதிபதிகள் கொண்ட குழு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அரச தரப்பு சட்டத்தரணியும், சரத் பொன்சேகாவின் சட்டத்தரணியும் பெட்றிகா ஜோன்ஸிடம் கேட்ட கேள்விகளும், அளிக்கப்பட்ட பதில்களும் வருமாறு:-

**சட்டத்தரணி:-** சரத் பொன்சேகாவுடன் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் அது தொடர்பில் உம்மால் அனைத்தும் எழுதப்பட்டதா?

பெட்றிகா:- ஆம்.

**சட்டத்தரணி:-** 'சண்டே லீடர்' பத்திரிகையின் முதற்பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டவை அனைத்தும் சரத் பொன்சேகாவினால் கூறப்பட்டவையா?

பெட்றிகா:- இல்லை.

**சட்டத்தரணி:-** அதில் சிறிதும் உமது கருத்துகள் இல்லையா?

பெட்றிகா :- இல்லை.

**சட்டத்தரணி:-** அதில் கூறப்பட்டவை என்ன?

பெட்றிகா:- விடுதலைப் புலிப் போராளிகள் சரணடைய வந்தபோது, இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டனர் என செவ்வியின்போது சரத் பொன்சேகா கூறினார்.

**சட்டத்தரணி:-** அவ்வாறு யாரால் யாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என அவர் தெரிவித்தார்?

**பெட்றிகா :-** பாதுகாப்பு செயலாளரினால் மேஜர் ஜெனரல் சமிந்த சில்வாவுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என செவ்வியின்போது தெரிவித்தார்.

**சட்டத்தரணி:-** செவ்வியின் போது சரத் பொன்சேகாவினால் கூறப்பட்டவை அனைத்தும் எழுதப்பட்டுள்ளது. செவ்வியின் பின்னர் அதற்கு எதிராக மக்கள் புரட்சி ஏற்பட்டதா?

**பெட்றிகா :-** ஆம். அரசு தரப்பு மூலம் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

**சட்டத்தரணி:-** பலதரப்பட்ட சர்வதேச நாடுகளில் உள்ளவர்கள் உம்மிடம் இதுதொடர்பில் (செவ்வி) வினவினார்களா?

**பெட்றிகா :-** ஆம். பி.பி.ஸியினால் வினவப்பட்டது.

**சட்டத்தரணி:-** வேறு அமைப்புகள் வினவினவா?

**பெட்றிகா :-** ஆம். சில உள்நாட்டு ஊடகங்கள் என்னிடம் வினவின.

**சட்டத்தரணி:-** தயவுசெய்து கூறுங்கள். 2009.12.08 ஆம் திகதியன்றா பொன்சேகாவை சந்தித்தீர்கள்? அதன் பின்னர் அவரை எத்தனை தடவைகள் சந்தித்தீர்கள்? தொலைபேசி மூலமும் தொடர்புகொண்டீர்களா?

பெட்றிகா :- டிசம்பர் 12 ஆம் திகதி தொலைபேசி மூலம் அவர் என்னிடம் உரையாடினார். அதன் பின்னர் 14ஆம் திகதி அவரைச் சந்தித்தேன்.

**சட்டத்தரணி:-** அதன் பின்னர் வேறு ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அவரை தொலைபேசி ஊடாகத் தொடர்புகொண்டீர்களா?

**பெட்றிகா :-** இல்லை.

**சட்டத்தரணி:-** 2010.01.03 ஆம் திகதி நீங்கள் ஆசிரியர் தலையங்கம் ஒன்றை எழுதினீர்கள். அதாவது 'ஏ ஸ்டோரி' எனப்படும் ஓர் ஆசிரியர் தலையங்கம்.

**பெட்றிகா :-** ஆம்.

**சட்டத்தரணி:-** இந்த ஆசிரியர் தலையங்கத்தை வரைவதற்கு உங்களுக்கு ஏன் தோன்றியது.

**பெட்றிகா :-** ஜே.வி.பியினர் எனக்கும், 'சண்டே லீடர்' பத்திரிகைக்கும் எதிராகப் போராட்டங்களை நடத்தினர்.

**சட்டத்தரணி:-** 2010.01.03 ஆம் திகதி 'எ ஸ்டோரி' என்ற ஆசிரியர் தலைப்பு பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் சரத் பொன்சேகா உங்களுடன் பேசினாரா?

**பெட்றிகா :-** இல்லை.

**சட்டத்தரணி:-** அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டவை தன்னால் கூறப்பட்டவை என அவர் கூறினாரா? அல்லது அதனை அவர் கூறவில்லை என மறுத்தாரா?

**பெட்றிகா :-** இல்லை.

**சட்டத்தரணி:-** அதாவது நீங்களா அதனை வரைந்தீர்கள்?

**பெட்றிகா :-** ஆம்.

**சட்டத்தரணி:-** அந்த ஆசிரியர் தலையங்கம் தொடர்பில் சர்வதேச ஊடகங்கள் உம்மிடம் தொடர்புகொண்டார்களா?

பெட்றிகா :- இல்லை.

**சட்டத்தரணி:-** சரத் பொன்சேகாவுடன்இடம்பெற்றசெவ்வியை அடுத்து அதனை 2009.12.13 ஆம் திகதி பிரசுரித்தீர்கள். அதன் பின்னர் அது குறித்து அவரிடம் விளக்கம் கேட்டீர்கள். பின்னர் 'எஸ்டோரி' ஆசிரியர் தலையங்கத்தை பத்திரிகையில் பிரசுரித்தீர்கள். அவ்வாறு உம்மால் வரையப்பட்ட கட்டுரைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பேன் என்று சரத் பொன்சேகா உம்மிடம் கூறினாரா? இன்றுவரை.

பெட்றிகா :- இல்லை.

**சட்டத்தரணி:-** தாம் கூறப்படாதவை அதில் எழுதப்பட்டுள்ளது என அவர் உம்மிடம் தெரிவித்தாரா? அதற்கு எதிராக வழக்குத் தொடர்வேன் என்று கூறினாரா? அதற்குப் பின்னர் உம்மிடம் கதைப்பதற்கு முன் வந்தாரா?

பெட்றிகா :- இல்லை.

**பொன்சேகாவின் சட்டத்தரணி:-** உம்மால் எழுதப்பட்ட ஒரு பிழையான ஆசிரியர் தலையங்கம் அல்லது ஒரு பிழையான செய்தி வெளியிட்டப்பட்டிருக்கிறதா?

**பெட்றிகா :-** ஒருபோதும் அப்படி ஒரு குற்றம் என்மேல் சுமத்தப்பட்டிருக்கவில்லை.

**பொன்சேகாவின் சட்டத்தரணி:-** இல்லை. நான் கேட்டது, பிழையான கருத்துகளை உள்ளடக்கிய குற்றத்திற்காக நீங்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளீர்களா? அவ்வாறு இருப்பின், அந்த வழக்கு யாரால் தொடரப்பட்டது?

**பெட்றிகா :-** திலங்க சுமதிபால, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

**பொன்சேகாவின் சட்டத்தரணி:-** அது தவிர வேறு ஏதும்.

**பெட்றிகா :-** சிறுசிறு விடயங்களுக்காக, சிறு தவறுகளுக்காக உயர் நீதிமன்றில் ஆஜராகியுள்ளேன். ஆனால், அவைகளில் சில தொழில்நுட்பக் கோளாறுகளினால் நிகழ்ந்தவை.

**பொன்சேகாவின் சட்டத்தரணி:-** அதன்போது உயர் நீதிமன்றத்தில் நீங்கள் நிபந்தனையற்ற மன்னிப்பு கோரியுள்ளீர்களா?

**பெட்றிகா :-** ஆம்.

**பொன்சேகாவின் சட்டத்தரணி:-** உயர் நீதிமன்றம் நிபந்தனையற்ற மன்னிப்பு உங்களுக்கு வழங்கப்பட்டதா?

பெட்றிகா :- ஆம்.

**பொன்சேகாவின் சட்டத்தரணி:-** கல்கிஸை நீதிவான் நீதிமன்றில் உங்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதா?

பெட்றிகா :- ஆம்.

**பொன்சேகாவின் சட்டத்தரணி:-** அது. பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவினாலா?

பெட்றிகா ஜான்ஸ்:- ஆம்.

**பொன்சேகாவின் சட்டத்தரணி:-** பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் பெயருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையிலான செய்திகளைப் பிரசுரிக்க வேண்டாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதா?

பெட்றிகா :- பாதுகாப்புச் செயலாளருக்குக் களங்கத்தை ஏற்படுத்தக்கூடிய வகையிலான செய்திகள் எதுவும் நாங்கள் பிரசுரிக்கமாட்டோம்.

**பொன்சேகாவின் சட்டத்தரணி:-** அந்த உத்தரவை மீறிய சந்தர்ப்பம் உள்ளதா?

பெட்றிகா :- ஆம்.

**பொன்சேகாவின் சட்டத்தரணி:-** அப்படியானால், நீங்கள் நீதிமன்ற உத்தரவை மீறி மீண்டும் செயற்பட்டுள்ளீர்கள்.

பெட்றிகா :- அவ்வாறு நான் செயற்பட்டிருக்கவில்லை.

**பொன்சேகாவின் சட்டத்தரணி:-** அதாவது நீதிமன்ற உத்தரவை நீங்கள் மீறி, நீதிமன்றத்தை அவமதித்துள்ளீர்கள்.

**பெட்றிகா :-** அந்த வழக்கு தொடர்கிறது இன்னும் தீர்ப்பு வழங்கப்படவில்லை.

**பொன்சேகாவின் சட்டத்தரணி:-** அந்த வழக்கு அப்படியிருக்க, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தக் கூடிய செய்தியை பத்திரிகையின் முதற் பக்கத்திலேயே நீங்கள் பிரசுரித்து உள்ளீர்கள்.

உங்கள் ஊடக வாழ்க்கையை எவ்வாறு ஆரம்பித்தீர்கள்?

**பெட்றிகா :-** பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த பின்னர் ஊடகத்துறையில் பிரவேசித்தேன்.

**பொன்சேகாவின் சட்டத்தரணி:-** 1995ஆம் ஆண்டு 'சண்டே லீடர்' பத்திரிகையில் இணைந்தீர்களா?

**பெட்றிகா :-** ஆம்.

**பொன்சேகாவின் சட்டத்தரணி:-** அதன் பின்னர், அதிலிருந்து விலகி மீண்டும் 2004ஆம் ஆண்டு 'சண்டே லீடர்' பத்திரிகையில் இணைந்துள்ளீர்கள். அதற்கிடையில் வேறு ஊடகங்களில் பணி புரிந்தீர்களா?

**பெட்றிகா :-** ஆம். நான் 'இன்டர் நெஷனல் நிவாட் சேப்டி' என்ற ஊடகம் மற்றும் ஆங்கில சஞ்சிகை தயாரிப்பு ஆகியவற்றில் ஈடுபட்டேன்.

**பொன்சேகாவின் சட்டத்தரணி:-** அதன் பின்னர் உங்களால் ஒரு தனியான முயற்சி ஆரம்பிக்கப்பட்டதா?

பெட்றிகா :- ஆம். ஆங்கில சஞ்சிகை ஒன்று.

**பொன்சேகாவின் சட்டத்தரணி:-** 2004ஆம் ஆண்டில் 'சண்டே லீடர்' பத்திரிகையில் செய்தி ஆசிரியராக உங்களுக்குப் பதவி வழங்கப்பட்டது. அதன்போது செய்தி ஆசிரியர் என்ற பொறுப்பு, பக்குவம் உமக்குக் காணப்பட்டதா?

பெட்றிகா :- நான் 'சண்டே லீடர்' பத்திரிகையில் பணிபுரிந்த போது ஆசிரியர் தலையங்கம் எழுதினேன். வேறு பல அனுபவங்களும் ஊடகம் தொடர்பில் உள்ளன.

**பொன்சேகாவின் சட்டத்தரணி:-** எனினும், செய்தி ஆசிரியர் என்ற அனுபவம் உங்களுக்கு இல்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் வெற்றிடம் காணப்பட்டதாலேயே உங்களுக்கு செய்தி ஆசிரியர் பதவி வழங்கப்பட்டுள்ளது. உங்களுக்கு செய்தி ஆசிரியருக்கான பக்குவமும் அதன்போது இருக்கவில்லை. இவ்வாறு நடந்தது அந்த விசாரணை.

(உ-சி)


## பக்கவடிவமைப்பாளர்கள் பகுதிநேரப் பணிக்கு தேவை

மாலை 5 மணி முதல் 10 மணிவரை பகுதிநேரமாகப் பணியாற்றக்கூடிய பக்கவடிவமைப்பாளர்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு

திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.

Pagemaker, Photoshop, Coral Draw, Quack Xpress

எல்லாவற்றில் அல்லது சிலவற்றில் முழுமையான அனுபவம் அல்லது ஓரளவு பயிற்சி உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

இந்த மென்பொருள்களின் பயன்பாடு பற்றித் தெரியாதவர்கள் அடிப்படைக் கணனி அறிவுடன் இருப்பின் பயிற்சியாளர்களாக இணைத்துக்கொள்ளப்படுவர்.

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வசிப்போர் விரும்பத்தக்கது.

முகாமையாளர்,
உதயன் வெளியீட்டகம்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பணியின் வகையைக் குறிப்பிட்டு அனுப்பவும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த 06.10.2010 இல் நடைபெற்ற 26 ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (புவியியல்) பட்டம் பெற்ற மீசாலை வடக்கு இராமாவிலைச் சேர்ந்த

**ஐயாத்துரை புஸ்பவதனி**

அவர்களை வாழ்த்துவதோடு மேலும் பட்டங்கள் பெற்று சிறப்புற இறைவனை வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
அப்பா, அம்மா, அண்ணாமார், அண்ணிமார், அக்கா, அத்தான், மருமக்கள், பேறாமகள்.

(சி/571869)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 06.10.2010 அன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற 26ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற

**செல்வி பாக்கியதாசன் லோஜினி**
**B.A.(Hons.)**
[தமிழ் சிறப்பு .இரண்டாம் மேல் தரம்]

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று உயர ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா பாக்கியதாசன், அம்மா கலாதேவி, அண்ணா மனோராஜ், அண்ணி சோபிகா, மருமகள் தர்மிகா.

கற்கோவளம்,
பருத்தித்துறை.
(சி/571865)


## வீடுகள் தேவை

நெல்லியடி, அச்சுவேலி, பருத்தித்துறை, கொக்குவிலில், சங்கானை, சித்தன்கேணி, மூளாய், மானிப்பாய் ஆகிய பகுதிகளில் வீடுகள் தேவை.

தொடர்புக்கு : 0773627055, 0774083656

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
29 ★ 07 * 1939



மறைவு
12 * 09 * 2010

### அமரர் செல்லத்துரை யோகலிங்கம்

கடந்த 12.09.2010 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்ப ஒளி விளக்கின் 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (12.10.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து எமது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மானிப்பாய் வீதி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.
(104548)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### நாகமணி சண்முகம்



மலர்மகள் வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் தச்சந்தோப்பை வசிப்பிடமாகவும் M.S.லேன், கோண்டாவில் கிழக்கையும் தற்காலிக் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி சண்முகம் நேற்று (11.10.2010) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் பொன்மலரின் அன்புக் கணவரும் ஸ்ரீபாஸ்கரன் (ஜேர்மனி), ஸ்ரீசாந்தினி, ஸ்ரீறஞ்சினி (கைதடி ப.நோ.கூ. சங்கம்), காலஞ்சென்ற ஸ்ரீதரன் (அப்பன்) மற்றும் ஸ்ரீறஜனி ஆகியோரின் பாசமிகு தந்தையும் நவரத்தினம், துரைசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் தனுசியா (Administrative Assistant -ACCA), தனுசன், கஸ்தூரி, அனுசன், கோகுலன், கோபி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

M.S. லேன்,
கோண்டாவில் கிழக்கு.
தொ.பே : 0775383576
(104547)
தகவல் :
குடும்பத்தினர்.

## இராணுவக் காவலரண்கள் அகற்றப்பட்டன

சாவகச்சேரி தனக்கிளப்பு வீதியில் இருந்த இராணுவப் பொலிஸாரின் காவலரண்கள் உட்பட வீதியோர காவ லரண்கள் அகற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தற்சமயம் போக்குவரத்து சீராக இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

## அதிபர்களுக்கான கூட்டம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான விசேட கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட் போர் கூடத்தில் நடைபெறும் என்று பணிப்பாளர் அறிவித்துள்ளாள். (ஒ-207)

## இறுவட்டு வெளியீடு

தென்மராட்சி கல்வி வலய ஆரம் பக் கல்வி உத விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசாவினால் இசை ஆசிரியர் பொன். வாமதேவனின் இசையாக்கத்தில் உருவாக்கப்பட்ட 'வாய்ப்பாடு' இறுவட்டின் வெளி யீடு அண்மை யில் இடம்பெற்றது.

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் இடம்பெற்ற இந் நிகழ் விற்கு முதன்மை விருந்தினராக தென் மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தனும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலர் கு.சிவாணந்தமும் கலந்துகொண்டனர்.

## சுழிபுரம் பிரதேச சபையில் அபிவிருத்தி தொடர்பான முக்கிய கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஒக்.12

உள்ளூர் அபிவிருத்தித் திட்டம் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் இன்று முற்பகல் 10 மணிக்கு வலி.மேற்கு சுழிபுரம் பிரதேச சபையில் இடம்பெறவுள்ளது.

பிரதேச சபைச் செயலாளர் எஸ்.புத்திசிகாமணி தலைமையில் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடலில் பிரதம அதிதியாக ஜி.ரி.இசற் நிறுவன உள்ளூராட்சி நிபுணர் பெற்றர் நவ்ராட், சிறப்பு அதிதியாக சுன்னாகம் பிரதேச சபைச் செயலாளர் திருமதி சுலோசனா முருகநேசனும் கலந்துகொள்வார்கள்.

யாழ்.மாவட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட உள்ளூர் அபிவிருத்தித் திட்டம் [ILDP] எனும் கருப்பொருளிலான அபிவிருத்திக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளில் வலி.மேற்கு சுழிபுரம் பிரதேச சபையும் ஒன்றாகும்.

எனவே இக் கூட்டத்தில் வலி.மேற்கு பிரதேச சகல சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள், ஆலோசனைச் சபை உறுப்பினர்கள், 'கிராம அபிவிருத்திச் சங்க தலைவர்கள், செயலாளர்கள், பொது அமைப்புக்கள், 'நெல்சி' கொத்தணி உறுப்பினர்கள் மற்றும் கிராமிய மட்ட உறுப்பினர்களை கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (16-302)

## தேவை

யாழ்.நகருக்கு அண்மையில் இயங்கும் விருந்தினர் விடுதி ஒன்றுக்கு ஆங்கில அறிவுடன் கூடிய வரவேற்பாளர் தேவை. இருபாலாரும் விரும்பத்தக்கது.

தொ.பே.: 021 222 1989

## காணி தேவை

யாழ்.நகரில் அல்லது யாழ்.நகரில் இருந்து 10 K.M சுற்று வட்டாரத்தில் வெற்றுக் காணி குத்தகைக்குத் தேவை. யாழ்.பிரதன வீதி, பலாலி வீதி, கே.கே.எஸ். வீதி ஆகியவற்றில் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:S.S.லக்ஷன்,
T.P.0774155897, 0777278132

## Great Way & Great Achievement

சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட எமது World Wide நிறுவனத்தில் O/L, A/L சித்திபெற்ற துடிப்புள்ள இளைஞர், யுவதிகளுக்குச் சர்வதேசத்திலும், உள்நாட்டிலும் தொழிற்பயிற்சியைப் பெற்று உயர் தொழில் வாய்ப்பைப் பெற ஓர் அரிய வாய்ப்பு. சம்பளம் தகைமை அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

*Contact :-* Udayarajan,
0717494735, 0214915550

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக்கழகத்தில்கடந்த 06.10.2010 இல்பட்டங்கள் பெற்ற



தர்மிலா சிவானந்தம்
B.Sc. (Hons) 1st Class



சிவானந்தம் சதீசன்
B.A.(Hons)

ஆகியோரை மனதார வாழ்த்துவதுடன் மேன்மேலும் பட்டங்கள் பெற்று சிறப்புற மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையாரின் ஆசிவேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

(சி/571868) இ.கோகிலன், அபிஷா ரெக்ஸ், சாவகச்சேரி.

## ஆசிரியைகள் தேவை

புலோலி சிறுவர் கிராமத்தில் உள்ள குழந்தைகளுக்கு வார இறுதி நாள்களிலும் விடுமுறை நாள்களிலும் நடனம், சங்கீதம், மிருதங்கம், வயலின் ஆகிய பாடங்கள் கற்பிப்பதற்கு ஆசிரியைகள் தேவை.

தொடர்புகளுக்கு: 0773627055, 0774083656

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவனும் கருணாகரன் - சரோஜாதேவி தம்பதியரின் செல்வப் புதல்வனுமான



**க.கானப்பிரியன்**

2010ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரீட்சையில் 150 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமையையிட்டு மகிழ்ச்சி அடைவதுடன் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
தாத்தா (அரியதுரை),
பெரியமாமா, சின்னமாமா,
பெரியம்மா குடும்பம்,
பெரியக்கா குடும்பம்,
சின்னக்கா குடும்பம்.

வேலப்பர் லேன்,
அரியாலை.
(104544)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவனும் சௌந்தரராஜன் - சுமதி தம்பதியரின் புதல்வனுமாகிய செல்வன்

**லிதுஷன் [Lithushan]**

இவ்வருடம் (2010) நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 165 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார். இவரை பல்கலையும் கற்று வளமோடு வாழ்கவென வாழ்த்துவோர் :

அன்பு அப்பா, அம்மா, தம்பி - சேனுஷன், பாட்டி, பெரியப்பாமார், பெரியம்மாமார், இளங்கோ மாமா, பத்மினி அத்தை, விக்னா மாமா குடும்பத்தினர்.

பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு.
(104602)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

குடத்தனை G.T.M.S அதிபரும் எமது நண்பனும், உறவினருமான

**திரு. சதானந்தன் செல்வானந்தன்**
**[B.A. Dip in Ed, Sp Tri (Pri) S.L.P.S 2-II, M.Ed]**



அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் 06.10.2010இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கல்வியியல் முதுமாணி M.Ed பட்டம் பெற்றதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைவதுடன் அவர் மேலும் பல பட்டங்களும் பதவிகளும் பெற இறைவனை வேண்டி நிற்கிறோம்.

வாழ்த்துவோர் :
D.M.வேதாபரணம் குடும்பம்,
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)
நா. ரகு குடும்பம்.
(திரு வீடியோ விஷன்)

(சி/571862)

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## வடக்குக்கு மகாவலித் தண்ணீர்

மகாவலி கங்கை நீரை, கிளிநொச்சியில் உள்ள இரணைமடுக் குளத்துக்குக் கொண்டு வருவது குறித்த தகவலொன்று அரசாங்கத் தரப்பில் இருந்து வெளிப்பட்டு உள்ளது. மகாவலித் தண்ணீர், அநுராதபுர மாவட்டத்தில் உள்ள மொறகஸ்கந்த நீர்த்தேக்கத்தில் தேக்கப்படுகிறது. அங்கிருந்து போதிய அளவு தண்ணீரை இரணைமடுவுக்குக் கொண்டு வர முடியும் என்று நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவத் துறைப் பிரதி அமைச்சர் எச்.எம்.சந்திரசேன அறிவித்திருக்கிறார்.

இரணைமடுக்குளத்துக்குத் தண்ணீர் வந்து சேரும் நீரோடைகள் பலவும் சேதமடைந்து உள்ளன. அவை ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் சீரமைக்கப்படும். அதன் பின்னர் மகாவலி நீர் மொறகஸ்கந்த நீர்த்தேக்கத்தில் இருந்து இரணைமடுக் குளத்துக்குக் கொண்டுவரப்படும்.

அண்மையில் இரணைமடுக் குளப் பகுதியைச் சேர்ந்த தண்ணீர் வாய்க்கால்களைப் பார்வையிட்ட பின்னர் பிரதி அமைச்சர் சந்திரசேன வெளியிட்ட தகவல் இது.

இரணைமடுத் தண்ணீரை யாழ்ப்பாண மாவட்டத்துக்குக் கொண்டுவருவதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் மகாவலி நீரை இரணைமடுவுக்குக் கொண்டு வரும் திட்டம் குறித்து அறிவிக்கப்பட்டிருப்பது இனிப்பான செய்தியே.

உலக வங்கி நிதியுதவியுடன் இரணைமடு நீரை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரும் திட்டம் ஜனாதிபதியால் அங்கீகரிக்கப்பட்டு அதற்கான ஆரம்ப கட்டப் பணிகளைத் தொடங்குவதற்கென யாழ்ப்பாணத்தில் ஓர் அலுவலகமும் இயங்கத் தொடங்கிவிட்டது.

மேற்கூறியவை தமிழ் மக்களின் வாழ்வியல் நலன் கருதி அரசாங்கம் செய்ய உள்ளவை. அதனால் தமிழ் மக்கள் அவற்றை வரவேற்று மகிழ்ச்சியும் கொள்ள வேண்டும்.

ஆனால் -

மகாவலி கங்கையில் இருந்து மொறகஸ்கந்தவுக்கும், அங்கிருந்து இரணைமடுவுக்கும் தண்ணீரைக் கொண்டு வந்து வடக்கின் விவசாய உற்பத்தியைப் பெருக்கி, வளம் சேர்ப்பது என்ற போர்வையில் தமிழ் மக்களின் நிலம் பறிபோகும் ஆபத்து உண்டு என்பதனைப் பலரும் சுட்டிக் காட்டுகிறார்கள்.

கிழக்கில் கல்லோயாத் திட்டம் குறித்த நினைவு, அது தமிழ்மக்களுக்கு இழைத்த பாதிப்பை எடைபோட்டு இரணை மடு அபிவிருத்தியும் அவ்வாறு நேர்ந்துவிடும் என்ற அச்சம் இயல்பாகவே எழுகிறது. அந்தப் பயம் நியாய மானது; நிச்சயம் எழ வேண்டியதும் ஆகும்.

கல்லோயா நீர்ப்பாசனத் திட்டம் தமிழர் பிரதேசங்களைப் பறித்து முற்று முழுதான சிங்களக் குடியேற்றம் நடத்தி திகாமடுல்ல (அம்பாறை) என்ற புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டது தமிழ் மக்களின் மனங்களில் இன்றும் கனலாக எரிந்து கொண்டிருக்கிறது.

அம்பாறை திகாமடுல்ல ஆக மாறி அது ஒரு தனி மாவட்டமாக ஆக்கப்பட்டதோடு தமிழர்களின் நிலப் பறிப்பு நின்றதா? இல்லையே! போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்று முழங்கிய ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கிழக்கில் எல்லைப் பகுதிகளில் தமிழர் பிரதேசங்களைத் தட்டிப் பறித்தார் - மகாவலி அபிவிருத்தி என்ற பெயரில்!

அந்த எல்லைப் பிரதேசத்தில் அரசுக்கு உள்ள அதிகாரத்தைக் கையில் எடுத்து சிங்களக் குடியேற்றங்களை நடத்தி மணலாறுப் பிரதேசம் வெலிஓயாவாக மாற்றப்பட்டது.

வடக்கும் கிழக்கும் இணைந்து தமிழ்ப் பிரதேசம், மாநிலம் என்று எதுவும் இருக்க இடம் தரக்கூடாது என்ற வஞ்சகப் புத்தியுடன் அரச செலவில் சிங்கள மக்களைக் குடியேற்றி மணலாறு என்ற தமிழர் பிரதேசத்தை வெலிஓயா என்று பெயரிட்டுத் துண்டாடினார் ஜே.ஆர்.

மகாவலி நீரை வடக்கே கொண்டு வர வேண்டும் என்று தமிழர்கள் விரும்பிய காலத்தில், சிங்கள - தமிழ் மக்கள், தனிச்சிங்களச் சட்டத்தால் பிளவுறுவதற்கு முந்திய காலப்பகுதியில், அது குறித்து அக்கறை காட்டாத சிங்களத் தலைவர்களின் வாரிசுகள் இப்போது மகாவலியை வடக்கே கொண்டுவர மனம் வைத்திருக்கிறார்கள் என்றால் -

அதிலும் உட்சூட்சுமம் இருக்கும் என்ற அச்சம் தமிழர்கள் மத்தியில் எழுவதைத் தடுக்க முடியாதே.

அந்த வகையில், மகாவலியை வடக்கே கொண்டு வந்து வடமாகாணத்தை கிழக்கு, மேற்காகப் பிரித்து நடுவில் சிங்கள மக்களைக் குடியேற்றி தமிழர்கள் தமக்குத் தொடர் நிலப்பரப்பு எதனையும் கொண்டிராமல் தடுக்கும் உத்தியே வடக்குக்கு மகாவலித் தண்ணீர் என்ற வர்ணம் பூசப்பட்ட திட்டத்தின் உள்ளாந்தரம். இந்தச் சதித்திட்டம் அறிந்து இப்பகுதி மக்கள் அஞ்சுகிறார்கள்.

முந்திய அனுபவங்கள் இந்த அச்சத்தை தமிழர்களுக்கு ஏற்படுத்துவது எந்த வகை விந்தையும் அல்ல. விரோத எண்ணமும் அல்ல.

இந்த அரசாங்கத்தின் அடுத்த ஆறு ஆண்டு கால ஆட்சிக் காலத்துக்குள், வடக்கின் தொடர்ச்சியான நிலப்பரப்பைத் துண்டு போடுவது தமிழர்களுக்குப் பாதிப்புத் தரக்கூடியதல்ல என்று சொல்லப்படுமானால் அதனைப் போன்ற சுத்த அபத்தம் எதுவும் இருக்க முடியாதே!

# தேசிய புலனாய்வுச் சேவை ஒன்றை விரைவில் உருவாக்க அரசு திட்டம்

## சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்துக்கு

கொழும்பு,ஒக்.12

இலங்கையின் தேசிய பாதுகாப்பு தொடர்பாக தேசிய புலனாய்வுச் சேவையொன்றைப் புதிதாக ஏற்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

உலகின் ஏனைய நாடுகளில் செயற்படுவதைப் போன்று குடிசார் இலட்சணங்களை அடிப்படையாகக் கொண்டு ஒருங்கிணைந்த சேவையாக இது அமையவுள்ளதோடு நாடாளுமன்றச் சட்டமொன்றின் மூலம் நிலையான மற்றும் தொழில்சார் தேசிய புலனாய்வுச் சேவையாக இதை உருவாக்குவதே அரசின் எதிர்பார்பாக உள்ளது.

உள்ளக மற்றும் பரந்துபட்ட ரீதியில் செயற்படும் பிரிவுகளை உள்ளடக்கும் இலங்கையில் பிரதான புலனாய்வு அமைப்பாக உருவாக்கப்படவுள்ள இச்சேவை அரசின் நேரடி நிர்வாக மற்றும் கண்காணிப்பின் கீழ் செயற்படவுள்ளது.

தேசியப் பாதுகாப்பை செயற்றிறன் மிக்கதாகவும் விரிவாகவும் செயற்படவைப்பதற்காகவும் பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்து பெறப்பட்ட சமாதானம் மற்றும் நிலையான தன்மையை பேணிக் காத்துக்கொள்வதற்காகவும் புதிய புலனாய்வுச் சேவை உருவாக்கப்படவுள்ளதாக அரசின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், பாதுகாப்பு அமைச்சின் கீழ் நிறுவப்படவுள்ள தேசிய புலனாய்வுச் சேவை துரித கதியில் உருவாக்கப்படவுள்ளதோடு வெகுவிரைவில் அது தொடர்பான சட்டமூலத்தை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

மேற்படி புலனாய்வுச் சேவை தொடர்பான சட்டமூலத்தை தயாரிப்பது தொடர்பான அனுமதியைப் பெறுவதற்கு அரச பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்கனவே அமைச்சரவைப் பத்திரமொன்றை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-22)

# 30 வருடங்களின் பின்னர் மூவின மக்களும் யாழ்ப்பாணத்தில் ஒன்றாக வாழக் கூடிய சூழல்

## வயாவிளான் ம.வி.நிகழ்வில் கேணல் ஜெயசுந்தர

யாழ்ப்பாணம்,ஒக்.12

30 வருடகால யுத்தத்தின் பின்னர் நாம் இப்போது ஒரு முக்கிய கட்டத்துக்கு வந்துள்ளோம். மூவின மக்களும் இன ஐக்கியத்துடன் வாழக் கூடிய சூழல் இப்போது யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டு மக்கள் கல்வி மற்றும் விளையாட்டுத்துறைக்கு முக்கிய இடம் கொடுப்பவர்கள். அதை உணர்ந்து பாதுகாப்புப் படையினர் அந்தத் துறைகளை வளர்த்தெடுப்பதற்குத் தமது பங்களிப்புகளை தொடர்ந்தும் வழங்குவார்கள்.

இவ்வாறு தெரிவித்தார் 515ஆவது படைப்பிரிவின் இராணுவக் கட்டளைத் தளபதி கேணல் ஜெயசுந்தர.

20 வருடங்களின் பின்னர் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் கல்விச் செயற்பாடுகள் சொந்த இடத்தில் நேற்று திங்கள் கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே தளபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.குடாநாட்டு மக்கள் கல்வித் துறைக்கும் விளையாட்டுத்துறைக்கும் அதிக முக்கியம் கொடுப்பவர்கள் என்பது எமக்குத் தெரியும்.

கடந்த யுத்தத்தின் போது மக்கள் இடம்பெயரவேண்டி ஏற்பட்டது. கல்விச் செயற்பாடுகள் பாதிப்படைந்தன. கல்விச்சாலைகள் சேதமடைந்தன.

இந்தப் பாடசாலை கடந்த வாரம் கல்விச் செயற்பாடுகளுக்காக பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது. உடனடியாக கல்விச் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி உறுதியுரை அளித்திருந்தார். அதனை இன்று நிறைவேற்றிக் கொடுத்துள்ளார்.

சேதமடைந்துள்ள வகுப்பறைக் கட்டத் தொகுதியை புனரமைத்து தருவதற்கும் இராணுவத்தினர் தயாராக இருக்கின்றனர். இந்தப் பாடசாலையின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்க பாதுகாப்புப் படையினர் தயாராக உள்ளனர் - என்றார். (த-14)

# பெரும் எண்ணிக்கையான அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள நாடு இலங்கையே

## சர்வதேச சட்டத்தரணிகள் ஆணைக்குழு அறிக்கை

கொழும்பு,ஒக்.12

குற்றச்சாட்டுகளை முன்வைக்காமல் எந்தவொரு வழக்கையும் தாக்கல் செய்யாமல் ஓராண்டுக்கு மேலாக பெரும் எண்ணிக்கையில் அரசியல் கைதிகளைத் தடுத்து வைத்துள்ள ஒரே நாடு இலங்கையே என சர்வதேச சட்டத்தரணிகள் ஆணைக் குழுவின் பிந்திய அறிக்கை தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கைக்கு அமைய 8 ஆயிரம் வரையிலான அரசியல் கைதிகள் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் இவர்கள் தொடர்பாக எந்தவொரு சட்ட ரீதியிலான அடிப்படையும் இல்லை. அத்துடன் இவர்களை நீதிமன்றம் முன் நிறுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இது தொடர்பாக ஆணைக் குழுவின் உறுப்பினர் கலாநிதி குமார் டேவிட் தெரிவிக்கையில் -

இவர்கள் சம்பந்தமாக அரசு தெளிவாகத் தெரியக் கூடிய எந்தவொரு அணுகுமுறையையும் பின்பற்றாது இருக்கிறது. இந்தச் சிறைக்கைதிகள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் மற்றும் அவர்களின் பெயர் விவரங்களை அரசு வெளிப்படுத்த வேண்டியுள்ளது. அவர்களின் பொறுப்பாளிகளுக்கோ அல்லது பெற்றோருக்கோ இது தொடர்பாக அரசு தெரியப்படுத்த வேண்டும் - என்றார் அவர். (த-22)

## ஊழியர் சேமலாபநிதி பதிவுகள் மீளாய்வு

கொழும்பு,ஒக்.12

ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றில் உறுப்பினர்களாகவுள்ளவர்களின் பதிவுகள் யாவும் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

இந்தப் பதிவுகளில் தேசிய அடையாள அட்டையின் இலக்கங்கள் எதிர்வரும் காலங்களில் உள்ளடக்கப்படவுள்ளன. இந்த மீள்பதிவு நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பமாகவிருப்பதாக தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள பதிவுகளால் உறுப்பினர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதால் இந்தப் புதிய நடைமுறை அமுலுக்கு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 27 | 13.10.2010 புதன்கிழமை |
| திதி: | : ஷஷ்டி மாலை 06.04 வரை |
| நட்சத்திரம் | : மூலம் பி.இ. 04.38 வரை |
| சுபநேரம் | : 04.32-06.02 வரை |
| ராகுகாலம் | : 12.02-01.32 வரை |

ஷஷ்டி விரதம்

## அரச ஊழியர்கள், படையினர் இனி 60 வயதுடன் 'அவுட்'

கொழும்பு,ஒக்.12

பாதுகாப்புப் படையினர், பொலிஸார் உட்பட அரச ஊழியர்களுக்கு இனிமேல் 60 வயதுக்குமேல் சேவை நீடிப்பு வழங்கப்படமாட்டாதெனத் தெரிவித்திருக்கின்றார் பொது நிர்வாக அமைச்சர் ஜோன் செனிவிரத்தின.

இதன் பிரகாரம் இந்த வருடம் தமது 60 வயதைப் பூர்த்தி செய்யும் 12,000 அரச ஊழியர்கள் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்குப் பின்னர் தமது சேவையில் தொடர முடியாது போகும். தற்போது வருடாந்தம் 2000 அரச உத்தியோகத்தர்கள் தமது 60 வயதுக்குப் பிந்திய சேவை நீடிப்பினைப் பெற்று வருகிறார்கள். இவர்களில் அநேகமானவர்கள் உயர் பதவிகளை வகிப்பவர்கள்.

தற்போதைய புதிய விதிமுறைகளின் பிரகாரம் அரச ஊழியர் ஒருவர் தம்மால் பாவிக்கப்படாமல் உள்ள விடுமுறையைப் பயன்படுத்தி 60 வயதுக்குமேல் சேவை நீடிப்பைப் பெறமுடியாதென்றும் அவர் மேலும் தெரிவித்தார். தற்போது அரச ஊழியர்கள் தமது பாவிக்கப்படாமலுள்ள விடுமுறையை 60 வயதுக்குமேல் கடமையாற்றுவதற்கு உபயோகிக்கின்றனர்.

தற்போதைய இந்த நடவடிக்கையின் முக்கிய நோக்கம், இளம் தலைமுறையினர் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்காகவும், கனிஷ்ட உத்தியோகத்தர்கள் பதவியுயர்வினைப் பெற்றுக் கொள்வதற்காகவும் எனவும் அமைச்சர் மேலும் கூறினார்.

தற்போது சிரேஷ்ட அரச ஊழியர்கள் 60 வயதுக்கு மேல் கடமையாற்றுவதால் பல கனிஷ்ட உத்தியோகத்தர்கள் தமது பதவியுயர்வுகளைப் பெற முடியாமல் விரக்தியில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## மலிவு விற்பனை

நவராத்திரி பூசைக்குரிய சகல பொருள்களும் விசேட விலைக் கழிவுடன் விற்பனை யாகிக் கொண்டு இருக்கின்றன.

தொடர்புகளுக்கு
சிவகணேஸ் களஞ்சியம்
163, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0773369540


# 'பனை நிழல்' ஓய்வு விடுதி அரச ஆதரவாளர் பாவனைக்கு

கொழும்பு,ஒக். 12

தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்தைத் தரிசிக்க வரும் பொதுமக்கள் மற்றும் இராணுவச் சிப்பாய்களின் உறவினர்கள், நண்பர்கள் தங்கிச் செல்வதற்காக இலங்கை இராணுவத்தால் நிர்மாணிக்கப்பட்ட 'தல்செவன' (பனை நிழல்) ஓய்வு விடுதி பலாலி யில் கடந்த 02 ஆம் திகதியன்று திறந்துவைக்கப்பட்டது.

எனினும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் இந்த விடுதி எதிர்வரும் நவம்பர் மாதம் 03 ஆம் திகதி வரை அரசின் அரசியல் ஆதரவாளரான திரைப்பட இயக்குநர் சஞ்ஜயலீலாரத்னவுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சொகுசு வசதிகள் கொண்ட 09 அறைகளும், சாதாரண வசதிகொண்ட 22 அறைக ளையும் உள்ளடக்கியுள்ள இந்த விடுதி அதியுயர் பாதுகாப்பு வலயமான பலாலியில் நிறுவப்பட்டுள்ளதோடு, அறையொன்றுக்கு 2 ஆயிரம் ரூபா முதல் 3 ஆயிரம் ரூபா வாடகை அறவிடப்படுகின்றது. இங்கு பொதுமக்களும் தங்கிச் செல்ல முடியுமென இலங்கை இராணுவத்தின் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

மேலும், மேற்படி திரைப்பட இயக்குநர் பாதுகாப்பு அமைச் சின் அனுமதியுடன் தமது தனிப்பட்ட தேவைக்காக இதனைப் பயன்படுத்தி வருவதாகவும், முற்றிலும் இராணுவத்தின் நிதிவளத் தினைக் கொண்டே இந்த விடுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் மேஜர் ஜெனரல் உபய மெதவல கொழும்பின் சிங்கள ஊடக மொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (த-22)


## தேவை

கிளிநொச்சியிலியங்கும் பிரபல உழவு இயந்திர கம்பனியொன்றுக்கு Motor Mechanism தெரிந்த, அனுபவமுள்ள ஆள்கள் தேவை.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப் படும்.

தொடர்பு:-021-228 5376
077-791 7813
(சி/571555)

## விற்பனைக்கு

புதிய சோப்பிங் பாக் தயாரிக்கும் மெஷின் விற்பனைக்குண்டு.
தொடர்பு:-இல.400 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021 222 6634 077 873 6561

## கடை வாடகைக்கு விடப்படும்

இல.8B (40), ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் கடை வாடகைக்கு விடப்படும்.
(104533) தொடர்பு: 0770761177.

## பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை திருத்தல திருக்காட்சி பெருவிழா

திருக்காட்சிப் பெருவிழா நாளை13.10.2010 புதன்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறும். பிற்பகல் 4.30 மணிக்கு திருப்பலி இடம்பெறும்.

பரிபாலகர். (சி/571846)

## Restaurants க்கு வேலையாள் உடன் தேவை.

எமது விருந்தகத்திற்கு சமையலாளர்கள், சமையல் உதவி யாளர் மற்றும் உணவு பரிமாறுபவர் உடன் தேவை.(ஆண், பெண் இருபாலாரும்) நேரில் வரவும்.

T.P 0212220288
0779849942

தொடர்பு: 26,பிறவுண் வீதி,
(ரெக்னிக்கல் கொலிச் முன்பாக),
கலட்டிச்சந்தி.


# குருநகரில் இன்று உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.12

குருநகர் ஜேம்ஸ் மீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் றொக்றொசாந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக உள்ளுர் அணிகளுக்கடையிலான 9 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொட ரின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3 மணி யளவில் குருநகர் விளையாட்டு மைதானத் தில் இடம்பெறவுள்ளது.

முதல் மூன்றாம் இடத்திற்கான ஆட்டத் தில் சிக்ஸ்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென் பீற்றர்ஸ் அணி எதிர்த்து மோதவுள்ளது இறுதியாட்டத்தில் அருள் மாதா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ஒ-23)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2010 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 176 புள்ளிகளைப் பெற்று மாவட்ட நிலையில் 21ஆவது இடத்தையும் பாடசாலையில் 3ஆவது இடத்தையும் பெற்ற யா/ உடுவில் மகளிர் கல்லூரி மாணவனும் திரு.திருமதி குணபாலசிங்கம் சந்திரகாந்தா தம்பதியினரின் கனிஷ்டபுத்திரனுமாகிய

**செல்வன் குணபாலசிங்கம் துவாரகன்** அவர்கள்

மேன் மேலும் பலசிறப்புக்களைப் பெற்று வாழ கருணாகரப்பிள்ளையாரின் அருளை வேண்டி நிற்கின்றோம். மேலும் இவருக்கு கல்வி பயில்வித்த ஆசிரியர்களான ஆசிரியை திருமதி திலகவதி சண்முகம் அவர்களுக்கும், ஆசிரியர் திரு.அன்பழகன் (அன்பொளி கல்விநிலையம்) அவர்களுக்கும் எமது நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்: அம்மா, அப்பா, அண்ணாமார் அக்கா.

ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**செல்வி சர்விகா அண்ணாமலை**
(அனுசன்)

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி தரம் 5 புலமைப்பரீட்சை 2010 இல் 176 புள்ளிகளை பெற்று யாழ்மாவட்டத்தி ல் 21ஆம் இடத்தினையும் பாடசாலை மட்டத்தில் முதலாம் இடத்தினையும் பெற்றதையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம். இவருக்கு கற்பித்த பாடசா லை அதிபர், ஆசிரியர் திருமதி கண்ணதாசன் அவர்களையும் தனியார் கல்விநிலைய ஆசிரியர்களான சி.மதியழகன் [இந்திராஜா] அவர்களையும் பாராட்டுகின்றோம்.

பாராட்டுவோர் :
பெரியம்மா கவிதா குடும்பம் (சுவிஸ்),பெரியமாமா கலையரசன்குடும்பம் (ஜேர்மனி),அன்ரா கலைச்செல்வி குடும்பம் (சுவீடன்), குட்டிமாமா கலையழகன் (ஜேர்மனி), அத்தை குடும்பம்(குமார், வதனி), அம்மா, தாத்தா, அம்மம்மா, அப்பம்மா.

நாவற்குழி கிழக்கு,
தச்சன்தோப்பு, கைதடி. (104537)


# பட்டச் சான்றிதழை பெறுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக்.12

கடந்த 2010 மார்ச் 26, 27, 28 ஆம் திகதிகளில் நடைபெற்ற யாழ்.பல்கலைக் கழக பட்டமளிப்பு வைபவத்தில் பட் டம் பெற்ற உயர் பட்டப்படிப்புகள் பீட மாணவர்கள் தமக்குரிய சான்றி தழ்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன் உயர் பட்டப் படிப்புகள் பீடத்தில் கடமை நாள்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை பெற்றுக்கொள் ளுமாறு பட்டப் பின் படிப்புகள் பீடாதிபதி பேரா சிரியர் ச. சத்திய சீலன் கேட்டுள் ளார். (ஐ)

## ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 167 | சீட்டிழுப்புத் திகதி 10.10.2010

வெற்றி இலக்கங்கள்: 14 27 55 58 | சுப்பர் இலக்கம்: 11

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 6,092,180/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 1 இலக்கத்துக்கும் | 90425 | ரூ. 20/= | ரூ. 1,808,500/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 1 இலக்கத்துக்கும் | 8029 | ரூ. 40/= | ரூ. 321,160/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 2 இலக்கங்களுக்கும் | 6988 | ரூ. 100/= | ரூ. 698,800/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 2 இலக்கங்களுக்கும் | 661 | ரூ. 200/= | ரூ. 132,200/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 3 இலக்கங்களுக்கும் | 160 | ரூ. 1,500/= | ரூ. 240,000/= |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 3 இலக்கங்களுக்கும் | 15 | ரூ. 3,000/= | ரூ. 45,000/= |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 4 இலக்கங்களுக்கும் | - | ரூ. 1,000,000/= | |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ. 6,092,180/= | |
| மொத்த எண்ணிக்கை | 106278 | | ரூ. 3,245,660/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 6,366,560/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

அபிவிருத்தி லொத்தர் சபை

Website: www.dlb.lk





## உயர்திரு. C.A.மோகன்ராஸ்

**(மேலதிக அரசாங்க அதிபர், முல்லைத்தீவு)**

ஏற்றுக்கொண்ட பதவிக்கெல்லாம்
பெருமைகள் தந்தீர்
நலிவுற்ற மக்கள் எல்லாம்
தலைநிமிர்ந்திடச் செய்தீர்
போற்றுதல்கள் எல்லாம் கைகூடி
பதவி, புகழ் பெறுகின்றீர்
முல்லை மக்களின் வாழ்வுயர
எல்லையிலா சேவைகள் செய்திடுவீர்
மேன்மேலும் பதவி உயர்வுகள் பெற்றிடவே
ஆண்டவனின் அருளாசி வேண்டுகிறோம்

வலி.கிழக்கு-கோப்பாய்
பிரதேச செயலக, நண்பர்கள்.

(சி-571852)


## மஹஜன சம்பத — அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2303 | திகதி 10.10.2010

வெற்றி எழுத்து: N | வெற்றி எண்கள்: 3 8 7 2 3 6

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| பரிசு | எழுத்து/எண்கள் | பரிசுத் தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | N 3 8 7 2 3 6 | ரூபா. 10,199,924/= | பரிசு - |
| 1ம் பரிசுகள் | 3 8 7 2 3 6 | ரூபா. 20,00,000/= | பரிசுகள் 01 |
| 2ம் பரிசுகள் | 8 7 2 3 6 | ரூபா. 100,000/= | பரிசுகள் 06 |
| 3ம் பரிசுகள் | 7 2 3 6 | ரூபா. 10,000/= | பரிசுகள் 75 |
| 4ம் பரிசுகள் | 2 3 6 | ரூபா. 1,000/= | பரிசுகள் 733 |
| 5ம் பரிசுகள் | 3 6 | ரூபா. 100/= | பரிசுகள் 7220 |
| 6ம் பரிசுகள் | 6 | ரூபா. 20/= | பரிசுகள் 71527 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| பரிசு | எழுத்து/எண்கள் | பரிசுத் தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | 3 8 7 2 3 | ரூபா. 10,000/= | பரிசுகள் 06 |
| 8ம் பரிசுகள் | 3 8 7 2 | ரூபா. 1,000/= | பரிசுகள் 70 |
| 9ம் பரிசுகள் | 3 8 7 | ரூபா. 100/= | பரிசுகள் 714 |
| 10ம் பரிசுகள் | 3 8 | ரூபா. 50/= | பரிசுகள் 7226 |
| 11ம் பரிசுகள் | N | ரூபா. 20/= | பரிசுகள் 28635 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 10,449,889.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 7,370,940.00

தேசிய லொத்தர் சபை

முடிவுகளை அறிய www.nlb.lk

# இலகு வேலைக்கான உணவுப் பொருளில் மோசடி! அச்சுவேலியில் கிளை முகாமையாளர் பணி நீக்கம்

அச்சுவேலி,ஒக்.12

இலகு வேலைக்கான உணவுப் பொருள் விநியோகத்தில் மோசடியில் ஈடுபட்டவர்களின் நீண்டநாள் செயற்பாடுகள் தற்போது அம்பலத்துக்கு வந்துள்ளன. இதனையடுத்து அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 20 ஆம் இலக்க அச்சுவேலி தெற்கு கலட்டிக் கிளையின் முகாமையாளர் பணியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இலகு வேலைக்கான உணவுப் பொருள்களை குறிப்பிட்ட சிலருக்கு விநியோகிக்காமல் கையாடி வந்தவர்களின் செயற்பாடு பகிரங்கமாகியதையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் கையாடப்பட்ட அரிசி மூடைகள் குறித்த பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு அருகில் உள்ள தனியார் வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக உலக உணவுத்திட்ட அதிகாரி குழு மற்றும் யாழ். மாவட்ட செயலக அதிகாரிகள் குழு நேரடியாகச் சம்பந்தப்பட்ட இடத்துக்கு விஜயம் செய்து விசாரணைகளை மேற் கொண்டது. இது தொடர்பான விவரமான அறிக்கை யாழ். அரசாங்க அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிராம சேவையாளர் பிரிவு மட்டத்தில் இலகு வேலையை மேற்பார்வை செய்த இடைத்தரகர்களுடன் ஒத்துழைத்து உணவுப் பொருள்களை கடத்துவதற்கு உடந்தையாக இருந்த அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அச்சுவேலி தெற்கு கலட்டிக்கிளை இல. 20 இன் முகாமையாளர் உடனடியாகப் பணியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் கூறப்படுவதாவது:

60 வயதுக்கு மேற்பட்ட பலரின் பெயர்களை இலகு வேலைக்குச் சமூகமளித்ததாகப் பதிவு செய்து வேலைக் கண்காணிப்பில் ஈடுபட்டுவந்த இடைத்தரகர்கள் பல மாதங்களாக உணவுப் பொருள்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்காமல் கடத்தி விற்பனை செய்துள்ளனர். இதனை அவதானித்து வந்த பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்தே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் இந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (த-11)

## சமய அறிவுப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

தாவடி தெற்கு வடபத்திர காளி அம்பாள் ஆலயத்தில் இடம்பெறும் கேதார கௌரி விரத காலப்பகுதியில் பாடசாலை மட்டத்திலான தரம் 6-10 வரையான மாணவர்களுக்கான சமய அறிவுப் பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பரீட்சைக்குரிய விண்ணப்பங்களை மேற்படி ஆலயத்தில் பெற்று பூரணப்படுத்தி நாளை மறுதினம் புதன்கிழமைக்கு முன்னர் மேற்படி ஆலயத்தில் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சையில் சித்தியடைந்தோருக்கான பரிசில் வழங் கும் நிகழ்வு தீபாவளித் தினத்தன்று மாலை 5.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம் பெறும் என ஆலய ஆதீன கர்த்தா நா.சசிதர சர்மா அறிவித்துள்ளார். (த-207)

## காரை. அபிவிருத்திச் சபைக்கு புதிய நிர்வாகம்

காரைநகர்,ஒக்.12

காரைநகர் அபிவிருத்திச் சபைக்குப் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. சபையின் பொதுக்கூட்டம் அண்மையில் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆ.ரி.ஜெயசீலன் தலைமையில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் சபையின் புதிய தலைவராக சமாதான நீதிவானும் வியாவில்ஐயனார்ஆலய பரிபாலகரும் தொழிலதிபருமான க.சோமசேகரம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். உப தலைவராக மு.இலட்சுமணனும் செயலாளராக சி.ஜெயராசாவும் உபசெயலாளராக நா. பாலகிருஷ்ணனும், பொருளாளராக லயன்த.சற்குணராசாவும் தெரிவு செய்யப்பட்டதுடன் பத்து நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (6-250)

## சிகிச்சை பெறுவதில் அசட்டை; கன்னத்தின்கட்டு புற்றுநோயானது

தென்மராட்சி,ஒக்.12

கன்னத்தில் ஏற்பட்ட கட்டு வருத்தத்திற்கு உரிய சிகிச்சை பெறாமல் அசட்டையாக இருந்த நபருக்கு அது புற்றுநோயாக மாறி நிரந்தர நோயாளியாக்கியுள்ளது.

கன்னத்தில் ஏற்பட்ட கட்டுக்குச் சிகிச்சை பெற யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்ற வேளையில் அங்கு அதிகளவு நோயாளர்கள் வெளிநோயாளர் பிரிவில் காணப்பட்டதால் மூன்று மாத காலம் மிருசுவில் வைத்தியசாலையில் இவர் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இவருக்கு சாப்பிட முடியாத நிலை ஏற்பட்டதால் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அங்கு பரிசோதனை செய்தபோது புற்றுநோய் ஏற்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டு அங்குள்ள புற்று நோய் சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கேதீஸ்வரன்(வயது-52)என்பவரே இவ்வாறு பாதிக்கப்பட்டவராவார். (த-6-20)

## ஏ-9 அகலிப்புப் பணிகளுக்காக அளவிடும் நடவடிக்கை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

யாழ். கண்டி வீதியின் அகலிப்புப் பணிகளுக்கான அளவிடும் பணிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரதான வீதியில் இருந்து வீதி அகலிப்புக்கான அளவீடுகள் ஆரம்பிக்கப்பட்டு ஏ-9 பாதை வழியாக நடைபெற்று வருகிறது.

வீதியில் இருமருங்கிலும் அளவுக் குறியீடுகள், அடையாளக் கற்கள் என்பன நடுகை செய்யப்பட்டுள்ளன.

பெரும்பாலான கடைகள், பெருவிருட்சங்கள் முழுமையாகவும் வீடுகள், காணிகள் பகுதியாகவும் நிர்ணயிக்கப்பட்ட வீதியில் அகல எல்லைக்குள் காணப்படுவதாக மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

அளவிடும் பணிகள் நிறைவுற்றதும் விரைவில் வீதி அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படுமெனவும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரியொருவர் தெரிவித்தார். (த-135)




## ஆரம்ப மாணவர்களுக்கான போட்டியில் வென்றவர்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.12

ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய மாணவர்கள்; தரம்- 5 இற்கான திருக்குறள் மனனப் போட்டியில் பானுஜா பாஸ்கரன்- முதலாமிடம், வாய்ப்பாட்டு மனனப் போட்டியில் விதுஷன் நல்லைநாதன் இரண்டாமிடம்.

தரம் -4 இற்கான வாய்ப்பாட்டு மனனப் போட்டியில் கோபிகா மதிவரன் - முதலாமிடம், திருக்குறள் மனனப் போட்டியில் தர்சிகா செல்வரத்திரன் இரண்டாமிடம். (6)

## வலி.தென்மேற்கில் கிராமங்கள் தோறும் டெங்கு விழிப்புணர்வுப் பிரசாரம்

சண்டிலிப்பாய்,ஒக்.12

பருவ மழை ஆரம்பித்துள்ளதைத் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக டெங்கு நோயைப் பரப்பும் நுளம்பின் உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் சண்டிலிப்பாய் பிரதேச சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டுள்ளனர். மக்கள் மத்தியில் இது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மீண்டும் கிராமம் கிராமமாகச் சென்று ஒலிபெருக்கி மூலம் பிரசாரம் செய்து வருகின்றார்கள்.

மழை விட்டு விட்டுப் பெய்து வருவதினால் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்பின் உற்பத்தி மீண்டும் உருவாகலாம் என்று கருதிய சுகாதாரப் பகுதி உத்தியோகத்தர்கள் வீட்டுச் சுற்றாடலிலும் வெறும் காணியிலும் இருக்கும் மழை நீர் தேங்கி நிற்கக் கூடிய பொருள்களை அழித்து விடும்படி ஒலிபெருக்கி மூலம் பிரசாரம் செய்து வருகின்றார்கள்.

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் கடந்த காலங்களில் டெங்கு நோய்ப் பரம்பல் இனங்காணப்பட்ட சுதுமலை, மானிப்பாய், நவாலி ஆகிய கிராமங்களில் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள சுகாதாரப் பகுதியினர் இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு ஒத்துழைக்காதோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை-

இப்பிரதேசத்தில் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாகப் பொலிஸ் உத்தியோகத்தர்களும், தொண்டர்களும் இணைந்து வீடு வீடாகச் சென்று பார்வையிட்டு வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (த-115)



சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் கருத்தரங்கின் போது, பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தான குரு, கிடைத்தற்கரிய " உத்தரகாரணாகமம்" என்னும் நூலை ஒன்றியத்தலைவர், சிவஸ்ரீ. சபா. வாஸு தேவக் குருக்களிடம் கையளிப்பதையும் அருகில் மேலதிகப் பதிவாளர் நாயகம் ந.சதாசிவஐயர் மற்றும் ஒன்றியச் செயலாளர் சிவஸ்ரீ ச. ஸ்ரீகாந்தக் குருக்கள் ஆகியோர் நிற்பதை முதலாவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களின் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம். (29)

## மனிதனின் ஆயுள்கால அதிகரிப்பால் முதியோரின் எண்ணிக்கையும் உயர்வடையும்

### மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி உரை

யாழ்ப்பாணம்,ஒக்.12

மனிதனின் ஆயுள்காலம் அதிகரித்திருப்பதால் இனிவரும் காலங்களில் முதியோரின் எண்ணிக்கையும் அதிகரிக்கப் போகின்றது. எனவே முதியோரைப் பேணும் பண்பை இளையோரிடத்தே இப்போதே வளர்க்கவேண்டும்.

இவ்வாறு வலி.மேற்குப் பிரதேச சபையில் நடைபெற்ற உலக சிறுவர் தின மற்றும் முதியோர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மானிப்பாய் சுகாதார, வைத்திய அதிகாரி டாக்டர் டினேஷ் ஜெயக்குமார் தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

எமது சமுதாயத்தின் அரும்பெரும் சொத்து முதியோர். கடந்த காலங்களில் ஒரு மனிதனின் சராசரி ஆயுள் காலம் 55 முதல் 60 ஆக இருந்தது.

இன்று சுகாதார சேவைகளில் ஏற்பட்ட மாறுதல்கள், சேவைகள் மற்றும் நலனோன்பு நடவடிக்கைகள் என்பவற்றால் அவர்களது ஆயுள்காலம் 75 ஆக உயர்ந்துவிட்டது.

இதனால் எதிர்காலத்தில் அதாவது இன்னும் 10 ஆண்டுகளில் முதியோரின் எண்ணிக்கை மேலும் 20 வீதத் தால் அதிகரிக்கும் சாத்தியங்களுண்டு.

எனவே நாம் முதியோரைப் பேணுதல், மதித்தல் போன்ற பண்புகளை சிறுவர்களிடத்தே ஊட்டவேண்டும்- என்றார்.

இந்நிகழ்வில் வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் சு.புத்திசிகாமணி சிறுவர் உரிமை பற்றிய ஐ.நா. சாசனத்தின் விளக்கத்தை எடுத்துக் கூறினார்.

மேற்படி தினத்தில் வலி. மேற்கு முன்பள்ளி மாணவர்களின் இசை, நடன, நாடக நிகழ்வுகளும் நடைபெற்றன. (எ-302)

## தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி ஊர்காவற்றுறையில் செயற்றிட்டங்கள்

ஊர்காவற்றுறை,ஒக்.12

ஊர்காவற்றுறை பிரதேச சபை பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பொதுமக்கள் மத்தியில் வாசிப்பு பழக்கத்தைத் தூண்டும் வகையில் பின்வரும் செயற்றிடங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

* விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான பதாகைகள், துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல்.
* வாசிப்பு சம்பந்தமான பேச்சு, கட்டுரைப் போட்டிகளை நடத்தி பரிசில்கள், சான்றிதழ்களை வழங்குதல்.
* நூலகத்தில் புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளுதல்.
* நூல் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
* சிறுவர் நூல்கள் புத்தகக் கண் காட்சி நடத்துதல்.

இவற்றினூடாக அறிவு கொண்ட சமுதாயத்தை கட்டியெழுப்பக் கூடியதாக இருக்குமென ஊர்காவற்றுறை பிரதேச சபை பொது நூலகர் தெரிவித்தார். (6-21)

## கனேடிய அதிகாரி யாழ் வருகிறார்

யாழ்ப்பாணம்,ஒக்.12

கனேடிய உயர் ஸ்தானிகராலயத்தின் அரசியல் பொருளாதார பிரிவின் பிரதி அதிகாரி பெரட் நாளை புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

யாழ். வரும் அவர் மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருடன் கலந்துரையாடுவார். இச்சந்திப்பில் மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6-15)

## வடமராட்சி கிழக்கில் மீண்டும் இயங்கும் 3 உப தபால் நிலையங்கள்

பருத்தித்துறை,ஒக்.12

வடமராட்சி கிழக்கில் மூன்று உப தபால் நிலையங்கள் மீளவும் தமது சொந்த இடங்களிலேயே இயங்கத் தொடங்கியுள்ளன.

அப்பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டதை அடுத்து தாளையடி உப தபால் நிலையம், செம்பியன்பற்று உப தபால் நிலையம், ஆழியவளை உப தபால் நிலையம் ஆகியனவே மீண்டும் அந்தந்த இடங்கலேயே இயங்கத் தொடங்கியுள்ளன.

இந்தத் தபால் நிலையங்கள் இதுவரை பளை தபால் நிலையத்தில் இயங்கி வந்தன. முள்ளியான் உபதபால் நிலையம், சுண்டிக்குளம் உபதபால் நிலையம், நாகர் கோயில் உப தபால் நிலையம் ஆகியன அப்பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படாததால் பளையிலேயே இயங்கி வருகின்றன. (ஒ-190)

## தமிழ்த் துறையின் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.12

யாழ். பல்கலைக்கழகத் தின் தமிழ்த்துறை நடத்தும் கருத்தரங்கு நாளை புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழகத் தமிழ்த் துறை விரிவுரை மண்டபத்தில் பேராசிரியர் க.விசாகரூபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா " யாழ்ப்பாணத்தில் அரைவாய் மொழிப் பாடங்கள்' என்னும் தலைப்பில் கருத்துரை வழங்குவார். (த)

# யாழ்ப்பாணம் உட்பட நான்கு மாவட்டங்களில் 'சியெட்' நிறுவனத்தின் வீதிப்பாதுகாப்பு முகாம்



வேம்படி மகளிர் கல்லூரிக்கு 'சியெட்' உபகரணங்கள் வழங்கிய போது.....

வீதிப்பாதுகாப்பின் முக்கியத்துவத்தை வாகன ஓட்டுநர்களுக்கும், பாதசாரிகளுக்கும் இலகுவான முறையில் எடுத்துச் செல்லும் வகையில் 'சியெட்' ஸ்ரீலங்கா நிறுவனம் சிறப்பான வேலைத் திட்டமொன்றை ஆயிரக்கணக்கான பாடசாலை மாணவர்களூடாக மேற்கொண்டது. வாயு மூலமான ரயர் உற்பத்தியில் முன்னணி வகிக்கும் 'சியெட்' ஸ்ரீலங்கா நிறுவனம் பொதுச் சேவைத்திட்டம் ஒன்றின் மூலம் இந்தப் பணியை முன்னெடுத்துள்ளது.

ஒன்பது மாதகாலப்பகுதியில் கம்பனி 19 பாடசாலைகளில் இந்தத்திட்டத்தை அமுல் செய்து வீதிப்போக்குவரத்து கட்டுப்பாட்டுக்குத் தேவையான முகாமைத்துவ உபகரணங்களையும் விநியோகித்துள்ளது. வீதி விபத்துக்கள் மூலம் சமூகத்தில் மிக மோசமாகப் பாதிக்கக்கூடிய பிரிவினரைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கு தேவையான அடிப்படை அறிவுறுத்தல்களை வழங்கும் வகையில் இந்தப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2009 ஒகஸ்ட் முதல் இவ்வாண்டு ஏப்ரல் மாதம் வரை கம்பனியின் கூட்டாண்மை சமூகப் பொறுப்புத்திட்டத்தின் கீழ் இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டது. வீதிப்போக்குவரத்து விதிமுறைகளை விளக்குவதில் நிபுணத்துவம் பெற்ற ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி ஒருவரது சேவையும் இதற்கென பெற்றுக் கொள்ளப்பட்டதோடு இந்தப் பணியில் அதற்கான உரிய கட்புல, செவிப்புல உபகரணங்களும் பாவிக்கப்பட்டன.

''இலங்கையில் வீதி விபத்து தொடர்பான புள்ளிவிவரங்கள் அதிர்ச்சியூட்டுவதாக அமைந்துள்ளன. இவை எச்சரிக்கை மிக்கதாகவும் உள்ளன'' என்று 'சியெட்' ஸ்ரீலங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ரன்தீப் நாரங் கூறினார். ''வீதியில் பாதுகாப்புக்கு பங்களிப்புச் செய்யும் பொருள்களை உற்பத்திசெய்யும் ஒரு நிறுவனம் என்றவகையில் இந்த வீதிப்பாதுகாப்பு விடயத்தில் கவனம் செலுத்தப்படவேண்டியது தனது கடைமைகளுள் ஒன்றாக இருப்பதாக 'சியெட்' உறுதியாக நம்புகின்றது. இதுவே பாடசாலைகள் மூலமான இந்த வீதிப்பாதுகாப்பு திட்டத்துக்கு வழிவகுத்தது - என்றும் அவர் மேலும் கூறினார்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக ஒன்பதாம் ஆண்டு முதல் பன்னிரண்டாம் ஆண்டு வரையான பாடசாலை மாணவ, மாணவியரை ஒன்றிணைத்து இந்தத்திட்டம் அமுல் செய்யப்பட்டது.

முதலாவது கட்டத்தில் 'சியெட்' ஸ்ரீ லங்கா யாழ். குடாநாட்டில் உள்ள மூன்று பாடசாலைகள் உள்ளடங்களாக பன்னிரண்டு பாடசாலைகளுக்கு போக்குவரத்து முகாமைத்துவ உபகரணங்களை அன்பளிப்புச் செய்தது. போக்குவரத்து சமிக்ஞைகள், போக்குவரத்துக் கூம்புகள், கையில் ஏந்திநிற்கும் பலகைகள், மேலாடைகள் என்பன உட்பட பல பொருள்கள் இதில் அடங் கியுள்ளன.

இரண்டாவது கட்டத்தில் முதலாவது கட்டத்தின் விரிவாக்கமாக மேலும் ஏழு பாடசாலைகள் நன்மையடைந்தன. போக்குவரத்து முகாமைத்துவ உபகரணங்களின் நன்கொடைக்கு மேலதிகமாக பாடசாலை மாணவர்களுக்கும் பாடசாலைகளுக்கு மாணவர்களை கொண்டு செல்லும் போக்குவரத்து சேவை வழங்குநர்களுக்குமான அறிவூட்டல் திட்டம் ஒன்றும் வழங்கப்பட்டது. அதன் பின்னர் இந்த வீதிப் பாதுகாப்பு திட்டங்களின் ஊக்குவிப்புச்செயற்பாட்டை மேற்பார்வை செய்வதற்கு பாடசாலைகள் தூண்டப்பட்டன. போட்டிகள் மற்றும் கண்காட்சிகள் என்பன ஊடாக மாணவர் பங்களிப்பும் இதற்கு வழங்கப்பட்டது. இதில் கணிசமான பங்களிப்புக்களை வழங்கி தாக்கத்தை ஏற்படுத்திய பாடசாலைகள் பின்னர் அங்கீகரிக்கப்பட்டு விருது வழங்கப்படவுள்ளது.

''சியெட் கெயார்ஸ்'' வேலைத் திட்டத்தின் கீழ் பாடசாலைச் சிறுவர்களுக்கான வீதிப்பாதுகாப்பு எனும் திட்டம் அமுல் செய்யப்பட்டு வருகின்றது. இது கம்பனியின் கூட்டாண்மை சமூகப் பொறுப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

உள்ளூரில் ரயர் உற்பத்தியில் ISO 9000 சான்றிதழ் பெற்ற முதலாவது நிறுவனமான 'சியெட்' ஸ்ரீலங்கா நாட்டின் வர்த்தக ரீதியான ரயர் பிரிவில் 65 வீத சந்தைப் பங்கைக் கொண்டுள்ளது. உள்ளூர் சந்தைக்கும் ஏற்றுமதி சந்தைக்குமாக மாதாந்தம் 20000த்துக்கும் அதிகமான ரேடியல் ரயர்களையும் கம்பனி உற்பத்தி செய்கின்றது. இன்று இந்த ரேடியல் டயர்கள் 14 நாடுகளுக்கு ஏற்று மதி செய்யப்படுகின்றன. (த)




### சுவையான தரமிகு திடீர் பால் கோப்பி: சுப்பர் கோஃபி நிறுவனம் வழங்குகிறது

சுவையோடு தரச்சிறப்புமுடைய திடீர் பால் கோப்பியை சுப்பர் கொஃபி மிக்ஸ் மனுபாக்ஷரிங் நிறுவனம் (Super Coffee Mix Manufacturing Ltd.) வழங்குகிறது.

இந்த நிறுவனம் கோப்பித் தூளைச் சீனி, பால் ஆகியனவற்றைக் கொண்ட கலவையாகத் தருகிறது. அந்தக் கலவையில் வெந்நீரை விட்டால் போதும் அருந்துவதற்கு சுவையான தரமிகு கோப்பி கிடைத்துவிடும்.

சுப்பர் கொஃபி மிக்ஸ் மனுபாக்ஷரிங் நிறுவனம் கோப்பித் தூள் விற்பனையில் இலங்கையில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் பிரசித்தி பெற்றதாகும்.

சீனி மற்றும் பாலுடனான கோப்பிக் கலவை சிறிய பைக்கட்டுகளிலும் பொதி செய்யப்பட்டுள்ளது. நுகர்வோரின் வசதிக்கான ஏற்பாடு இது. இந்தக்கோப்பிப்பொதிகள் நாடெங்கும் உள்ள சுப்பர் மார்க்கட்டுகளிலும் மற்றும் கடைகளிலும் விற்பனைக்கு உள்ளன.

கடந்த மாதப் பிற்பகுதியில் சங்கானையில் ஹற்றன் நஷனல் வங்கியின் கிளை திறந்துவைக்கப்பட்டுள்ளது. அதன் அழகிய முகப்புத் தோற்றத்தை இங்கு காணலாம்.

# கொமன்வெல்த் போட்டிகளால் இந்தியா வர்த்தக அனுகூலத்தை எதிர்பார்க்கிறது




கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை இம்முறை இந்தியா தன்னுடைய நாட்டில் நடத்துவதால் பெரும் வர்த்தக அனுகூலம் தனக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறது.

கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளால் 4 ஆண்டுகளில் மொத்தம் 25 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். அத்துடன் ரூபா 23 ஆயிரம் கோடிக்கு வர்த்தகம் நடைபெறும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளுக்காக ஒரு பிரமாண்டமான விளையாட்டுக் கிராமமே உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கான கட்டுமானப் பணி உட்பட பல்வேறு துறைகளில் ஏராளமான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

போட்டிக்கான ஏற்பாடுகள் தொடங்கிய கடந்த 2008ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையிலான 4 ஆண்டுகளில் 25 லட்சம் பேர் வேலைவாய்ப்புப் பெறுவர் என போட்டி ஒருங்கிணைப்புக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விளையாட்டுப் போட்டிகள் உள்நாட்டு உற்பத்தியிலும் (ஜிடிபி) குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கும். அதாவது 4 ஆண்டுகளில் 23 ஆயிரம் கோடி ரூபாவுக்கு வர்த்தகம் நடைபெறும் என மதிப்பிடப்பட்டுள்ளது. விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் வெளிநாட்டு அணிகளை 'ஸ்பான்சர்' செய்யும் அந்த நாடுகளின் நிறுவனங்கள் இந்தியாவில் வர்த்தக நிறுவனங்களுடன் பரஸ்பரம் வர்த்தகத்தில் ஈடுபடும். இதனால், வர்த்தகம் அதிகரிக்கும்.

2006ஆம் ஆண்டு மெல்போர்னில் நடைபெற்ற கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் போது நடந்த வர்த்தகத்தைவிட 3 மடங்கு அதிகம் இப்போது நடைபெறும். 7,200 கோடி ரூபாவுக்கு மட்டுமே அப்போது வர்த்தகம் நடைபெற்றது.

ஆனால், 2002ஆம் ஆண்டு மான்செஸ்டரில் நடைபெற்ற போட்டிகளின்போது 15,300 கோடி ரூபாவுக்கு வர்த்தகம் நடைபெற்றது என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

# வட பகுதி பாடசாலைகளுக்கு 'ஹேலீஸ்' தகவல் தொழில்நுட்ப நிலையங்கள்


ஹேலீஸ் குழுமத்தின் மனிதவளப் பிரிவுத் தலைவரான கனில் திஸாநாயக்க (இடது) யோகபுரம் மகா வித்தியாலயத்தின் தகவல் தொழில்நுட்ப மையத்தை வட பகுதி ஆளுநர் மேஜர். ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறியிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

வன்னிப் பிராந்தியத்தில் மோதல்களுக்குப் பிந்திய காலப் பகுதியில் தமது கல்வி நடவடிக்கைகளை மீளக் கட்டியெழுப்பும் நூற்றுக்கணக்கான பாடசாலை மாணவர்களுக்கு மிக அத்தியாவசியமான தகவல் தொலைத் தொடர்பு கல்வி கிடைக்கவுள்ளது. ஹேலீஸ் குழுமத்தாலும் அதன் ஊழியர்களாலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமூகத் திட்டத்தின் அடிப்படையிலேயே இந்த வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கவுள்ளது.

பங்குச்சந்தையில் முன்னணி வகிக்கும் ஹேலீஸ் குழுமத்தின் ஊழியர்கள் தமது ஒரு நாள் சம்பளத்தை இதற்கென அன்பளிப்புச் செய்துள்ளனர். இதற்கு இசைவாக அவர்கள் சார்ந்துள்ள கம்பனிகளும் இதற்குச் சரிசமமான பங்களிப்புகளைச் செய்துள்ளன.

இந்த அன்பளிப்புகள் மூலமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மல்லாவியில் அமைந்துள்ள யோகபுரம் மகா வித்தியாலயமும், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பூநகரி மகா வித்தியாலயமும் சகல வசதிகளையும் கொண்ட தகவல் தொழில்நுட்ப நிலையங்களைக் கொண்டுள்ளன.

உதவியின் முதலாவது தொகுதி வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி முன்னிலையில் யோகபுரம் மகா வித்தியாலயத்துக்குக் கையளிக்கப்பட்டது. ஒரு பிரதி பண்ணும் இயந்திரம், எட்டு புதிய கம்பியூட்டர்கள், அவற்றுக்கான மின் இணைப்பு அலகுகள் பண்ணும் ஒரு கணினி அச்சு இயந்திரம், பல் ஊடக புரொஜெக்டர் மற்றும் அதற்கான ஸ்கிரீன், வெண்பலகை, 4MB பிளேஷ் டிரைவ்ஸ் மற்றும் மென்பொருள் அனுமதிகள் ஆகியவை கையளிக்கப்பட்டன.

2 ஆவது தகவல் தொலைத் தொடர்பு மையம் பூநகரி மகாவித்தியாலயத்தில் ஹேலீஸ் நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதில் 10 கம்பியூட்டர்கள், அவற்றுக்கான மின் இணைப்பு அலகுகள், ஒரு கணினி அச்சு இயந்திரம், பல் ஊடக புரொஜெக்டர், அவற்றுக்கான ஸ்கிரீன், கம்பியூட்டர் மேசைகள் மற்றும் அவற்றுக்கான கதிரைகள், வெண் பலகை என்பன இந்த நிலையத்திற்கு வழங்கப்படவுள்ளன. நவம்பர் மாதம் இந்தத் திட்டம் பூர்த்தி அடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த இரண்டு நிலையங்களுக்குமான உபகரணங்களுடன் சேர்த்து மொத்தச் செலவு 37 லட்சத்தைத் தாண்டும் எனக் கம்பனி அறிவித்துள்ளது.


'ஒறிபிளேம்' நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளை காரியாலயத்தை முகாமைத்துவப் பணிப்பாளர் பியர் மார்ரிஷன் திறந்து வைப்பதை படத்தில் காணலாம். (படம்: டிலீப்)

# எம்மைத் தொடர்ந்தும் புறக்கணிக்காமல் ஆசிரிய நியமனத்தை உடன் வழங்குங்கள்

## கிளிநொச்சி தொண்டராசிரியர்கள் கோரிக்கை

கிளிநொச்சி,ஒக்.12

தம்மைத் தொடர்ந்தும் புறக்கணித்து ஒதுக்காது ஏனைய மாவட்டங்களிலுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டதைப்போன்று தமக்கும் வழங்கப்பட வேண்டுமெனகிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர் ஒன்றியத்தினர் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர்.

கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக எந்தவிதமான கொடுப்பனவுகளுமின்றித் தாம் சேவையாற்றி வருவதாகவும் இவர்கள் குறிப்பிடுகின்றனர். கொடிய யுத்தம் நடைபெற்ற வேளையில் பாதை மூடப்பட்டு ஏனைய மாவட்ட ஆசிரியர்கள் கிளிநொச்சிக்கு வரமுடியாத நிலையில் தாமே தொடர்ந்தும் கல்வி கற்பித்து வந்ததாகத் தெரிவிக்கும் இவர்கள் வவுனியா நலன்புரி நிலையங்களிலும் தாமே இடம்பெயர்ந்த மாணவர்களுக்குக் கல்வி கற்பித்ததாகவும் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் கிளிநொச்சி, முல்லைத்தீவு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு உதவி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுத் தற்போது ஆசிரியர் பயிற்சிக்காக இவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். ஆனால் கொடிய யுத்தத்தின் காரணமாக வாழ்க்கையையே தொலைத்துவிட்ட தமக்கு மட்டும் இதுவரை நியமனம் வழங்காது புறக்கணிப்பது ஏமாற்றத்தையும், கவலையையும் தருவதாக இவர்கள் கூறுகின்றனர்.

தம்மைத் தொடர்ந்தும் புறக்கணித்து ஒதுக்காது ஏனைய மாவட்டங்களில் நியமனம் வழங்கப்பட்டதுபோன்று தமக்கும் வழங்கப்பட வேண்டுமென இவர்கள் கேட்டுக்கொள்வதாகவும் அந்த அறிக்கையில் உள்ளது. (க)



முல்லைத்தீவு செம்மலை - அளம்பில் பிரதேச வைத்தியசாலை அழிவடைந்த நிலையில் காணப்படுவதைப் படத்தில் காணலாம்.
(படம்: ஆனைக்கோட்டைச் செய்தியாளர்)

# பெரியபளையில் டெங்கு நோயாளி இனம்காணப்பட்டார் புகையூட்டல் நடவடிக்கைகள் முழு வீச்சில்

பளை,ஒக்.12

பெரியபளைப் பிரதேசத்தில் டெங்கு நோயாளி ஒருவர் இனம் காணப்பட்டுள்ளார்.

டெங்கு ஒழிப்பு வாரத்தினையொட்டி பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட இடங்களில் சிரமதானப்பணிகள் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகின. இந்தப் பணிகள் எதிர்வரும் புதன்கிழமை வரை தொடர்ந்து நடைபெறும். இதன் முதல் கட்டமாக பெரிய பளைப் பிரதேசத்தில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போதே 32 வயதுடைய பெண்ணொருவர் டெங்கு நோயாளியென இனம் காணப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து பெரிய பளைப் பிரதேசம் முழுவதும் டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்கான புகையூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பணிகளில் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை ஊழியர்களும், சுகாதாரத் திணைக்களப் பணியாளர்களும் இணைந்து ஈடுபட்டு வருகின்றனர்.

டெங்கு நோயிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள எமது சூழலை நாம் சுத்தமாக வைத்திருக்க வேண்டியது அவசியமெனவும், இதற்கான அறிவுரைகளையும் விழிப்புணர்வையும் தாம் வழங்கி வருவதாகவும் பச்சிலைப் பள்ளிப் பிரதேச சபையின் செயலாளரும், விசேட ஆணையாளருமாகிய சி.சிவப்பிரகாசம் தெரிவித்தார். (க-313-311)

# குறைந்த விலைக்கு நெல்லை விற்பதால் நட்டமடையும் ஒட்டுசுட்டான் விவசாயிகள்

ஒட்டுசுட்டான்,ஒக்.12

ஒட்டுசுட்டான் பகுதியில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நெல் கொள்வனவில் ஈடுபடாததால் விவசாயிகள் நட்டமடைந்துள்ளனர்.

இந்தப்பகுதியிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் 1960 ரூபாவுக்கு நெல்லைக் கொள்வனவு செய்யவிருப்பதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இதுவரை சங்கங்கள் எதுவும் நெல் கொள்வனவில் ஈடுபடவில்லை. இதனால் விவசாயிகள் தனியாருக்கு 1200 ரூபாவுக்கு நெல்லை விற்க வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர்.

கூலி ஆள்கள் இல்லாததால் அறுவடை இயந்திரம் மூலம் நெல் அறுவடையை மேற்கொண்ட விவசாயிகள் இதற்கான கூலியைக் கொடுப்பதற்காக தனியார் கூறும் விலைக்கு நெல்லை விற்க வேண்டிய நிலையிலுள்ளனர். இதனால் அதிக நட்டத்தை அவர்கள் எதிர்கொள்கின்றனர். (க-341)




# பளை வைத்தியசாலைக்கு புதிய கட்டடங்கள் அமைக்க 50 மில்லியன் ரூபாவை அமெரிக்க நிறுவனம் வழங்கியது

கிளிநொச்சி,ஒக்.12

பளை பிரதேச வைத்தியசாலைக்கு 50 மில்லியன் ரூபா செலவில் புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதற்கான நிதியினை அமெரிக்க நாட்டு நிறுவனம் ஒன்று வழங்கியுள்ளது. இந்நிதியின் மூலம் மாடிக் கட்டடங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ள போதிலும் வைத்தியசாலை இருந்த இடத்தில் போதிய இடவசதி இல்லாததால் நிதியினைப் பெறுவதில் தாமதமேற்படுவதாகத் தெரியவருகிறது.

இதேவேளை அமெரிக்க நிறுவனம் பூநகரி, முழங்காவில் ஆகிய இடங்களில் சேதமடைந்துள்ள வைத்தியசாலைகளில் தலா 50 மில்லியன் ரூபா செலவில் புதிய மாடிக் கட்டடங்கள் அமைக்க நிதி வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-207)

## கற்சிலை மடுவில் சிரமதானம்

ஒட்டுசுட்டான்,ஒக்.12

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் டெங்கு நோய் ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நடவடிக்கைகள் சுகாதாரத்திணைக்களத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. சுகாதாரத் தொண்டர்கள் வீடுவீடாகச் சென்று ஆலோசனைகள் வழங்கியும், ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தல்கள் விடுத்தும் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர்.

கற்சிலைமடு, சமனந்துளாய் பிள்ளையார் ஆலய வளாகத்தில் இராணுவத்தினர், ஆலய நிர்வாகிகள், சுகாதாரத் தொண்டர்கள், பொதுமக்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் சிரமதானம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதைப்போன்று நாளாந்தம் பரவலான முறையில் சிரமதானத்தின் மூலம் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (க-341)

## பதிவுகளை மேற்கொள்ள மக்கள் அலைச்சல்

ஒட்டுசுட்டான்,ஒக்.12

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவாளர் இல்லாததால் மக்கள் தமது பதிவுகளை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.(க-341)

# கிளிநொச்சியில் ஆறு இடங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டன

யாழ்ப்பாணம்,ஒக்.12

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை ஆறு இடங்களில் கண்ணிவெடிகள் பூரணமாக அகற்றப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட கண்ணிவெடி அகற்றும் பிரிவின் தலைவரான வ.முருகதாஸ் தெரிவித்தார்.

இராணுவத்தின் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் மட்டுமே இந்த மாவட்டத்தில் கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுவரை கிளிநொச்சியிலிருந்து சுன்னாகம் செல்லும் மின்மார்க்கப் பகுதி, அக்கராயன் குளக்கட்டுப் பகுதி, பரந்தன் - முல்லைத்தீவு வீதிப்பகுதி, பூநகரிப் பிரதேசத்தில் பூநகரி - பரந்தன் வீதிப்பகுதி, சங்குப்பிட்டி - மன்னார் வீதிப்பகுதி ஆகிய ஆறு இடங்களிலேயே கண்ணிவெடிகள் முற்றாக அகற்றப்பட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன. (க-15)

# மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பரிசளிப்பு விழா வவுனியாவில்

பருத்தித்துறை,ஒக்.12

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் முதற்தடவையாக இப்பரிசளிப்பு விழா நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு போட்டிகளிலும் வலய மட்டம், மாகாணமட்டம் ஆகியவற்றில் முதலாமிடத்தைப் பெற்ற மாணவர்களுக்கு இப்பரிசளிப்பு விழாவில் வெற்றிக் கிண்ணங்கள் பரிசாக வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. (த-190)

# சைக்கிள் வண்டிகள் கிடைக்காமையால் நடந்து திரியும் மீள்குடியேறிய மக்கள்

ஒட்டுசுட்டான்,ஒக்.12

யுத்தத்தின்போது தமது உடமைகளுடன் சைக்கிள் வண்டிகளையும் தொலைத்த மீள்குடியேறிய மக்களில் சிலர் கால்நடையாக அலைந்து திரிவதைக் காண முடிகின்றது.

இடப்பெயர்வின்போது கடைசி வரையில் கொண்டு செல்லப்பட்ட தமது சைக்கிள் வண்டிகளைத் தொலைத்தவர்கள் மீள்குடியேறிய பின்னர் எந்த நிறுவனத்தாலும் சைக்கிள் வண்டிகள் வழங்கப்படாமையால் கால்நடையாக நடந்து தமது காரியங்களை ஆற்றி வருகின்றனர். ஆனால் சில வீடுகளில் ஒடுவதற்கு ஆள் இல்லாத நிலையில் நான்கு, ஐந்து சைக்கிள் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இவ்வாறு நடந்து திரிவோர் கூறுகின்றனர்.

அரசாங்க நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், இராணுவத்தினர் எனப் பலராலும் சைக்கிள் வண்டிகள் வழங்கப்பட்டன. ஆனால் சிலருக்கு இவை கிடைக்கவே இல்லை. இதனால் அவர்கள் தமது சொந்தக் காலையே நம்பி நடந்து திரிவதைக் காண முடிகின்றது. (க-341)

# அதிபர்களுக்கான தடைதாண்டல் பரீட்சை

கிளிநொச்சி,ஒக்.12

பாடசாலை அதிபர்களிடமிருந்து தடைதாண்டல் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றுவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள பாடசாலை அதிபர்கள் தடைதாண்டல் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்ற விரும்பினால் அதிபர்கள் சங்கச் செயலாளரிடம் தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டுமென கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கச் செயலாளர் அ.பங்கயற் செல்வன் தெரிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சி வகுப்பினைக் கிளிநொச்சியில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆகவே இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விரும்பும் பாடசாலை அதிபர்கள் தாமதியாது தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (க-10 )

# அறிவியல் நகர் 50 வீட்டுத்திட்டம் ஆட்சேபனையால் இடம் மாறியது

கிளிநொச்சி,ஒக்.12

கிளிநொச்சியில் பொன்நகர் பகுதியில் அறிவியல் நகரில் கடந்த இரு மாதங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட 50 வீட்டுத் திட்டம் அப்பகுதியில் வாழ்ந்து வந்த மக்களின் ஆட்சேபனையைத் தொடர்ந்து வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக முன்பு தெரிவு செய்யப்பட்ட காணியிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட விருக்கிறது. இதற்கான காணி தெரிவு செய்யப்பட்டு தற்பொழுது துப்புரவு செய்யும் பணி நடைபெறுகிறது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் கிளிநொச்சியில், பொன்நகர் பகுதியில் அறிவியல் நகரில் 50 வீட்டுத் திட்டத்திற்கான காணி தெரிவு செய்யப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட காணியில் கடந்த இரு மாதங்களுக்கு முன்பு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைத் தலைவரால் வீட்டுத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. ஒவ்வொரு வீடும் 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியில் அமைப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டதுடன், ஏனைய வசதிகளும் செய்து கொடுக்கப்படவிருந்தன.

இந்த நிலையில், போர்க் காலச் சூழ்நிலைக்கு முன்பு இந்த வீட்டுத்திட்டம் மேற்கொள்ளும் பகுதியில் பல வருடங்களாக வாழ்ந்து வந்த சிலர், இக்காணி தங்களுக்குச் சொந்தமானதெனக் கூறி இவ்வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த விடாமல் ஆட்சேபனை தெரிவித்தனர். இதற்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்க அதிபரும், பொலிஸாரும் எடுத்துக் கொண்ட முயற்சிகை கூடாத நிலையில், மேற்படி வீட்டுத்திட்டம் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஐம்பது வீட்டுத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் இவ்வீட்டுத்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்பட விருக்கிறது. இதற்கான காணி தெரிவு செய்யப்பட்டு துப்புரவு செய்யும் பணி தற்பொழுது நடைபெறுகிறது. (க-115)

# முழங்காவில் மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் தின நிகழ்வுகள்

கிளிநொச்சி,ஒக்.12

கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலய ஆசிரியர் தின நிகழ்வுகள் கடந்த 6 ஆம் திகதி மு.ப. 9 மணிக்கு பாடசாலையின் உயர்தர மாணவர் மன்றத் தலைவரின் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு முன்பதாக முழங்காவில் பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூசைகள் இடம்பெற்று ஆலய முன்றலில் இருந்து ஆசிரியர்கள் பான்ட் வாத்திய அணிவகுப்புடன் நிகழ்வு மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு மாணவர்களும், பெற்றோரும் ஆசிரியர்களை வரவேற்று மலர் மாலை அணிவித்தனர். தொடர்ந்து அவர்களால் ஆசிரியர்களுக்கான நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

ஏனைய பாடசாலைகளான நாச்சிக்குடா அ.த.க.பா, இரணைதீவு றோ.க.த.க.பா, குமுழமுனை அ.த.க.பா, முழங்காவில் ம.வி. ஆகிய பாடசாலைகளின் ஆசிரியர்கள் இருகுழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஆசிரியர்களுக்கு சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியும், ஆசிரியைகளுக்கு சிநேகபூர்வ வலைப்பந்தாட்டப் போட்டிகளும் முழுங்காவில் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றன. (க-405)

# சந்தோஷம் என்ன விலை?

மகிழ்ச்சி, சந்தோஷம், நிம்மதி போன்றவற்றைத் தேடித் தேடியே பலரது வாழ்க்கையில் பாதி நாள்கள் கழிந்து போகின்றன. இவை கடையில் வாங்க முடியுமா? எங்கே இருக்கின்றன. கடையில் வாங்க முடியும் என்றால் சந்தையில் அதிக விலை போகக் கூடிய பொருள்களாக இவைதான் இருக்கப் போகின்றன என்பதில் சந்தேமில்லை.

என் வாழ்க்கையின் அர்த்தம் என்ன? என சில சமயங்களில் நாம் எண்ணி வருந்துவதுண்டு. செய்து முடிக்காத வேலைகள், விரும்பத்தகாத சம்பவங்கள், பணப்பிரச்சினை என்பவை எமது ஆதங்கத்தை மேலும் அதிகரித்து விடுகின்றன. நமக்கு நிம்மதியே கிடைக்காதா என்று ஏங்கும் சந்தர்ப்பங்கள் எத்தனையோ உள்ளன.

வாழ்க்கையில் எது முக்கியம். எதை எதைச் செய்யவேண்டும் என்பதைத் தீர்மானிக்க முடியாமல் திண்டாடுபவர்கள் எம்மிடையே பலர். தம்மைத்தாமே தீர்மானிக்கும் சக்தி இல்லாதபோதே இந்தப் பிரச்சினை ஏற்படுகின்றது.

எமது தேவை, இலட்சியம் என்பதைத் தீர்மானிப்பதில் தெளிவு தேவை. அதற்கு மனமும் மூளையும் எமது கட்டுப்பாட்டில் இருக்கவேண்டும். எத்தனை தடைகள் வந்தாலும் தேவையானதைப் பெற்றுக்கொள்ளுங்கள். எவ்வளவு கஷ்டமானாலும் தேவையற்றதை உடனே உதறித்தள்ளுங்கள். இது ஆரம்பத்திலேயே தீர்மானிக்கப்பட வேண்டியது அல்லது மன உளைச்சலையும் வீணான கவலைகளையுமே சந்திக்க நேரிடும்.

மற்றவர்களுடன் உங்கள் வாழ்க்கையை ஒருபோதும் ஒப்பிடாதீர்கள். மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்பதை எல்லாம் அளவுக்கு மீறிச் சிந்திக்க ஆரம்பிக்காதீர்கள். ஏனென்றால் எத்தனையோ பொன்னான சந்தர்ப்பங்களை இழக்க நேரிடும். எம்மை ஆளும், எமது முடிவுகளைத் தீர்மானிக்கும் சக்தி எம்மிடம்தான் உள்ளது. அதற்கு நல்ல வேலை கொடுங்கள். அப்போது விளைவுகள் சிறப்பானவையாக இருக்கும்.

அதேபோல எமது செயற்பாடுகளும் தீர்மானங்களும் இன்னொருவரைத் துன்பப்படுத்துபவையாக அமைந்துவிடக் கூடாது. அந்தக் காலத்தில் பொறுமையாக சோதித்த கடவுள் இப்போது எல்லாம் உடனடி நடவடிக்கை எடுக்கிறார். நாம் செய்யும் காரியங்களே எமக்குத் தீமையை ஏற்படுத்திவிடக் கூடாது.

எம்மைச் சூழ உள்ளவர்கள் முட்டாள்கள் அல்லர். எனவே அவர்களை ஏமாற்ற நினைத்தால் நாம்தான் இறுதியில் முட்டாள்களாவோம். நாமே எமது சந்தோஷத்தைத் தொலைத்து விடுவோம்.

மனச்சாட்சிக்கு நேர்மையாக நடந்து கொள்ளுங்கள். நீங்கள் செய்யும் ஒவ்வொரு காரியமும் மனச்சாட்சி என்ற நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். உங்கள் மனம் உறுதியாகவும் சிந்தனை தெளிவாகவும் இருக்கும் போது செயல்கள் சரியாக அமையும். அப்போது நிம்மதியும் சந்தோஷமும் தாமே கூடிவரும்.

அதேபோல மனச்சுமைகளை இலகுவாக எடுத்துக் கொண்டு, அவற்றைச் சமாளிக்கக் கற்றுக்கொள்ளுங்கள் உங்கள் மனதில் சந்தோஷம் தாராளமாகக் கிடைக்கும்.

தமிழரசி.

# அதிக சம்பளம் வேண்டுமா?

நாட்டில் எது நடக்கிறதோ இல்லையோ வாழ்க்கைச் செலவு மட்டும் அதிகரித்துக் கொண்டே போகிறது. பொருள்கள் வாங்கச் சென்றால் கையில் உள்ள காசு அப்படியே முடிந்து விடுகிறது. என்ற குற்றச்சாட்டை கூறாதவர்களே இல்லை.

இந்த நிலைமையில் நீங்கள் பெறும் சம்பளம் அன்றாட வாழ்க்கையில் பெரும் பங்கு வகிக்கின்றது.எனவே வேலையில் சேரும்போதே சம்பளத்தையும் பேசித் தீர்த்துக்கொள்ளுங்கள். அதற்கு உதவச் சில வழி முறைகள்:

**பேசப் போவது என்ன?**

நேர்முகப் பரீட்சைக்கு செல்வதற்கு முன்பு அந்த நிறுவனத்தில் அதே வேலையில் இருப்பவர்கள் என்ன சம்பளம் பெறுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

அத்துடன், உங்கள் திறமை, அனுபவம் என்பவற்றையும் குறித்துக் கொள்ளுங்கள். நிறுவனம் முன்வைக்கும் சம்பளம் குறைவாகவே இருக்கும். ஆனால் நீங்கள் எதிர்பார்க்கும் சம்பளத்தை தன்னம்பிக்கையுடன் கேளுங்கள்.

**நிறுவனத்தின் மனப்பான்மை என்ன?**

பல நிறுவனங்களில் ஒவ்வொரு வேலைக்கும் இந்தளவு சம்பளம் என்று குறிப்பிட்டிருக்கும். அதனை முன் கூட்டியே தெரிந்து வைத்திருப்பது நன்று.

**உங்கள் திறமைகள் என்ன?**

அதிகப்படியான சம்பளம் வேண்டும் என்று நினைத்தால் மட்டும் போதாது. அதற்குரிய சேவையை நிறுவனமும் உங்களிடம் எதிர்பார்க்கும். உங்கள் திறமையும் அனுபவமும் வெளிக்கொணரப்பட வேண்டும். அதற்காக நேர்முகப்பரீட்சையின் போது நீங்களே உங்களைப் பற்றி தற்பெருமைப்பட்டுக் கொள்ளமுடியாது. ஆனால் அந்தத் தொழில் மீதுள்ள விருப்பத்தையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துங்கள்.

**முடிவு என்ன?**

அதிக சம்பளம் வேண்டும் என்று கூறிவிட்டீர்கள். ஆனால் நிறுவனத்திடம் அதற்கான வசதி இல்லை என்றால் அதிலும் குறைவான சம்பளத்துக்கு வேலையில் சேரக் காத்திருப்பவர்களை அணுக முற்படலாம். இதனால் உங்கள் கோரிக்கை நிராகரிக்கப்படலாம்.

இதைவிட நல்ல வேலை கிடைக்கும் என்று நீங்கள் நம்பினால் மன்னிக்கவும். இந்தச் சம்பளத்துக்கு வேலையில் சேர முடியாது. என்று கூட உடனே ஏற்றுக் கொள்ளாதீர்கள். அது உங்கள் மதிப்பைக் குறைத்துவிடும்.

சம்பளத்தை விட அந்நிறுவனத்தில் கிடைக்கும் சலுகைகளைப் பற்றி சற்றுத் தெரிந்து கொள்ளுங்கள். 3 அல்லது 6 மாதங்களுக்குப் பின்பு சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வையுங்கள். அந்த உடன்பாட்டுக்கேற்ப வேலையில் சேருங்கள்.

தாரிணி.

# நோய் நீங்க சில வழிமுறைகள்

* புடலங்காயை ஆறு அங்குல நீளமாக வெட்டி அதனுள் இருக்கும் விதை, சடை என்பனவற்றை நீக்கி சீகாக்காய் நீர் விட்டு குழாயை அடைத்து ஒருநாள் முழுவதும் புடலங்காயை வெயிலில் காய வைக்கவும். மறுநாள் அதை அரைத்து தேமல் உள்ள இடங்களில் தடவிய பின்னர் ஒரு மணித்தியாலத்தின் பின் வெந்நீரில் குளித்தால் சில தினங்களில் தேமல் மறைந்துவிடும்.
* நிலவாகை வேரை சுத்தம் செய்து அதில் வேண்டிய அளவு எலுமிச்சம் சாறு கலந்து மைபோல அரைத்து தேமல் மீது பற்றாகப் தடவிவர தேமல் நீங்கும்.
* பூவரசு மொக்கை இரண்டாக நறுக்கினால் அதிலிருந்து வரும் மஞ்சள் நிறமான பாலை தேமலில் இருவேளையாக தடவி வரலாம்.
* சரக்கொன்றை வேர் 5 கிராம் எடுத்து பசும்பால் விட்டு அரைத்து 20 மில்லிலீற்றர் பசுப்பாலுடன் கலந்து காலை ஒருவேளை வீதம் தொடர்ந்து பருகி வர ஒரு வாரத்தில் தேமல் மறைந்துவிடும்.
* மருதோன்றி இலையுடன் சவர்க்காரம் சேர்த்தரைத்து பூசிவர கருத்தேமல் இல்லாமல் போகும்.
* இலுப்பை மரத்தின் இலையை அரைத்து குளிக்கப் போவதற்கு அரை மணித்தியாலத்துக்கு முன்பு தேமல் உள்ள இடங்களில் பூசி குளித்தால் தேமல் மட்டுமன்றி சரும நோய்களும் இல்லாமல் போகும்.

பு.தாட்ஷிகா.

# நாடுகளின் தலைநகரும் நாணயங்களும்

| | | |
|---|---|---|
| ஐக்கிய அரபுகுடியரசு | - அபுதாபி | - திர்ஹாம் |
| ஐவரி கோல்ட் | - யமௌன சௌக்ரோ | -அபிட்றூன் பிரார் |
| ஐஸ்லாந்து | - ரெய்க்னூலிக் | - குரோனா |
| ஓமான் | - மஸ்கட் | - ஓமான்றியால் |
| எகிப்து | - கெய்ரோ | - எகிப்தியபவுண்டு |
| எதியோப்பியா | - அடிஸ்அபாபா | - பிர் |
| எரித்ரியா | - அஸ்மாரா | - நக்ஃபா |
| எல்சல்வடோர் | - சன்சால்வடோர் | - அமெரிக்கன் டொலர் |
| எஸ்ரோனியா | - தாலின் | - குரூன் |
| உகண்டா | - கம்பாலா | - உகாண்டா ஷில்லிங் |
| உக்ரைன் | - கீவ் | - ஹூரில்னியா |
| உருகுவே | - மோன்டேவீடியோ | - பெஸோ |
| உஸ்பெகிஸ்தான் | - தாஷ்கன்ட் | - சோம் |

# கல்வித்துறையின் தடயங்கள்

1931 - இலவசக்கல்விக்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது.
1943 - இலவசக்கல்விக்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டன.
1945 - இலவசக்கல்வி அறிமுகம் செய்யப்பட்டது.
1952 - புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
1956 - சுயமொழிகள் போதனை மொழிகள் ஆக்கப்பட்டது.
1960 - பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டது.
1968 - பாடசாலைகளில் பிஸ்கேற் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
1980 - இலவசப் பாட நூல்கள் வழங்கப்பட்டன.
1987 - தேசிய பாடசாலைகள் உருவாக்கும் நடைமுறை ஆரம்பிக்கப்பட்டது.
1989 - இலவச மதிய உணவுத்திட்டம் பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டது.
1993 - இலவச சீருடை விநியோகம் செய்யப்பட்டது.
1994 - இலவச மதிய உணவு நிறுத்தப்பட்டது.
1998 - உயர்தரப் பாடம் 4 இலிருந்து 3 ஆகக் குறைக்கப்பட்டு பல்கலைக்கழக அனுமதிகளில் பொதுச் சாதாரணதரப் பரீட்சை எனும் விசேட பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்டது.
1999 - பாடசாலை மட்டக் கணிப்பீட்டு முறை ஆரம்பிக்கப்பட்டது.
2000 - பல்கலைக்கழக அனுமதிக்கு விசேட பொதுச்சாதரண தரப்பரீட்சை நடைமுறைப்படுத்தப்பட்டது.
2001 - கல்வி அமைச்சு உருவாக்கப்பட்டது.
2002- SBA புள்ளிகள் க.பொ.த.தரப்பரீட்சை பெறுபேறுடன் சேர்க்கப்பட்டது.
2004 - அரச தனியார் பாடசாலைகளில் தரம் -01 இற்கு புதிய நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டது.
2005 - SBA கா.பொ.த உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகளுடன் சேர்க்கப்பட்டது.
2007 - தூண்டல், கண்டறிதல், விளக்குதல், விரிவுபடுத்தல், பரீட்சித்தல் ஆகிய (5 E) நடைமுறைக்கல்வி உருவாக்கப்பட்டது.

க. நிஷா

# சமையல் குறிப்புகள்

* உருளைக் கிழங்கைப் பொரிப்பதற்கு முன் சிறிது பயத்தம் மாவில் புரட்டிவிட்டுப் பொரித்தால் பொரியல் மொற மொறப்பாகி விடும்.
* கறித்தூளுக்காக மிளகாய் வறுக்கும் போது ஒருபிடி நிலக்கடலையையும் சேர்த்து வறுத்தால் சுவையாக இருக்கும்.
* மீன் வாங்கும்போது அதன் கண்கள் பளிச்சென்று இருக்கின்றதா எனப் பார்த்து வாங்கவேண்டும். அப்படியான மீன் புத்தம் புதிய பழுதடையாத மீனாகும்.
* ஆட்டிறைச்சி சமைத்த பாத்திரத்துக்கு பழப்புளி போட்டுத் தேய்த்துக் கொண்ட பின்பு விம் போட்டு மினுக்கினால் இறைச்சி வாடை இருக்காது.
* கடுகைப் பொடி செய்து வெள்ளிப் பாத்திரங்களைத் தேய்த்துக் கழுவினால் பாத்திரங்கள் பளிச்சென்றிருக்கும்.
* கோப்பி தயாரிக்கும்போது ஒரு சிட்டிகை மேசையுப்பைக் கோப்பியோடு கலந்து தயாரித்தால் கோப்பி வாசனையாகவும், சுவையாகவும் இருக்கும்.
* பெருங்காயம் காய்ந்து கெட்டியாகாமல் இருப்பதற்கு பெருங்காயம் உள்ள போத்தலில் ஒரு பச்சை மிளகாயைப் போட்டு மூடி வைத்தால் பெருங்காயம் மிருதுவாக இருக்கும்.
* கோடை காலத்தில் முட்டைகள் பழுதடைவதைத் தவிர்ப்பதற்கு, முட்டைகளை வேப்பிலையுள்ள பாத்திரத்தில் வைத்துக் கொண்டால் அதிக நாள்கள் கெட்டுப் போகாமல் இருக்கும்.
* தோசைக்கல்லில் தோசை சுடுவதற்கு முன்பு, ஒரு தே.கரண்டி எண்ணெய் அரைத் தேக்கரண்டி உப்புத்தூள் ஆகியவற்றைப் போட்டு ஒரு துணியால் தோசைக்கல் முழுவதும் பரவலாகத் தேய்த்துக் கொண்ட பின்பு தோசை சுட ஆரம்பித்தால் தோசையை எடுக்கும் போது சுலபமாக இருக்கும்.
* வாழைப் பூவை நறுக்கும் போது கையில் படிந்து விடும் கறையைப் போக்குவதற்கு சிறிதளவு வினாகிரி கலந்த நீரில் கையைக் கழுவிக் கொண்டால் கறை போய்விடும்.
* பச்சை மிளகாய் விரைவில் பழுக்காமல் இருப்பதற்கு அதன் காம்புகளை நீக்கிவிட்டு கண்ணாடிப் போத்தலில் இட்டு ஒரு சிட்டிகை மஞ்சள் தூள் இட்டு மூடி வெளிச்சம்படக் கூடிய இடத்தில் வைத்துக் கொண்டால் ஒரு வாரம்வரை பழுக்காமல் இருக்கும்.
* வெங்காயம் வெட்டுவதற்கு முன்பு ஒரு சிறிய வெங்காயத்தைக் கத்தியின் நுனியில் குத்திக் கொண்ட பின்பு வெட்ட ஆரம்பித்தால் கண் எரிவு ஏற்படாது. சிறு விபத்துக்களையும் தவிர்த்துக் கொள்ளலாம்.
* சுடுநீர் போத்தலில் கெட்ட வாடை வீசினால் ஒருமேசைக் கரண்டி அப்பச் சோடாவை இட்டுக் கொதி நீரூற்றி 24 மணிநேரம் வைத்துவிட்டுக் கழுவினால் வாடை நீங்கிவிடும். அல்லது வெந்நீருடன், உப்புக் கலந்து ஊற்றி அரைமணி நேரத்தின் பின்பு கழுவிக் கொள்ளலாம்.

உ.கரிணி.

# மணல் அகழ்வுக் கட்டுப்பாடு தளர்வு பிரதேச செயலரின் அனுமதி போதும்

கொழும்பு, ஒக். 12

மணல் அகழ்வு நடைமுறையிலிருந்த இறுக்கமான நடைமுறைகள் ஓரளவுக்குத் தளர்த்தப்பட்டுள்ளன.

வீடுகளை அமைப்பதற்கும் மற்றும் வர்த்தக ரீதியிலல்லாத கட்டுமானப் பணிகளுக்கும் மணல், மண், கூழாங்கற்கள் ஆகியவற்றை அகழ்வதற்கும், அவற்றைக் கொண்டு செல்வதற்கும் என இதுவரை அமுலில் இருந்த கடுமையான சட்டதிட்டங்கள் தளர்த்தப்பட்டுள்ளன என சுற்றாடல்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

எனவே, இனிமேல் மேற்கூறிய பணிகளுக்கு சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளரின் அனுமதிப்பத்திரம் மாத்திரமே போதுமானது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சுற்றாடல் அதிகாரசபை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அமைச்சர் இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தப் புதிய திட்டம் உடனடியாக அமுலுக்கு வரும். ஒருவர் மாதாந்தம் 100 கியூப் மணலைப் பெற்றுக்கொள்ள முடியும். நாளாந்தம் உச்சபட்சமாக இரண்டு கியூப் மணலை அகழவோ, கொண்டு செல்லவோ முடியும்.

இதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கும் அதிகாரம் அந்தந்தப் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை அமுலில் இருந்த அனுமதிப்பத்திரங்கள் அதிகாரசபையினால் மாத்திரமே வழங்கப்பட்டு வந்தன. அதிகாரசபையிடம் மாத்திரமே அனுமதிப் பத்திரங்ளைப் பெறவேண்டியிருந்தது.

புதிய சட்டத்தின் படி ஒருவர் வர்த்தக ரீதியற்ற கட்டட நிர்மாணத்துக்கு 35 கியூப் மணல் அல்லது கூழாங்கற்களை அகழவோ கொண்டு செல்லவோ முடியும். பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் சம்பந்தப்பட்ட நபரின் கைவசமிருக்க வேண்டியது முக்கியம்.

பிரதேச செயலாளரால் விநியோகிக்கப்படும் அனுமதிப்பத்திரங்களுக்காக அறவிடப்படும் கட்டணத்தின் பத்து சதவீதம் அக்காரியாலயங்களின் நடப்பு செலவுக்கு வழங்கப்படும். எஞ்சிய தொகை அவ்வப் போது அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். பிரதேச செயலாளர் காரியாலயங்களால் விநியோகிகப்படும் சகல அனுமதிப் பத்திரங்கள் பற்றிய திரட்டு அதற்கென தரப்பட்டுள்ள பத்திரத்தில் கிரமமாகப் பதியப்பட்டு அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

அபிவிருத்திப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வேளையில் பொது மக்களின் சிரமங்களும், நேரவிரயமும் நீக்கப்படவேண்டும். மஹிந்த சிந்தனையின் முக்கியமானதொரு அம்சமான கட்டட அபிவிருத்திப் பணிகளைத் தங்குதடையின்றி முன்னெடுக்கவே பழைய சட்ட திட்டங்கள் தளர்த்தப்பட்டுள்ளன.

நாட்டின் தற்போதைய கட்டட நிர்மாணப் பணிகளுக்கு சுமார் ஒரு கோடி இருபது லட்சம் கியூப் மணல் தேவைப்படுகிறது. ஆறுகளில் மணல் அகழ்ந்தெடுக்கப்படுவதால் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படுவது நிச்சயம். இதற்குத் தீர்வாக கடல் மணலைப் பாவிக்கும் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. கட்டட நிர்மாணங்களுக்கு கடல் மணல் உசிதமானதென பொறியியலாளர்கள் கூறியுள்ளனர்.

அதேவேளை, பொதுமக்கள் மரங்களை வெட்டுவதற்கும், அவற்றை எடுத்துச் செல்வதற்கும் விதிக்கப்பட்டிருந்த சட்டதிட்டங்களும் தளர்த்தப்பட்டுள்ளன. அதற்கமைய தமது வீட்டு வளவுகளில் இரண்டு மரங்களைத் தறித்து ஏற்றிச் செல்வதற்கான அனுமதிப் பத்திரத்தை பிரதேச செயலகத் தில் பெற்றுக்கொள்ளலாம்.

மரங்களைத் தறிப்பதற்கும் கொண்டு செல்வதற்கும் இதுவரை வனப்பாதுகாப்பு அதிகாரிகளிடம் அனுமதி பெறவேண்டியிருந்து. அதன்படி முன்னர் மரமொன்றைத் தறிப்பதற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கு மாதக் கணக்கில் காத்திருக்க வேண்டும்.

புதிய சட்டத்தின் படி பிரதேச செயலாளர் மரங்களைத் தறிப்பதற்கும் போக்குவரத்து செய்வதற்குமான அனுமதியை வழங்க முடியும். அவ்வாறு வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்களின் விவர மடங்கிய திரட்டை வனப்பாதுகாப்புத் திணைக்களத்துக்கு பிரதேச செயலகம் தவறாமல் அனுப்ப வேண்டும் - இப்படி அமைச்சர் யாப்பா தெரிவித்தர்.

இந்த சந்திப்பின்போது சுற்றாடல்துறை பிரதியமைச்சர் பைசர் முஸ்தபா, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவர் சரித்த ஹேரத், தேசிய இரத்தினக்கல் ஆபரணங்கள் சபை யின் தலைவர் அனில் கொஸ்வத்த, மண்ணியல் அகழ்வுப் பணிகள் அதிகாரசபையின் தலைவர் கலாநிதி டபிள்யூ. விஜயாநந்த உட்பட பல உயரதிகாரிகள் கலந்து கொண்டனர். (சி)

## கலாசாரப் பேரவையில் அங்கத்துவத்தைப் புதுப்பித்தல்

யாழ்ப்பாணம், ஒக். 12

வலி.மேற்கு கலாசாரப் பேரவையின் பொதுக்கூட்டம் இம் மாத இறுதியில் நடைபெறவுள்ளதால் இவ்வாண்டுக்கான வருடாந்தச் சந்தாப்பணத்தைச் செலுத்தி உறுப்பினர் தங்களுடைய அங்கத்துவத்தை நாளை மறுதினம் வியாழக்கிழமைக்கு முன்னர் புதுப்பித்துக் கொள்ளுமாறு வலி.மேற்கு பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ற-29)



யாழ். இந்துக் கல்லூரி 'இன்ரக்ற்' கழக மாணவர்கள் 104 பேர் அண்மையில் இரத்ததானம் செய்யும்போது எடுக்கப்பட்ட படம்.
(படம்: கலை, சோபா)

# வரலாற்றை மாற்றி அமைத்த மாணவர்கள்





யாழ்ப்பாணம், ஒக். 12

வடமராட்சி கிழக்கு, மணற்காடு றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவி ஒருவர் வரலாற்றில் முதல் தடவையாக தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றுள்ளார்.

அதேபோன்று, கைதடி சேது காலவலர் வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவரும் 20 வருடங்களின் பின்னர் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளார்.

இந்த மாணவர்கள் இருவரும் வரலாற்றை மாற்றி அமைத்து புதிய அத்தியாயத்தை எழுதி இருக்கிறார்கள் என்று பாடசாலைச் சமூகத்தினர் பாராட்டுத் தெரிவிக்கின்றனர்.

மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த யேசுதாசன் மேரி டியூலின் 167 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார்.

அத்துடன் மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் அதிகூடிய புள்ளிகளையும் இவரே பெற்று முதல் தரமான மாணவியாகவும் வந்துள்ளார்.

கைதடி சேதுகாவலர் வித்தியாலயத்தில் கல்விகற்றுவரும் சிவநாதன் அகிலன் 157 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார்.

நான் பரீட்சையில் சித்தியெய்தக் காரணமாக இருந்தவர் முதலில் எனது தாயார். பாடசாலைவிட்டு வீட்டிற்குச் சென்றதும் இன்று பாடசாலையில் கற்ற பாடங்களைப் பார்ப்போம் என ஆவலோடு பார்த்து, கேட்டு வீட்டுப் பாடங்கள் எல்லாம் சொல்லித்தருவார் எனது தந்தை வாய்பேச முடியாதவராக இருந்தாலும்கூட சைகை மொழியில் எனது கல்வியைப் பற்றி எப்போதுமே அக்கறை காட்டி உற்சாகப்படுத்துவார்.

அதேபோல கல்விப் புலத்தில் எனக்கு மிகவும் விடிவெள்ளியாக இருந்தவர்கள் எனது பாடசாலை அதிபரும் ஆசிரியர்களும்தான். எனது அதிபர் வகுப்பிற்குள் வந்ததும் எனது திறமையைப் பாராட்டி என்னை எப்போதும் உற்சாகப்படுத்திக் கொண்டிருப்பது வழக்கம். - என்கிறான் அகிலன். (உ-236)

## இந்தியாவிற்கு தங்கம் கடத்த முற்பட்ட பெண்கள் கைது!

கொழும்பு, ஒக். 12

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக இந்தியாவிற்குத் தங்கம் கடத்த முற்பட்ட இரண்டு பெண்களை சுங்க அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் சுமார் இருபது இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை இவ் வாறு கடத்த முயற்சித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இரண்டு பெண்களும் சந்தேகத்திற்கு இடமான வகையில் செயற்பட்டனர் எனவும், சுங்கப் பிரிவினர் சோதனைகளை நடத்தியபோது தங்கம் கடத்தப்பட்டமை அம்பலமாகியது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

67 மற்றும் 48 வயதுடைய கொழும்பை வசிப்பிடமாகக் கொண்ட பெண்களே இவ்வாறு தங்கத்தை கடத்தியுள்ளனர்.(சி)

## இளவயது திருமணங்களை நடத்தி வைத்த இருபது விவாகப் பதிவாளர்கள் பணிநீக்கம்

கொழும்பு, ஒக். 12

சட்டத்துக்குப் புறம்பாக இளவயதுத் திருமணங்களைப் பதிவுசெய்த இருபது விவாகப் பதிவாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என பதிவாளர் நாயகம் ஈ.எம். குணசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

விவாகப் பதிவாளர்கள் நியமிக்கப்படும் போதும் 18 வயதுக்கு குறைந்தவர்களுக்கு விவாகப்பதிவு செய்யமுடியாதென சுற்று நிருபம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் களுக்கு வழங்கப்பட்டுள்ள நியமனக் கடிதங்களிலும் இவ்விடயம் மிகத்தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், அந்த நிபந்தனையை சொந்த நலனுக்காகவோ வேறு காரணங்களுக்காகவோ இவர்கள் மீறியுள்ளனர். இதையடுத்தே அவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

நாடெங்கும் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்கள் 1, 500 பேர் பணிபுரிகிறார்கள். விதிக்கப்பட்டுள்ள சட்ட நிபந்தனைகளை மீறி இளவயதுத் திருமணங்களை தன்னிச்சையாகப் பதிவு செய்யும் பதிவாளர்களுக்கு உச்சக் கட்டத் தண்டனையாக அவர்கள் பணி நீக்கம் செய்யப்படுவர்.

அத்துடன் இத்தகைய பதிவாளர்களுக்கு எதிராக பொதுமக்கள் பொலிஸில் முறைப்பாடு செய்து சட்டநடவடிக்கை எடுப்பதற்கும் அனுமதியுண்டு. விவாகப்பதிவாளர்கள் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டிய சட்டதிட்டங்கள் அடங்கிய புதிய சுற்று நிருபம் விரைவில் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் - இப்படி பதிவாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார். (சி)

## தமிழ்ச் சங்க அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வில்

## 'யுத்த நெருக்கடிக்கு மத்தியில் பத்திரிகைப் பணி' மூத்த ஊடகவியலாளர் வித்தியாதரன் உரை

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இடம் பெற்றுவரும் 'அறிவோர் ஒன்றுகூடல்' என்னும் தொடர் நிகழ்வில் 'யுத்த நெருக்கடிக்கு மத்தியில் பத்திரிகைப் பணி' என்ற தலைப்பில் மூத்த ஊடகவியலாளர் ந.வித்தியாதரன் உரை நிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்வு கொழும்புத் தமிழ்ச் சங்கத் தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நாளை புதன்கிழமை மாலை 6 மணியளவில் சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர் உடப்பூர் வீரசொக்கன் தலைமை யில் நடைபெறவுள்ளது. (சி)

## அவிசாவளை ஆடைத் தொழிலகத்தில் ரூ.1கோடி 19 லட். பெறுமதி 'டெனிம்'களவு

கொழும்பு, ஒக். 12

அவிசாவளை, சீத்தாவக்கபுர முதலீட்டு வலயத்திலுள்ள ஆடைத் தொழிலகம் ஒன்றிலிருந்து 1 கோடி 19 லட்சம் ரூபா பெறுமதியான 'டெனிம்' காற்சட்டைகள் களவாடப்பட்டுள்ளன.

இதையடுத்து அங்கு பணிபுரிந்த உயரதி காரி உட்பட மூவர் கொழும்பு மேற்குப் பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவினரால் கடந்த புதன்கிழமை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களவாடப்பட்ட காற்சட்டைகள் ஜா-எலவில் உள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப் பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஜா-எலவில் காற்சட்டைகள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவுக்குக் கிடைத்த தகவலையடுத்து அவ் வீடு சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

குறிப்பிட்ட வீட்டு உரிமையாளரிடம் மேற் கொண்ட விசாரணைகளின்போது, இக் காற்சட்டைகள் சீத்தாவக்கபுர ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் உயரதிகாரியொருவரால் கொண்டு வரப்பட்டன என்றும். அவர் நீண்டகாலமாகத் தனக்கு அறிமுகமானவர் என்றும் தெரிவித்துள்ளனர்.

அதனையடுத்து குறிப்பிட்ட ஆடைத் தொழிற்சாலைக்கு விரைந்த பொலிஸார் சம்பந்தப்பட்ட உயரதிகாரியையும், அவருக்கு உடந்தையாக செயற்பட்ட இரு பணியாளர்களையும் கைது செய்தனர். மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன.

முதலீட்டுச் சபையின் அதிகாரத்தின் கீழ் இயங்கும் இத்தகைய தொழிலகங்களின் உற்பத்திப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படவேண்டுமேயன்றி அவற்றை உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்ய முடியாது.

களவாடப்பட்ட காற்சட்டையொன்றின் பெறுமதி இலங்கை நாணயப்படி 9,000 ரூபா என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## மன்னிப்புக்கோரி தமது கழுத்தை மாத்திரம் தக்கவைக்க பொன்சேகா விரும்பவில்லை

### அப்சரா பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 12

மன்னிப்புக்கோரி தமது கழுத்தை மாத்திரம் தக்கவைத்து கொள்ள தமது தந்தையார் தயாரில்லை - என்று முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவின் மகளான அப்சரா பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் இலங்கை மக்கள் விளையாட்டுப் பிள்ளைகள் அல்லர், அவர்கள் நிச்சயம் சிறந்த முடிவை எடுப்பார்கள் என அப்சரா பொன்கோ மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு தெரிவிப்பதில் ஜே.வி.பிக்குள் முரண்பாடுகள் நிலவுகின்றன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் இதனை மறுத்துள்ள ஜே.வி. பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத், ஜே.வி.பிக்குள் எவ்வித முரண்பாடுகளும் இல்லை எனத் தெரிவித்துள்ளார். (சி)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேஷம்:**
போட்டி, எதிர்ப்புகளைச் சந்திக்கலாம். எந்த விடயத்திலும் அவசரப்பட்டு முடிவு எடுக்க வேண்டாம். திட்டமிட்ட பயணங்களைத் தள்ளி வைக்க நேரிடலாம். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்வீர்கள். மற்றவர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும் நாள்.

**இடபம்:**
உறவினர் அல்லது நண்பர்களுக்கு சில விடயங்களில் வாக்குக் கொடுக்கலாம். பிள்ளைகளின் செயற்பாடுகளைப் பற்றி மற்றவர்களிடம் சொல்லி பெருமை அடைவீர்கள். வியாபாரிகள் இருப்பு சரக்குகளை கூடுதல் விலைக்கு விற்று இலாபம் பெறலாம். தொழில் ரீதியான உங்களின் திறமையை நிரூபிக்க முற்படுவீர்கள். சுகம் பெறும் நாள்.

**மிதுனம்:**
நினைத்ததற்கு மாறாக சில காரியங்கள் நடந்தாலும், எல்லாம் நல்ல விதமாகவே நடக்கலாம். பெரிய மனிதர்கள் சிலர் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். உடன் பணிபுரியும் சிலர் மீது கோபம் கொண்டாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நடந்து கொள்வீர்கள். கொடுத்த வாக்குறுதி யைக் காப்பாற்றுவீர்கள்.

**கடகம்:**
சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும் நாள். வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். நீங்களாக முன்வந்து சிலருக்கு உதவி செய்வீர்கள். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலைமை காணப்படும். பல நாள்களாக செல்ல நினைத்த உறவினர் ஒருவரின் வீட்டிற்கு செல்லலாம். வயிறு, வாயு உபாதைகளுக்கு ஆள் படலாம்.

**சிங்கம்:**
இதுவரை உங்களின் வீட்டிற்கு வராத உறவினர்கள் சிலர் வரலாம். உடன்பிறப்புகளுடன் சிறு மோதல்கள் ஏற்பட்டு பின்னர் சரியாகலாம். சில வேலைகளை அவசரப்பட்டு செய்துவிட்டு, ஏன் செய்தோம் என வருத்தம் அடைவீர்கள். தொழில் ரீதியான பயணங்கள் செல்ல நேரிடலாம். தடை, தாமதம் இருந்தாலும், இறுதியில் காரியம் முடிவிற்கு வரும் நாள்.

**கன்னி:**
மனதில் இனம் புரியாத சந்தோஷம் உற்சாகம் குடிகொள்ளும் நாள். நினைத்த காரியம் ஒன்றை எந்த வழியிலாவது முடிக்க முற்படுவீர்கள். பிரியமான சிலருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். பெண்கள் சிலருக்காக கணிசமான பணத்தைச் செலவிடலாம். மற்றவர்கள் மத்தியில் கௌரவம், மரியாதையாக நடந்து கொள்வீர்கள்

**துலாம்:**
குறுக்கு வழி சிந்தனைகளைத் தவிர்த்து எதிலும் நேர் வழியில் செயற்பட வேண்டும். எதிர்பாராமல் நடக்கும் சம்பவங்களால் எரிச்சல் அடையலாம். அயலாருடன் மனம் விட்டு பேசுவீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள்கள், தின்பண்டங்கள் வாங்கிக் கொடுப்பீர்கள். தாயார் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். கனவுத் தொல்லையுண்டு.

**விருச்சிகம்:**
பம்பரமாகச் சுழன்று பணியாற்றும் நாள். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டும். மனதில் உயர்வான சிந்தனைகள் குடிகொள்ளும். திட்டமிட்ட காரியம் ஒன்று நடக்காமல் போனாலும், திட்டமிடாத காரியம் ஒன்று நடக்கும். பண விவகாரங்களில் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். உற்சாகமான நாள்

**தனுசு:**
அனுபவ அறிவால் சாதனை படைக்கும் நாள். தொழில் ரீதியாக சிலருக்கு உதவி செய்யலாம். துவங்கிய வேலை ஒன்றை மற்றொரு வேலை காரணமாக பாதியில் விட்டு விடலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம். பல நாள்களாக முயற்சித்தும் வராத பணவரவு ஒன்று திடீரென வரும் சூழ்நிலை உருவாகும். திடீர் செலவு நேரும்.

**மகரம்:**
நண்பர்கள் அல்லது உறவினர்கள் தொடர்பான இரகசியம் ஒன்றை அறிந்து கொள்வீர்கள். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். சிலர் உங்களைப் பாராட்டி பேசி காரியம் சாதிப்பர். குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் நிலவும். உத்தியோகத்தர்களுக்கு செல்வாக்கு கூடும்.

**கும்பம்:**
பெண்கள் வழியில் அனுகூலமான உதவி கிடைக்கலாம். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர் உங்களைத் தேடி வரலாம். பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள். எதிர்பாராத வகையில் பணவரவுகளைப் பெறலாம். வேலை யில் கடுமையாக இருந்தாலும், அனைத்தையும் ஊக்கத்துடன் செய்து முடிப்பீர்கள். வெற்றிகரமான நாள்.

**மீனம்:**
இரண்டு நாள்களாகத் தடைபட்ட வேலை ஒன்று நடக்கலாம். தொழில் ரீதியான கூட்டங்கள், நிகழ்ச் சிகளில் பங்கேற்கலாம். விரும்பாத ஒருவரை முக்கி யமான இடத்தில் சந்திக்கலாம். சக ஊழியர்கள் சிலர் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். எதிர்காலத்திற்கு பயன் தரும் வகையிலான காரியம் ஒன்றைச் செய்வீர்கள்

# யாழ். பாடசாலைகளின் புலமைப் பரிசில் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.12

2010ஆம் ஆண்டு, தரம் 5 புலமைப்பரிசில் பெறு பேறுகள் அண்மையில் வெளிவந்துள்ளன. எனவே சித்தியடைந்த மாணவர்களின் விவரங்களை உதயன் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகிறது. ஒரு தொகுதி மாணவர் விவரம் வருமாறு:

**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி**

ய.அபிராஜ்- 167, கோ. சங்கீராணி- 164, வி.ஜனார்த்தனி - 161, சோ. நிலோத்தமன்- 160, ப. சாரங்கி- 158, க. ஜனார்த்தனன்- 155, து. ரூபவதனா- 155, ர. கீர்த்தனா- 155, ச. நவரங்கன்- 154, சி. பிரியங்கன்-154, சு. அனுசன்- 153, சி. நிலோஜனா- 153, மு. பவப்பிரியன்- 151, தே. அபிசாந்- 151, கா.பானுஜன்- 150, இ. சைலஜா- 148, ஸ்ரீ. ஸ்ரீகரன்- 147, க.நீதிகா- 146, சு.ஜெர்லின் கிறேசியா- 143, ர. நிரஞ்சன்- 143.

**சென். ஜோன்ஸ் றோ.க. மகளிர் பாடசாலை**

ஜோ. கர்மி- 146, டி.பிரவினா- 145.

**அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி**

க.லிதுர்ஷன்- 178, ச. கபோனா தேவநாயகம்- 168, ஸ்ரீ.திபிஸ்னா- 164, கி.சுரேண்யா- 157, சோ. ஸ்ரீவக்சினி- 153, த. கோபிதன்- 151, லோ.தர்சிகா - 151, ஜெ. டிலக்ஷி ஜீவரன்- 147, ம. நிலக்ஷன்- 146, ம.அம்ஷிகா- 146, த.ஜனவிகா- 145, மோ. கொலின்- 145, ஜெ. நதீசன்-144.

**மாரீசன்கூடல் றோ.க.த.க.பாடசாலை**

எஸ்.ஆன்லக்ஷிகா- 157, பெ. நிக்சன்- 149.

(201-51-11)

# எச்.ஐ.வி. தொற்றுக் காரணமாக இலங்கையில் 1,249 பேர் பாதிப்பு

கொழும்பு, ஒக். 12

இலங்கையில் 1,249 பேர் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தொற்றுக்கு உள்ளாகும் பெண்களில் 50 சதவீதமானவர்கள், அவர்களின் கணவன் மூலமே தொற்றுக்கு உள்ளாகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியகத்தின் வைத்தியர் சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான ஆண்கள் வெளிநாடுகளில் இருந்து விடுமுறையில் தாயகம் வரும்போது இந்தத் தொற்றை அவர்களது மனைவியருக்கு ஏற்படுத்துகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து வரும் ஆண்கள் தமது மனைவியருடன் உடலுறவு கொள்ளும்போது உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கையில் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகுபவர்களில் 94.8 சதவீதமானவர்களுக்கு உடலுறவு மூலமே தொற்று ஏற்புடுகிறது என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் முதலாவது எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளானவர் 1986 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டார்.

அதன் பின்னர் இந்த வருடம் ஜூன் 2010 ஆம் ஆண்டு நிறைவடைந்த காலப்பகுதியினுள் 1,249 பேர் இந்த தொற்றிற்கு உள்ளாகியுள்ளனர்.

இவர்களில் எய்ட்ஸ் நோய் தொற்றுக்கு 316 பேர் உள்ளாகியுள்ளனர் என உத்தியோகபூர்வத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (சி)

# கொமன்வெல்த் போட்டிகள் இறுதிநாள் நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த பங்கேற்பு

## நாளை மறுதினம் வியாழக்கிழமை டில்லி பயணம்

கொழும்பு, ஒக். 12

மஹிந்த ராஜபக்ஷ இரண்டு நாள் பயணமாக நாளை மறுதினம் வியாழக்கிழமை இந்தியா செல்லவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

டில்லியில் தற்போது நடைபெற்று வரும் கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் நிறைவுநாள் நிகழ்வில் பங்கேற்பதற்காகவே இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியா செல்லவுள்ளார்.

புதுடில்லி ஜவகர்லால்நேரு விளையாட்டரங்கில் நடைபெறும் இறுதிநாள் நிகழ்வில் பங்கேற்கும் அவர் மறுநாள் கொழும்பு திரும்பவுள்ளார். மஹிந்த ராஜபக்ஷவுடன் அவரது செயலாளர் லலித் வீரதுங்கவும் டில்லி செல்லவுள்ளார் எனத் தெரியவருகிறது.

வரும் வியாழன் மாலை நடைபெறும் கொமன்வெல்த் இறுதிநாள் நிகழ்வில் மஹிந்த ராஜபக்ஷவுடன் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் இணைந்து கொள்வார் என்றும் அவர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு முன்னதாகவே டில்லி செல்வார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# கொழுப்புக் குறைந்தால்!



''வைத்தியர் உடம்பைக் குறைப்பதற்கு ஒரு வழி இருந்தால் சொல்லுங்கள்'' என ஒருவர் கேட்டார்.

''ஏன்? இப்போது உங்களுக்கு ஏதாவது பிரச்சினையா?'' என்று கேட்டார் வைத்தியர்.

''ஆமாம் இந்த உடம்பால் எனக்குப் பெரிய தொந்தரவு!''

''எங்கு போனாலும் என்னோடு உடல் வருகிறது!'' என்று கூறினார் அவர்.

'' உடல் என்றால் அப்படித்தான்... அதற்காகக் கவலைப்படலாமா? உடலில் கொழுப்புச் சத்து அதிகமானாலும், குறைந்தாலும் இடைஞ்சல்தான்!'' என்று கூறினார் வைத்தியர்.

''என்ன சொல்கிறீர்கள்'' என்று அவர் கேட்டார்.

''உடலில் கொழுப்புச் சத்து குறைவாக உள்ளவர்கள் அடிக்கடி மனம் உடைந்து போவார்கள்;தற்கொலை செய்ய நினைப்பார்கள்; அசட்டுத் தனமான துணிச்சல் இவர்களுக்கு இருக்கும்;அதனால் பல விபத்துக்களில் சிக்கக் கூடிய நிலைமை ஏற்படும்.'' என்றார் வைத்தியர்.

''இப்பொழுதுதான் எனக்கொரு உண்மை புரிந்தது. சிறிது நாள்களாக எனது வீட்டுக்காரருக்குக் கொழுப்புச் சத்து ஆகாரம் கொடுக்காமல் வைத்திருந்தேன். நேற்று என்ன ஆனது தெரியுமா...? நீச்சல் குளத்தின் மேலே ஏறி நின்றபடியே திடீரென 'டைவ்' அடித்துவிட்டார்'' என்று கூறினார் அவர்.

'' அது துணிச்சல்தானே!'' என்று கூறினார் வைத்தியர்.

'' இல்லை. அசட்டுத் துணிச்சல்!'' என்றார் அவர்.

''ஏன்'' என்றார் வைத்தியர்.

'' அந்த நேரத்தில் நீச்சல் குளத்திலே தண்ணீரே இல்லை!'' என்று கூறினார் அந்த நபர்.

**கோ.சுவாமிநாதன்.**

# வேறுபட்ட பார்வை மாறுபட்ட உணர்ச்சி



சூரபன்மன் மகன் பாறுகோபன் தேவயோகத்தை எரித்து இந்திரன் மகன் ஜயந்தனை சிறைப்பிடித்தான். கைகள் கட்டப்பட்டு துண்டிக்கப்பட்டன. சுகபோக வாழ்கை வாழ்ந்த தனக்கா இந்தக் கதி என அழுதான் ஜயந்தன்

சிவபெருமானைத் தொழுதான். ஆறுதல் அடைந்தான். ஏன் இந்த நல்லறிவு அவனுக்கு முன்பே ஏற்படவில்லை. அது இராமனிடம் இருந்தாக கம்பன் படைக்கிறான். பரதன் இராமனை அழைத்து நாளை உனக்கு அரச பதவி என்றார். இராமன் மகிழவும் இல்லை, வெறுக்கவும் இல்லை.

அரண்மனை அந்தப்புரம் முடிவை மாற்றியது. இராமன் 14 வருடம் வனவாசம் செய்வது என்பதாக இருந்தது அந்த முடிவு. அப்போதும் துடிக்கவில்லை இராமன்.


இராமன் மனதில் வனவாசம் ஒரு புதிய அனுபவமாக இருந்தது. தவிர, அவன் அதனை அரண்மனை வாழ்வோடு ஒப்பிடவில்லை.

அறம் சம்பந்தப்பட்ட விடயங்களிலும் இப்படித்தான் உயர்ந்தவரோடு ஒப்பிட்டு நாமும் நம்மை உயர்த்த வேண்டும்.

**சுகி.சிவம்.**

# திருத்தப்படாத வீதியும் பொருத்தப்படாத பாலமும்

கல்லாகக் கிடந்த அகலிகை இராமபிரானின் பாதம் பட்டுச் சாபம் நீங்கினாள் என்கிறது இராமாயணம்.



கைதடி கோப்பாய் B- 268 வீதியில் அமைக்கப்பட்ட பாலத்தின் பக்கமுள்ள வீதிகள் சாப விமோசனம் பெறவேண்டுமாயின் இங்கும் ஒரு இராமபிரான் வரவேண்டும் போலுள்ளது. இராமபிரானைத் தேடிக் கனதூரம் அலைய வேண்டியதில்லை. வீதி அமைக்கும் பணியிலுள்ளோர் இங்கே எமது கண்முன்தான் உலா வருகின்றனர். வீதி அகலிப்பு என எங்கெங்கோவெல்லாம் பணி செய்யும் இவர்களுக்கு இவ்வீதியின் பாலத்தைப் பொருத்துவதற்கு மட்டும் பல வருடங்கள் சென்றன.

ஆனாலும் வீதியை நிர்மாணிக்கத்தான் இவர்களுக்கு மனம் வரவில்லை.

2006 ஆம் ஆண்டு முற்பகுதியில் இவ்வீதியில் பழுதடைந்த பாலம் புனரமைப்புக்காக உடைக்கப்பட்டது. பாலம் நிர்மாணிக்கவென இரும்புருக்குப் பொருத்துக்களும் அடுக்கப்பட்டன. எனினும் அந்த வருடம் ஒகஸ்ட் 11 இல் யுத்தம் மீளத்தொடங்கியதால் இப்பாதை மூடப்பட்டது.

2009 ஜனவரி 02 ஆம் திகதியன்று படையினரால் இவ்வீதி பொது மக்களின் பாவனைக்கெனத் திறந்து விடப்பட்டது. 2009 ஆம் ஆண்டு முழுவதும் பாலம் அமைக்காது சிறு கட்டுமான வேலைகளை மட்டுமே செய்து காலம் கடத்தப்பட்டது.

இவ் வருடமும் ஊடகங்கள் கொடுத்த தொந்தரவு தாங்க முடியாததால் ஒருவாறு பாலம் பொருத்தி முடிக்கப்பட்டது. ஆனால் வீதி நிர்மாணிப்புப் பணிகள் பழைய படி ஆமைவேகத்திலேயே நகர்கின்றன.

பருவ மழையும் உருவ நடைபோடத் தொடங்கிவிட்டது.

இவ்வருடமும் வேலைகள் நிறைவு செய்யாமல் காலம் கடத்தும் பணி கன

*தென்மராட்சி, சிவகாமி*

கச்சிதமாக நிறைவு செய்யப்படுகின்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கி இந்த வேலைத் திட்ட நிர்மாணிப்புக்கென 6.8 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளதாகப் பத்திரிகைச் செய்தி ஒன்றும் வந்தது.

இவ்வேலை தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயரதிகாரிகளிடம் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டோம். யாழ்.பருத்தித்துறை வீதி அகலிப்புப் பணிகளில் ஈடுபடும் ஒப்பந்ததாரர்தான் இவ்வேலையைப் பொறுப்பெடுத்துள்ளதாகவும் அவர் அவ்வேலையில் ஈடுபடுவதால் இந்தப்பணியில் ஈடுபடத் தாமதம் ஆகின்றது என்றும் காரணம் கூறுகின்றார்கள்.

எனவே பருத்தித்துறை வீதி அகலிப்புப் பணிகள் முடிவடைந்த பின் தான் குறித்த ஒப்பந்தகாரரின் கடைக்கண் பார்வை இங்கே திரும்பும் போலுள்ளது.

அமைச்சர்கள், பிரதானிகள், அரச உயரதிகாரிகள், வடமாகாண ஆளுநரின் வாகனங்கள் இப்பாதையால் இன்னும் செல்லத் தொடங்கவில்லை என்பதால்தான் இந்தப் புறக்கணிப்போ?

வலிகாமத்தையும் தென்மராட்சியையும் நாட்டின் ஏனைய பகுதிகளுடன் இணைக்கும் மிக முக்கிய இரு வீதிகளில் இதுவும் ஒன்று.

இப் பாதையைப் பயன்படுத்த



முடியாமல் பெருமளவு வாகனங்கள் யாழ். நகரப் பகுதிகள் ஊடாக ஏனைய பிரதேசங்களுக்குப் பயணிப்பதுவும் தற்போது ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடிகளுக்கு ஒரு காரணமாகும்.

இவ் வீதியில் பாலத்துக்குப் பதிலாக அமைக்கப்பட்டுள்ள உட்பாதையில் கத்தி போல நீட்டிக் கொண்டு நிற்கும் கற்களால் வாகனங்களின் ரயர், ரியூப் என்பன பதம் பார்க்கப்பட்டு அவதிப்படும் வாகன உரிமையாளர்களது துன்பங்கள் தொடர்கதையாகவே நீள்கின்றன.

கடலினுள் தவறிப் பாயும் சைக்கிள், மோட்டார் சைக்கிள்களின் சோகமும் முடிந்த பாடாயில்லை. கடும் காற்று வீசும் காலங்களில் விழுந்து விபத்துக்குள்ளாகிக் காயப்பட்ட சைக்கிள்காரர்களின் ஏழ்மைக்குரல்கள் அதிகாரிகளுக்கு இன்னும் காதில் விழவில்லை.

இப்பாதையின் நிர்மாணத்துடன் தொடர்புபட்ட அதிகாரிகள் இவ்வேலைத் தாமதத்தின் காரணங்களை நியாயங்களுடன் முன்வைக்க வருவார்களா?

யாழ்ப்பாண மாவட்டத்தில் எத்தனையோ பாதைகள் வேகவேகமாக அபிவிருத்தி செய்யப்படும்போது இப்பாதைக்கு மட்டும் ஏன் தொடர் புறக்கணிப்பு?

மாரிகாலம் பெருமழையோடு நெருங்கிவரவுள்ளது. வீதியைச் செப்பனிடப் போட்ட சொற்ப மண்ணையும் மழை அள்ளிப் போகப் போகிறது. அடுத்த வருடமும் புதிய மதிப்பீடு, புதிய வேலையெனக் காலம் கடத்தப் போகிறார்கள் போலவே தெரிகின்றது. அவசர அவசியம் கருதி இவ்வீதி நிர்மாணிப்பைப் பொறுப்பு வாய்ந்தோர் நிறைவேற்ற வேண்டும்.

# பிள்ளைகளை ஏன் சுமை தாங்கிகளாக்குகிறோம்?

தரப்படுத்தலுக்கு எதிராகக் குரல் கொடுத்த மண்ணில் இன்று தரப்படுத்தல் வேண்டும் எனக் குரல் கொடுக்கும் துர்பாக்கிய நிலைமை கல்வித்துறையில் ஏற்பட்டுள்ளமை ஒரு கவலைக்குரிய விடயமேயாகும்.

கல்விக்கு முன்னோடியாகவும் இலக்கணமாகவும் இருந்த தமிழ் மக்களின் கல்வி என்பது இன்று பெரும் கேள்விக்குறியாகியுள்ளது.

இந்த வகையில் அண்மையில் வெளியான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் எமது கல்வியின் எதிர்காலம் எங்கே செல்கின்றது என்பதற்குக் கட்டியம் கூறிநிற்கின்றது.

கடந்த காலங்களில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் தமிழ் மொழி மூலம் பரீட்சார்த்திகளில் தேசிய மட்டத்தில் முதல் மூன்று இடங்களில் ஓர் இடத்தையேனும் யாழ்.மாவட்ட மாணவர்கள் பெற்றுக் கொள்வது வழமையான விடயம்.

யுத்த சூழல், போக்குவரத்துக்குக் கஷ்டங்கள், மின்வெட்டு போன்ற பல்வேறு வசதியீனங்கள் இருந்தாலும் எமது மாணவர்கள் தமது திறமைகளையும் ஆற்றல்களையும் வெளிப்படுத்தி, தேசிய மட்டத்தில் இடம் பிடித்துக் கொள்வார்கள்.

இம்முறை தேசிய மட்ட வெட்டுப் புள்ளி அடிப்படையில் 13 ஆவது மாவட்டமாகவும் வடக்கு, கிழக்கு மாவட்டகளில் மூன்றாவது மாவட்டமாகவும் யாழ்ப்பாணம் பின்னால் தள்ளப்பட்டுள்ளது.

பெற்றோர் தமது பிள்ளைகளைத் தரம் 5 பரீட்சைக்குக் குறைந்தது இரண்டு வருடங்களுக்கு முன்னரே தயார் படுத்தத் தொடங்குகின்றார்கள்.

பிள்ளைகள் சுமக்க முடியாத பாரத்தை ஏன் சுமக்கிறோம் என்பது தெரியாமலே சுமக்கின்றார்கள்.

காலையில் தனியார் கல்வி நிலையங்கள் அல்லது வீட்டிற்கு வரும் ஆசிரியரின் பிரத்தியேக வகுப்பு அல்லது அயல் வீட்டில் குழு வகுப்பு.

பின்னர் பாடசாலை. பிற்பகல் மீண்டும் தனியார் கல்வி நிலையம். சாப்பாடுகூட சில சந்தர்ப்பங்களில் பஸ்சில் அல்லது வீட்டு வாசலில்தான். சிலவேளைகளில் அயலில் உள்ள கடையில் உணவை வாங்கிக் கொடுத்து பிள்ளைகளைப் படிக்க அனுப்பி, தனியார் கல்வி நிலையத்தின் வாசலில் பெற்றோர் தவமிருக்கின்றனர்.

பெற்றோர் தமது கடமைகள், பொறுப்புக்களை மறந்து, கல்லூரிகள், பாடசாலை வாசல்களின் முன் தவமிருந்து பிள்ளைகளைக் கொண்டோடித் திரிந்தமைக்கான பலனை அனைத்துப் பெற்றோர்களும் அடைந்தார்களா? என்றால் அதற்கு இல்லை என்பதே பதிலாகக் கிடைக்கும்.

சராசரியாக, அமைதியாக சிறிய பாடசாலையொன்றில் கற்ற பிள்ளையும் சரி, பல ஆயிரங்களை அள்ளிக் கொடுத்து, பல மைல்கள் கடந்து பிரபல பாடசாலைகளிலும் தனியார் கல்வி நிறுவனங்களிலும் கற்ற பிள்ளையும் பரீட்சையில் ஏறக்குறைய ஒரேயளவான புள்ளிகளையே பெற்றுள்ளார்கள்,

வெறுமனே பிஞ்சு உள்ளங்கள் மீது பெற்றோர்கள் தமது ஆசைகள், விருப்பங்கள், கௌரவம் என்பவற்றைத் திணிக்க முற்பட்டு, அவர்களை உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் சோர்வடையச் செய்கிறார்கள். அத்துடன்

**வில்லவன்**

சிறு வயதிலேயே கல்வியின் மீது வெறுப்பையும் பெற்றோர்கள் மீது ஆத்திரத்தையும் விரக்தியையும் மாணவர்களிடத்தில் உண்டாக்கியதுதான் மிச்சம்

காலையில் 7.45 மணிக்கு பிள்ளைகளை நீண்டதூரம் ஏற்றி வந்து பாடசாலைகள், கல்லூரிகளில் விட்டு விட்டு மீண்டும் ஒன்றரை மணியாளவில் அலுவலகத்தை விட்டு வெளியேறி பிள்ளைகளுக்காகக் காத்திருந்து தனியார் கல்வி நிலையத்தில் விட்டு, மக்கள் சேவைக்குத் 'தண்ணி காட்டிய' அலுவலர்களின் பிள்ளைகளும் கூட தேசிய மட்டத்தில் எதனையும் சாதிக்கவில்லை.

இதேவேளை கிராமப்புறங்களில் அமைதியாகக் கிடைத்ததைப் பயன்படுத்தி கற்ற பிள்ளைகள் பல நூறு பேர் குறிப்பிட்ட பரீட்சையில் தமது இயற்கையான ஆற்றல் திறமைகளை வெளிப்படுத்தி, சிறந்த பெறுபேற்றை பெற்றுவிட்டு அமைதியாக இருக்கின்றார்கள்.

பிள்ளைகளைச் சுயமாகச் சிந்திக்கும் ஆற்றலை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்களை வழங்க வேண்டியது பெற்றோர்களினதும், ஆசிரியர்களினதும் கடமையும் பொறுப்பும் ஆகும்


அதனை விடுத்து இயந்திரங்கள் போன்று பாடமாக்கியும், சொன்னதைச் சொல்லும் கிளியைபோலவும் வழி காட்டினால், மாணவர்கள் சுயமாகச் சிந்திக்கும் ஆற்றலை இழந்து அடுத்தவரை நம்பி வாழும் நிலைமை உருவாகிவிடும் என்பதையும் நாம் அனைவரும் புரித்து கொள்ள வேண்டும்; ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எதிர்காலத்திலேனும் பிள்ளைகள் மீது சுமைகளை ஏற்றி, வேடிக்கை பார்த்து, அவர்களின் சுயகற்றல் செயற்பாட்டுக்கு வழிவிட்டு ஊக்குவித்தால் மீண்டும் நாம் தேசிய வீரர்களாகத் திகழ முடியும் எனபதில் சந்தேகம் இல்லை.

# இரண்டாம் ஆண்டின் நினைவலைகள்

மண்ணில் மழலையாய் 14.04.1976

விண்ணில் தெய்வமாய் 03.10.2008



சரவணையூர் அமரர்

## சபாரத்தினம் சசிகுமார் (சசி) (B.com)

திதி: பஞ்சமி (12.10.2010)

ஈராண்டுகள் சென்றாலும் எம் இருவிழிகள்
இன்னும் காயவில்லை
காலமெல்லாம் உன் நினைவோடு
கழிக்கின்றோம் இவ்வாழ்வுதனை
எங்கு நீ சென்றாலும் எம்மோடு
கலந்து விட்டாய் ஐம்பூதமாகி
நீண்ட கால கனவுகள் நனவாக
நீ மீண்டும் வருவாய் மழலையாய் இம் மண்ணில்.

இந்நாளில் உன் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
அம்மன் வீதி, சிவாஸ் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(104448)

# அதிபர்களுக்கான கூட்டம்

புலோலி, ஒக்.12

வடமராட்சிக் கல்வி-வலய அதிபர்களுக்கான 'பாடசாலைகளை வகைப்படுத்தல்' சம்பந்தமான கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குப் புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-190)

# வடமராட்சி கிழக்கு கடலுணவு வகைகள் வெளியூர் சந்தைகளுக்கு

வடமராட்சி கிழக்கு, ஒக்.12

வடமராட்சி கிழக்கிலிருந்து கிளிநொச்சி, சாவகச்சேரி ஆகிய இடங்களிலுள்ள சந்தைகளுக்கு கடலுணவுகள் எடுத்துச் செல்லப்படுகின்றன.

இக் கடலுணவுகளை வியாபாரிகள் எடுத்துச் செல்வதற்கு வசதியாக ஆழியவளையிலிருந்து கிளிநொச்சிக்கும் சாவகச்சேரிக்கும் இரண்டு தனியார் வாகன சேவைகள் நடத்தப்பட்டு வருகின்றன. (ஒ-190)


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1978 விசாகம், சொந்தமாக அச்சுக்கூடம் நடத்தும் மணமகனுக்கு A/L படித்த கணனி அறிவுள்ள அழகிய மணமகள் தேவை.
அர்ச்சயா சுப மாங்கல்யம், உருத்திரபுரம்.
தொ.பே:- 0213200287 (இரவு 7 மணிக்குப் பின்)

## THE ROYAL COLLEGE OF JAFFNA

ஆங்கிலத்தில் சிறந்த புள்ளிகள் பெற
ஆண்டு 6-10 வரை சனி, ஞாயிறு
மாலை 7.30 மணி. ஆண்டு 11-13 வரை
திங்கள், செவ்வாய் மாலை 7.30 மணி.
By: விக்னேஸ்வரன் ஆச்சாரி,
பிளாக் வீதி, சங்கானை. Tel. 0776751649.
(104526)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகருக்கு அண்மித்ததாக கே.கே. எஸ். வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதி, மானிப்பாய் வீதி ஆகியவற்றுக்கு அருகில் குடும்பமொன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 0770570050
(சி/571844)


# 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 16.07.1946
மறைவு: 16.09.1985

## சின்னப்பு குணசிங்கம்

அன்பின் வடிவமாய் அறிவின் சுடராய்
தயாள குண உருவாய் தரணிபோற்ற
வாழ்வு கண்டு
எங்களையும் நல்வாழ்வு காண வைத்த
எங்கள் அன்புத் தெய்வமே!
இறை நிழலில் இன்பமுத்தி நிலைபெற்று
அமைதி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நினைவில்:
கு.செல்வரத்தினம் (மனைவி),
சுயேந்திரன்-டயானா (மகன் குடும்பம்),
சதாயினி - சுதாகர்
(மகள் குடும்பம், லண்டன்),
தர்மினி (மகள்-லண்டன்),
குயிந்தா- மணிவண்ணன்
(மகள் குடும்பம், கொழும்பு).

3 ஆம் கட்டை,
சிங்கராயர் வீதி, கல்வியங்காடு.

# 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திரு.திருமதி
## மகேசன் மாணிக்கம்

மலர்வு: 14.08.1923
அஸ்தமனம்:10.10.1994

'அன்பாலும் பண்பாலும் எமை ஆண்டதாயே
அவனியில் உனக்கு நிகர் என்றும் நீயே'

அன்புடன் நினைவு கொள்ளும்:
பிள்ளைகள்: ம.செல்வரத்தினம்,
ம.பரிமளசிங்கம், ம.இராசரத்தினம்,
ம.ஸ்ரீதரன், ம.ஸ்ரீரங்கன் மற்றும் மருமக்கள், பேரமக்கள்,
பூட்டமக்கள், சகோதரர், மைத்துனர்மார்.

47/1, நொத்தாரிஸ் லேன்,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

தகவல்:
எம்.சிறிதரன் (சுதா).

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
24.03.1944

மறைவு
23.09.2009

அமரர்
## விசியரட்ணம் சரஸ்வதி

### ஆண்டொன்று ஆனாலும் ஆறுமோ துயர் !

பாரியோடும் கொடைபோகப் பார்த்தனொடும்
கணை போகப் படர்ந் தவல்வில்
ஓரியோடும் அறம்போக உலகமறை
வள்ளுவனோ டுரையும் போக
வாரி நறுங் குழல் சூடும் மனைவி சரஸ்வதி யோடும்
சுவைபோக மன்னவன் விசியரட்ணம்
காதலோடு கண்ணீருடனும்
மரணம் இயற்கையின் ஜனனமன்றோ

கட்டியதோர் திருவாயிற் காற்பணமும்
பச்சரிசி களைந்தும் போட்டு
வெட்டியதோர் கட்டையினில் களிமண்ணால்
வீடொன்றும் விரைந்து கட்டி
முட்டியுடைத் தொரு பிள்ளை முன் செல்ல
தீக் காம்பு முனைந்து நிற்க
பெற்ற செல்வங்கள் துடித்துத் துளல
ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறுமோ துயர்!

அறவழி வாழ்க்கை பண்பு
அகம் புறந் தூய்மை வாய்மை
உறவுபார்த் துண்ணல் கையில்
உளவரை பகிர்ந்து வாழ்தல் இவை
சரஸ்வதி வாழ்வில் கொண்ட உயர் குணங்களாம்
தர்மராஜன் அழைத்திட்டான்
காரை கணபதி தாளில்
என்றும் இருப்பதற் கன்றோ?

இல.59, இரட்ணகார மாவத்தை,
தெகிவளை.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# கோதுமை மா விலை உயர்வால் தோட்டத் தொழிலாளர்கள் அவதி

களுத்துறை, ஒக். 12

கோதுமை மாவினால் தயாரிக்கப்படும் பாண் மற்றும் உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

இதன்காரணமாக களுத்துறை மாவட்டத்தில் தோட்டத் தொழிலாளர்கள தாம் பலத்த சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கோதுமையால் தயாரிக்கப்படும் பண்டங்களின் விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது எனக் களுத்துறை, மத்துகம, புளத்சிங்கள, அகலவத்தை, ஹொரணை மற்றும் இங்கிரிய பிரதேச பேக்கரியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தோட்டப்புற மக்கள் கோதுமை மாவையே அதிகம் பாவித்து வந்தனர். எனினும், தற்பொழுது அரிசி விலை குறைந்துள்ளதால் மூன்று வேளையும் சோற்றை உண்பதை பழக்கமாகக் கொண்டுள்ளனர்.

''ஒரு கிலோ மா அல்லது இரண்டு இறாத்தல் பாண் வாங்குவதை விட இரண்டு கிலோ அரிசி வாங்குவது மேல்'' என அவர்கள் தெரிவிக்கின்றனர். அரிசி விலை குறைந்துள்ளமை குறித்து தொழிலாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். (ளி)





## தொழிலாளர்களின் கால்நடைகள் திருட்டு

கொழும்பு,ஒக். 12

களுத்துறை மாவட்டத்தில் புளத்சிங்கள, ஹொரணை, மத்துகம, இங்கிரிய போன்ற பிரதேசங்களில் உள்ள தோட்டத் தொழிலாளரின் ஆடு,மாடு ஆகிய கால்நடைகள் அடிக்கடி திருட்டுப் போகின்றனவெனக்கூறப்படுகின்றது.

பகல் வேளைகளில் வீடுகளில் எவரும் இல்லாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கோழிகள் திருடிச் செல்லப்படுகின்றன. ஆடு, மாடுகள், மலைகளில் மேயும் பொழுது திருடப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ளி)



அமெரிக்காவில் கூட்டு சக்தி மத்திய நிலையத்தில் செப்ரெம்பர் 28 ஆம் திகதிவரை நடைபெற்ற உலக கால்நடை கருத்தரங்கில் கால்நடை கிராமிய அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் கலந்து கொண்டிருந்தார். விஸ்கொன்ஸ்டின் கால்நடை வளர்ப்பாளர் சங்க நிறைவேற்றுச் செயலாளர் ஜில் அல்வ்பால் அமைச்சர் வரவேற்கப்படுவதை படத்தில் காணலாம்.

# காதலனுடன் சேர்ந்து பிள்ளைகளை சித்திரவதை செய்த தாய் கைது!

கொழும்பு,ஒக். 12

கள்ளக் காதலனுடன் சேர்ந்து தனது பிள்ளைகளைச் சித்திரவதை செய்த தாயையும், அவரது கள்ளக் காலதனையும் கண்டி புலனாய்வுப் பொலிஸார் கடந்த வியாழக்கிழமை கைது செய்துள்ளனர். கட்டுகஸ் தோட்டை, ஹமங்கொட, ரிட்டிகஹாபொல பிரதேசத்திலுள்ள வீடொன்றில் தற்காலிகமாக வாசம் செய்து வந்தபோதே இவ்விருவரும் கைது செய்யப்பட்டனர். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

இப்பெண்ணுக்கு திருமணமாகி இரு ஆண் பிள்ளைகள் உள்ளனர். கணவர் அவர்களை விட்டுப் பிரிந்துவிட்டார். கள்ளக்காதலனுடன் வெவ் வேறு இடங்களில் தற்காலிகமாகத் தங்கி பொழுது போக்கிக் கொண்டிருந்தநிலையில் பிறந்த குழந்தை ஒன்றை ஒருவருக்கு இருவரும் விற்றுள்ளனர்.

அவ்வப்போது பெண்ணின் சொந்த வீட்டுக்கு வரும் காதலன் இரு பிள்ளைகளையும் தீயால் சுட்டும் அடித்தும் துன்புறுத்தியுள்ளார்.

கண்டி புலனாய்வுப் பிரிவுக்கு அயலவர்கள் தெரிவித்த தகவலையடுத்து குறிப்பிட்ட வீட்டை பொலிஸார் சோதனை செய்தபோது பிள்ளைகள்மாத்திரமே இருந்துள்ளனர்.

அவர்கள் மீது சித்திரவதைக்கான அடையாளங்கள் தென்பட்டன. அதனைத் தொடர்ந்து பொலிஸார் பல நாள்களாக சிவில் உடையில் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பின் இவ்விருவரும் கட்டுகஸ் தோட்டையில் தற்காலிகமாக தங்கியிருந்த வீட்டில் வைத்துக்கைது செய்யப்பட்டுள்ளனர்.

இப்பெண்ணின் காதலன் ஏற்கனவே திருமணமானவர். அவருக்கு 10,4,ஒரு வயதுகளில் மூன்று பெண் குழந்தைகள் உள்ளன எனத் தெரிய வந்துள்ளது.(ளி)

# பெருந்தோட்டப் பாடசாலை அபிவிருத்திக்கு ஜப்பான் நிதி

நுவரேலியா, ஒக். 12

மத்திய மாகாணத்தில் உள்ள பெருந்தோட்ட சிறுவர் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு ஜப்பான் அரசு இரண்டு கோடி ரூபா நிதி வழங்கியுள்ளது.

நுவரெலிய மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைக் கட்டடங்களை அபிவிருத்தி செய்து முந்நூறுக்கும் அதிகமான பிள்ளைகள் அமர்ந்து கற்கும் நோக்கில் அவை விஸ்தரிக்கப்படும்.

மேலும் 12 சிறுவர் பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணங்கள் பெற்று கொடுக்கப்படும்.

பெருந்தோட்டப் பகுதியில் உள்ளபாலர் பாடசாலைகளில் உள்ள குறைபாடுகளை நீக்கி அவற்றை சிறந்த முறையில் இயங்கவைப்பதற்காக ஜப்பான் அரசு இந்த நிதியை வழங்கியுள்ளது. (ளி)

# சிறுவர்களைத் தொழிலுக்கு அமர்த்துவதை தவிர்க்குமாறு பெற்றோருக்கு வேண்டுகோள்

மட்டக்களப்பு, ஒக்.12

சிறுவர்களைத் தொழிலுக்கு அமர்த்துவதை எமது பிரதேசத்தில் பெற்றோர்களும், முதலாளிமாரும் முற்றாகத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனக் கோறளைப்பற்று பிரதேச செயலாளர் எஸ்.கிரிதரன் சிறுவர் தின விழாவில் பேசுகையில் வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி,இவ்விழாவாழைச்சேனை இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.

'எஸ்கோ' நிறுவனத்தின் வாழைச்சேனை மற்றும் சந்திவெளி சிறுவர்களது வலையமைப்புத் தலைவர் வீ.லக்கிராஜ் இதற்குத் தலைமை வகித்தார்.

கிரிதரன் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டவை வருமாறு:-

கடந்த காலத்தில் யுத்த அனர்த்தங்களால் எமது பிரதேசத்தில் இயல்பு வாழ்வு பாதிப்படைந்திருந்தது. அமைதி குலைந்திருந்தது. சிறுவர்கள் தம் கல்வியைத் தொடரமுடியாத அவலத்துக்குள் தள்ளப்பட்டிருந்தார்கள்.

இந்த அனர்த்த பாதிப்புகளால் கல்வி தடைப்பட்டது. சிறுவர்கள் கற்கவேண்டிய வயதில் தொழில் செய்யவேண்டிய நிர்ப்பந்தத்துக்கும் நிர்க்கதிக்கும் ஆளானார்கள். இன்றைய நிலை வேறு.

இன்று அமைதி குடிகொண்டுள்ளது. இயல்பு வாழ்வு திரும்பிக்கொண்டிருக்கிறது. பாடசாலைகள் மீளவும் சீராக இயங்கத் தொடங்கிவிட்டன. மாணவர்களும், ஆசிரியர்களும் எதிர்கொண்ட இடர்பாடுகள் நீங்கியுள்ளன.

எனவே எமது பிரதேச மாணவர்கள் கட்டாயம் கல்வியைத் தொடரவேண்டும். இம்மாணவர்களைப் பெற்றோர்கள் பெரிதும் ஊக்குவிக்கவேண்டும். இனியும் கற்கவேண்டிய வயதில் பிள்ளைகளை வேலைக்கமர்த்துவதைப் பிரதேச பெற்றோர்களும், முதலாளி மார்களும்தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

வறுமை காரணமாகக் கல்வியைத் தொடரமுடியாத இடர்பாடு இருந்தால், கோறளைப்பற்றுப் பிரதேசத்திலுள்ளவர்கள், பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ளலாம். அவர்கள் தம் கல்வியைத் தொடர வழி செய்யப்படும்.

இப்படி அவர் குறிப்பிட்டார். இவ்விழாவில் 'தளிர்'சஞ்சிகை வெளியீடும், சிறுவர்களது நானாவித கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (ளி)

# செங்கலடியில் 36 குடும்பங்கள் சொந்த இடங்களில் மீளக் குடியமர்வு

மட்டக்களப்பு , ஒக். 12

செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவில் இதுவரை இடம்பெயர்ந்து வாழ்ந்துவந்த முறுத்தானை, யாவணியா ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 36 குடும்பங்கள் அண்மையில் தம் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டன.

இக்குடும்பங்களைச் சேர்ந்த 145 பேர், செங்கலடி பிரதேச செயலகத்திலிருந்து மூன்று பஸ்களில் தம் சொந்தக் கிராமங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

வழியனுப்பும் வைபவத்தில் செங்கலடிப் பிரதேச செயலகத்தின் உதவித் திட்டப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.ஷரீப், உதவிப் பிரதேச செயலாளர் சித்திரவேல் ஆகியோர் கலந்துகொண்டனர். மீள் குடியேற்றப்பட்ட இம் மக்களுக்கு எகெட் நிறுவனம் உலர் உணவுப் பொருள்களை வழங்கியுள்ளது.

கடந்த யுத்த அனர்த்த காலத்தில் இம்மக்கள் இடம்பெயர்ந்து செங்கலடிப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தம் உறவினர்களினதும், நண்பர்களினதும் இல்லங்களில் இதுவரை காலமும் தங்கியிருந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ளி)

# அம்பாறை நகரில் செயல்திட்ட செயலமர்வு

அம்பாறை, ஒக். 12

''மத ஸ்தாபனங்களை அபிவிருத்தி செய்தலும், ஆன்மீக வளர்ச்சிக்கான செயற்திட்டமும்'' எனும் தலைப்பிலான செயலமர்வு, நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு அம்பாறை நகரில் நடைபெறும். பிரதமரும், புத்த சாசன மற்றும் மத விவகார அமைச்சருமான டீ.எம். ஜயரட்ண இதற்குத் தலைமை வகிப்பார். அன்று, அம்பாறை ஜும் ஆப் பள்ளிவாசல், பள்ளி வாசல்களின் நிர்வாக சபைத் தலைவர்கள், செயலாளர்கள், கதீப்மார்கள் ஆகியோரையும் பிரதமர் சந்தித்து பிரச்சினைகளை ஆராய்வார்.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் வை.எல்.எம்.நவவி இத்தகவல்களை வெளியிட்டுள்ளார். (ளி)




## முதலை இழுத்துச் சென்ற மீனவர் சடலமாக மீட்பு

கொழும்பு, ஒக். 12

காத்தான்குடி வாவியில் கடந்த சனிக்கிழமை மாலை மீன்பிடித்துக் கொண்டிருந்த போது முதலையால் நீருக்கடியில் இழுத்துச் செல்லப்பட்ட மீனவர்ஒருவர் நேற்று முன்தினம் காலை கடித்துக் குதறிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கடற்படையினரும் பொலிஸாரும் பல மணித்தியாலங்கள் போராடி இச்சடலத்தை மீட்டுள்ளனர்.

முதலைக்கடிக்கு பரிதாபகரமான முறையில் இறந்தவர் 5 பிள்ளைகளின் தந்தையான 60 வயதுடைய தம்பி லெப்பை புஹாரி என அடையாளம் காணப்பட்டுள்ளார் என காத்தான்குடி பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ளி)

# கிண்ணியா பாடசாலைகளில் வாசிப்பு மாதப் போட்டிகள்

திருகோணமலை, ஒக்.12

கிண்ணியா பிரதேச பாடசாலை மாணவர்களுக்கிடையே கவிதை, கட்டுரை, சித்திரம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கிண்ணியா நகரசபையும், பொது நூலகமும், தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி இப்போட்டிகளுக்கான ஏற்பாடுகளைக் கூட்டாகச் செய்துள்ளன.

இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்களும், நிபந்தனைகளும் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டு விட்டன என நூலகர் தெரிவித்துள்ளார்.

'புத்தகம் பேசுகிறது' என்ற தலைப்பில் கவிதை புனையப்படவேண்டும். 'அதிசய பாதைக்கு வாசிப்பால் ஒன்று சேருவோம்' என்ற தலைப்பில் கட்டுரை வடிக்கப்படவேண்டும். 'கிண்ணியா 20 ஆண்டுகளுக்குப் பின்னர்' என்ற தலைப்பில் சித்திரம் தீட்டப்படவேண்டும் என்றும் அவர் விவரித்துள்ளார்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர், நூலகர், பொதுநூலகம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (ளி)

# செஞ்சிலுவைச் சங்க மட்டக்களப்புக் கிளை இளைஞர் பிரிவின் புதிய நிர்வாகிகள் தெரிவு

மட்டக்களப்பு, ஒக். 12

இலங்கை செஞ்சிலுவைச் சங்க மட்டக்களப்புக் கிளையின் இளைஞர் பிரிவுப் பொதுக் கூட்டம், மாவட்டக் கிளைத் தலைமைக் காரியாலயத்தில் இளைஞர் பிரிவுத் தலைவி சு.சாமிளா தலைமையில் நடைபெற்றது.

இதில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர்: ஆர்.பிரகாஷ், செயலாளர்: கே.கமலேந்திரன், பொருளாளர்: எஸ்.லவகுமாரி, உபதலைவர்: வி.புவிதாசன்.

எஸ்,நிரோஜினி, ஆர்.ஜெகன், எஸ்.கோபிதா, பி.சுதர்ஷன், எஸ்.ஜெயப்பிரியா ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் பிரதம அதிதியாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டக் கிளைத் தலைவர் த.வசந்தராசா கலந்து கொண்டார். (ளி)


# மட்டக்களப்பில் நேற்று அபிவிருத்திக் குழுக்கூட்டம்

மட்டக்களப்பு, ஒக்.12

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று திங்கட்கிழமை கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன், பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் ஆகியோரின் கூட்டுத் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட அரச அதிபர் த. சுந்தரம் அருமைநாயகம், மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் இதில் பங்கேற்றார்.

இந்தக் கூட்டத்தில் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் பசீர் சேகுதாவூதும் பங்கேற்றார். (ளி)




01.07.1994

✱ இ.தொ.காவின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து ராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி பதவி நீக்கம் செய்யப்பட்டு கட்சியின் தலைவர் தொண்டமானின் பேரனான ஆறுமுகம் தொண்டமான் கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

✱ தேர்தல் உடன்பாடு காண்பது குறித்து ம.ஐ.மு.தலைவர் தினேஸ் குணவர்த்தனவுக்கும் சுதந்திரக் கட்சித் தலைவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின் போது வடக்கு - கிழக்குப் பிரச்சினை குறித்து தனது நிலைப்பாட்டை சுதந்திரக் கட்சி பகிரங்கப் படுத்த வேண்டும் என தினேஸ் குணவர்த்தன கோரிக்கை விடுப்பு.

02.07.1994

✱ கொழும்பில் வாகனத் தரிப்பு இடமொன்றில் வான் ஒன்றுக்குள் இருந்து வெடி குண்டு கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப் படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

✱ எதிர்வரும் பொதுத் தேர்தலுக்காக பொ.ம.ஐ.முன்னணியும் முஸ்லிம் காங்கிரஸ் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிப்பு.

03.07.1994

✱ முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஸ் ரப்புடன் இணைந்து தாம் தயாரித்த இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான திட்டம் குறித்து விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேசுவதற்கு யாழ்ப் பாணம் வர விரும்புவதாக அமைச்சர் தொண்டமான் விடுதலைப் புலிகளுக்கு கடிதம் அனுப்பி வைப்பு.

✱ சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவி சந்திரிகா எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமது கட்சி வெற்றி பெற்றால் விடுதலைப் புலிகள் அதிகாரப் பகிர்வு தொடர்பாக பேசவுள்ளதாக அனுப்பி வைத்த செய்தியில் நம்பிக்கை வைக்கத் தாம் தயாராக இல்லை என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாக அறிவிப்பு.

04.07.1994

✱ கடந்த சில தினங்களாக கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் வைத்து 700 க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள், யுவதிகள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

✱ நடைமுறையில் உள்ள அவசரகாலச் சட்டத்தை பொதுத் தேர்தலையொட்டி இம் மாதம் 15 ஆம் திகதியுடன் காலாவதியாக விடுவதற்கு அரசு தீர்மானித்துள் ளதாகத் தெரிவிப்பு.

05.07.1994

✱ கரும்புலிகள் தினமான இன்று புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி கொழும்பில் உள்ள ஐ.நா. மற்றும் செஞ்சிலு வைச் சங்கப் பணிமனைகள் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

✱ வடமாகாணத்தில் தேர்தலில் போட்டியிடும்படி தமிழ்க் கட்சிகளை அரசின் சார்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டுள்ளதாகத் தெரிவிப்பு.

06.07.1994

✱ சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இப் போதும் நாம் தயார். ஆனால் நாடாளு மன்ற, மற்றும் பொதுத் தேர்தலும் நடந்து முடியும் வரை எவருடனும் பேசுவதற்கு நாம் தயாராக இல்லை என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு.

✱ எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக புளொட், ரெலோ, ஈரோஸ் ஆகிய மூன்று இயக்கங்களும் கூட்டு முன்னணியொன்றை அமைத்துள்ளதாகத் தெரிவிப்பு.

07.07.1994

✱ எதிர்வரும் பொதுத் தேர்தலில் கொழும்புத் தமிழர்கள் "சிங்கத்தை அதன் குகையிலேயே" சந்திக்கத் தயாராக வேண்டும் என தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் வேண்டுகோள்.

✱ கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் உபசபாநாயகராக இருந்த காமினி பொன்சேகா ஐ.தே.கட்சியில் இருந்து இராஜினாமாச் செய்துள்ளதாகத் தெரிவிப்பு.

08.07.1994

✱ ஜே.வி.பி.இயக்கத்தின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தமது தலைமறைவு வாழ்க்கையை முடித்துக் கொண்டு எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக நாடு திரும்புகிறார் என அறிவிப்பு.

✱ இலங்கையில் தமிழர்கள் ஆயிரக் கணக்கில் கைது செய்யப்பட்டு குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்படாமலேயே தடுத்து வைக்கப்படுவதாக சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் குற்றச்சாட்டு.

09.07.1994

✱ யாழ்.தேர்தல் மாவட்டத்தில் போட்டியின்றி எம்.பிக்கள் தேர்ந்தெடுக் கப்படும் நிலையை ஏற்படுத்தும் முயற்சியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிப்பு.

✱ எதிர்வரும் பொதுத் தேர்தலில் சிறிமானி அதுலத் முதலி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி 16 மாவட்டங்களில் 21 வேட்பாளர்களை நிறுத்தவுள்ளதாகத் தெரிவிப்பு.

10.07.1994

✱ அகில இலங்கைக் கம்பன் கழகம் அதன் 1994 ஆம் ஆண்டுக்கான 'மகர யாழ்.விருதை' யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் அமரர் பேராசிரியர் அ.துரைராசாவிற்கு மறைவுக்குப் பிந்திய விருதாக வழங்கிக் கௌரவிப்பு.

✱ இ.தொ.காவின் முன்னாள் பொதுச் செயலாளர் எம்.எஸ்.செல்லச்சாமி சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளதாகத் தெரிவிப்பு.

11.07.1994

✱ கொழும்பு கோட்டையிலிருந்து வவுனியா நோக்கி வந்த யாழ்தேவி ரயிலில் குண்டு ஒன்று வெடித்ததால் இருவர் கொல்லப்பட்டும் பலர் காயமடைந்தும் உள்ளதாகத் தெரிவிப்பு.

✱ சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்தால் விடுதலைப் புலிகளுடன் நிபந்தனை அற்ற பேச்சுக்களை மேற்கொள்ளப் போவதாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்க அறிவிப்பு.

12.07.1994

✱ பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பாளர் நியமனம் வழங்குவதாக ஹேமா பிரேமதாஸவுக்கு உறுதி அழித்திருந்த ஐ.தே.கட்சி இறுதி நேரத்தில் அவருக்கு வேட்பாளர் நியமனம் வழங்காது ஏமாற்றி விட்டதாக அவரது ஆதரவாளர்கள் கவலை தெரிவிப்பு.

✱ பொ.ஐ.முன்னணியின் சார்பில் எதிர் வரும் பொதுத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் சந்திரிகா போட்டியிடுவதற்கான வேட்பு மனுவைத் தாக்கல் செய்திருப்பதாகத் தெரிவிப்பு.

13.07.1994

✱ எதிர் வரும் 15 ஆம் திகதி காலாவதியாகவுள்ள அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதா அல்லது இல்லையா என்பதில் ஜனாதிபதி விஜேதுங்காவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

✱ பொ.ஐ.முன்னணி ஆட்சிக்கு வந்தால் புதிய அரசமைப்பொன்றை அறிமுகம் செய்யப்போவதாகவும், அதனைத் தயாரிக்கும் பொறுப்பு பேராசிரியர் ஜி.எல்.பிரிஸின் தலைமையிலான சட்ட நிபுணர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிப்பு.

14.07.1994

✱ நாட்டில் அமுலில் உள்ள அவசர காலச் சட்டத்தை நாளை நள்ளிரவுடன் காலாவதியாக விடுவது என அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிப்பு.

✱ இனப்பிரச்சினைக்கு, முடிந்தால் அரசியல் தீர்வு காணப்படும்; இல்லையேல் இராணுவ ரீதியில் தீர்வு காணப் படும் என ஐ.தே.கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத் தில் தெரிவிப்பு.

15.07.1994

✱ யாழ்.தேர்தல் மாவட்டத்தில் பொதுத் தேர்தல் நடத்துவதை நிறுத்தும் படி உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேல் நீதிமன்றம் நேற்று நிராகரித்துத் தீர்ப்பளித்துள்ளதாகத் தெரிவிப்பு.

✱ வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டது முதல் வன்செயல்கள் அதிகரித்து இருப்பது குறித்து ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க அறிக்கையொன்றின் மூலம் கவலை தெரிவிப்பு.

# வாசகர் திருமுகம்

## காரைநகர் ப.நோ.கூ.ச.அவலநிலை

காரைநகர் ப.நோ.கூ.சங்கம் 1991ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்கு முன் பின் யாழ்.மாவட்டத்தில் முதன்மை நிலையில் இயங்கியது. யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரின் முயற்சியினால் பிரச்சினை இல்லாது செயல்பட்டு வந்தது. தற்போது பணியாளர்களுக்கு வேதனம் வழங்க முடியாத நிலையில் மிகவும் பாரிய நிதி நெருக்கடி ஏற்பட்டு இக்கட்டான நிலையில் செயல்படுகின்றது. குறிப்பிட்டளவு யாழ்ப்பாண வர்த்தகர்களிடம் கொள்வனவு செய்து கூடிய இலாபம் இல்லாது நட்டத்தில் இயங்க வேண்டிய நிலைமையில் இருக்கின்றது. செப்ரெம்பர் 2010இலிருந்து பணியாளர்களுக்குரிய கொடுப்பனவு வழங்க முடியவில்லை. யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் பிறநாடுகளிலும் பெயர்போன காரைநகர் வர்த்தகப் பெருமக்களிருந்தும் சங்கம் இந்நிலையில் இருப்பது கவலைக்குரியது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் மக்கள் சங்கத்தை நாடுகின்றனர். சாதாரண சூழ்நிலையில் மக்கள் தனியார் கடைகளை நாடுகின்றனர். யாழ். மாவட்ட செயலகம் சமுர்த்தி, இலவச நிவாரணம் விநியோகத்திற்கு தரும் சேவைக்கட்டணம் 2 ரூபா போதுமானதா? வாகனச் செலவு, காகிதாகி, வகுப்புக்கூலி போன்ற செலவுகளுக்கு சேவைக்கட்டணம் போதுமானதாக இல்லை. எமது சங்கம் இடப்பெயர்வுக்கு முன் நுகர்ச்சி, பிடவை, இரும்பு போன்ற 15 கிளைகள் செயல்பட்டன. தற்போது கிளைகளை மட்டுப்படுத்தி 9 கிளைகள் செயல்படுகின்றன. அதில் சங்க நலன்கருதி 3 கிளைகளில் நுகர்ச்சி, நிவாரணம், சமுர்த்தி விநியோகம் செய்ய மற்றைய கிளைகளில் தனியான நுகர்ச்சி வியாபாரம் செய்ய மட்டுப்படுத்தியுள்ளன. அடுத்து சங்க வளர்ச்சிக்கு நிர்வாகம் கொள்வனவு செய்து விற்பனையைக் கூட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு பணியாளர்கள் விசுவாசமாகச் செயல்பட வேண்டுமெனத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**ச.ஆ.சோமசுந்தரம்,**
*பணியாளர்.*

## விண்ணப்பம் கோரல்

காரைநகர்,ஒக்.12

காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் சைவ சமயப் பாடப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக சபையின் பரீட்சைச் செயலாளர் ஆசிரியர் க.நேர்த்திரானந்தன் தெரிவித்துள்ளார்.

காரைநகர் பிரதேச பாடசாலைகளில் கல்வி பயிலும் தரம் 2 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்கள் தங்கள் பாடாசலை அதிபர்கள் ஊடாக எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப் பட்டுள்ளனர்.

அடுத்த மாதம் நடைபெற உள்ள இந்த பரீட்சையில் அதி உயர் புள்ளிகளைப் பெறும் முதல் ஐந்து மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்களும் வகுப்பு ரீதியாக முதல் ஐந்து இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப் படவுள்ளன.

(204-250)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



06.10.2010 அன்று நடைபெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 26 ஆவது பட்டமளிப்பு விழாவில் கல்வி முதுதத்துவமாணி (M.Phil.in Education) பட்டம் பெற்ற எமது நண்பரான சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர்

**திரு.நாகலிங்கம் சிறீதரன்**
***B.Sc, PGDE, M.Phil in Education.***

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் கல்வியில் உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

**நண்பர்கள்.**
*மீசாலை.*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

அருந்தவராஜா - சுலோஜனா தம்பதியரின் செல்வப் புதல்வன்



**அ.யதுஷன்**
(யா/உடுவில் மகளிர் கல்லூரி)

அவர்கள் 2010ஆம் ஆண்டின் 5ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டி மகிழ்வதுடன் இவருக்கு கல்வி ஊட்டிய வகுப்பாசிரியைக்கும் உரமூட்டிய வே.அன்பழகன் ஆசிரியருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இவர் பல்கலைகளும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர் :*
அப்பா, அம்மா, தாத்தா, பெரியப்பா, பெரியம்மா, வாசுகி அக்கா, மாமா, அத்தை, கீர்த்திகன், சித்தப்பா, சித்தி.

"ஜெயகிரி",
உடுவில் வடக்கு,
சுன்னாகம்.

(104525)

## யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் (நவோதயா பாடசாலை)

www.veerasingam.sch.lk

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**இடமிருந்து வலமாக:-**

| | |
|---|---|
| S.கீர்த்தனா | (157), |
| M.சபிதா | (146), |
| J.குணரூபா | (161), |
| R.லக்சிகா | (156), |
| T.தனுஜன் | (143), |
| A.கீர்த்தனன் | (185- மாவட்ட நிலை-2), |
| K.மலரவன் | (153), |
| S.பிரசாந் | (149), |
| S.அருள்ராஜ் | (168). |

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தில் 2ஆம் இடத்தைப்பெற்ற எமது வித்தியாலய மாணவன் செல்வன் அச்சுதன் கீர்த்தனன், அவரோடு இணைந்து வெற்றிபெற்ற 8 மாணவர்களையும், 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 31 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் இம் மாணவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்

# மகளிர் மாண்பினை உயர்த்தி எழுச்சி கண்டுவரும் வடமராட்சி ம.ம.கல்லூரி




பெண்கள் நாட்டின் கண்கள் என்றார் பாரதி. வளர்ந்து வருகின்ற விஞ்ஞான உலக வளர்ச்சிப் பாதைக்கு வலுச்சேர்ப்பதில் பெண் கல்வி முக்கியமானது. அந்த வகையிலே வடமராட்சியின் மத்தியிலே வதிரிச் சந்தியிலிருந்து மாலுசந்தி நோக்கிச் செல்லும் பிரதான வீதியிலே பருத்தித்துறை நீதிமன்றத்திற்கு சமீபமாக கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

இப்பாடசாலை சுமார் 150 வருடம் தொன்மையும் பெருமையும் கீர்த்தியும் உடையது. இது 1845ஆம் ஆண்டு வடமராட்சி மத்திய ஆங்கிலப் பாடசாலை என்ற பெயரில் குரேசர் ஐயாத்துரை என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது. இதுவே அக்காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது ஆங்கிலப் பாடசாலையாகும். குரேசர் ஐயாத்துரை என்பவரே தலைமையாசிரியராக இருந்து இப்பாடசாலையை நிர்வகித்தார். இவருக்குப் பின்னர் நாகலிங்கம் கனகலிங்கம் தலைமையாசிரியர் ஆனார். இதன்போது கட்டட அபிவிருத்தி என்ற ரீதியில் 1918ஆம் ஆண்டு இப்பாடசாலைக்கென 'T' வடிவ கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது. 1960ஆம் ஆண்டு சகல பாடசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்கத் தொடங்கிய சூழ்நிலையில் இப்பாடசாலையின் அபிவிருத்தி மந்தநிலையை அடைந்தது. இதன் பின்னர் 1970ஆம் ஆண்டு இப்பாடசாலை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டது.

1974களில் க.பொ.த.சாதாரணம் க.பொ.த.உயர்தர வகுப்புக்களை மகாலிங்கம் ஆசிரியர் தலைமையேற்று நடத்தினார். 1975ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பொதுக்கூட்டம் நடத்தி இப்பகுதியில் பெண்கள் பாடசாலை என்ற ஒன்று தேவை எனும் கருத்தினை வலியுறுத் தியது. இது தொடர்பான கோரிக்கையும் கல்வித் திணைக்களத் திடம் சமர்ப்பிக்கப்பட்டது. இக்கோரிக்கையை கல்வித் திணைக்களமும் ஏற்றுக் கொண்டது. இதன் பின்னர் இப்பாடசாலையின் வளர்ச்சி வரலாறு காணாத எழுச்சி கண்டது. இந்நிலையில் 01.10.1976ஆம் திகதியிலிருந்து அதிபர் இராஜரட்ணம் தலைமையில் 6 - 9 வரை வகுப்புகள் நடைபெற்றன. இதன் பின்னர் அதிபர் சுந்தரலிங்கம் பொறுப்பேற்றார். இவரின் வரவு பாடசாலையைச் சகல துறைகளிலும் எழுச்சி கொள்ள வைத்தது.

1991ஆம் ஆண்டு காலப்பகுதியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் பெண்கள் பிரிவு வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி என்ற பெயரில் தனித்தியங்க அப்போதைய யாழ்.கல்விப் பணிப்பாளராக இருந்த சுந்தரலிங்கம் அனுமதி வழங்கினார். இவரின் அனுமதியும் சேவையும் பிரதேச மக்களின் அயராத உழைப்பும் விடாமுயற்சியும் இன்று எழுச்சி கண்டு நிற்கும் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் தற்போதைய பேரெழுச்சிக்கு ஊன்றுகோலாக விளங்கியது

இதன் பின்னர் 01.09.1999 அன்று இப்பாடசாலை அதிபராக திருமதி வ.சுகுமாரன் பொறுப்பேற்றார். இவரின் நிர்வாகத்திறமையும் பாடசாலை ஆசிரியர்களின் அயராத பணியும் இப்பாடசாலைக்குப் பல்வேறு பெருமைகளை ஈட்டித்தந்தது. 2009ஆம் ஆண்டு 1AB பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது ஆய்வுகூடம், நூலகம் என்பன திறந்து வைக்கப்பட்டன. 23 கணனிகளைக் கொண்ட கணனி ஆய்வுகூடம் இயங்கிவருகின்றது.

இப்பாடசாலையைத் தற்போது திருமதி நா.அனந்தேஸ்வரன் நிர்வகித்து நடத்திவருகின்றார். 38 ஆசிரியர்கள் கல்விப்பணியை தொடர்ந்து வருகின்றனர். 676 மாணவிகள் கல்வி கற்று வருகின்றனர், 2 கல்விசாரா ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர்.

பாட அடைவுகளைப் பொறுத்தவரையில் இப்பாடசாலை மாணவிகள் க.பொ.த சாதாரணம், உயர்தரம் போன்ற பரீட்சைகளில் வியக்கத்தக்க வகையில் பெறுபேறுகளைப் பெற்று வருகின்றனர்.

இணைப்பாடவிதானங்களைப் பொறுத்தவரையில் தமிழ்த்தினப்போட்டி, ஆங்கிலதினப் போட்டி போன்றவற்றிலும் கவிதை, கட்டுரை, சிறுகதை போன்ற இலக்கியப் போட்டிகளிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் பாராட்டப்படக் கூடியளவு வெற்றிகளைப் பெற்றுவருகின்றனர்.

ஆனாலும் இப்பாடசாலைக்கு மேலும் பல தேவைகள் காணப்படுகின்றன. வகுப்பறைகளின் பற்றாக்குறை நிலவுகின்றது. எனவே வளர்ந்து வரும் இப்பாடசாலைக்கு தேவை நிறைவேற்றப்படுமாயின் குடாநாட்டிலேயே பிரபல்யமான மகளிர் கல்லூரியாக பரிணமிக்கும் என்பதில் சந்தேகமில்லை.






# வீதி அபிவிருத்தியில் வேகம் தேவை

யாழ்.-பருத்தித்துறை வீதியின் அகலிப்புப் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இதன்மூலம் யாழ்ப்பாணத்தை குட்டிச் சிங்கப்பூர் ஆக்குவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருவதாக அதிகாரிகள் மட்டங்களில் இருந்து கடந்த காலங்களில் செய்திகள் வெளிவந்தன. அனைத்து வகையான அபிவிருத்திகளுக்கும் வீதி அபிவிருத்தி அவசியமானதுதான்.

எனினும் இந்த வீதி அபிவிருத்தி பற்றி கடந்த காலங்களில் காரசாரமான வாதப்பிரதி வாதங்கள் இடம்பெற்று வந்தன. ஆனாலும் தற்போதைய சூழ்நிலையிலும் தற்போது நிலவுகின்ற, நிலவப்போகின்ற காலநிலையிலும் வீதி அபிவிருத்தியை வேகமாக முன்னெடுக்க வேண்டிய நிலையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை உள்ளது என்பதை மட்டும் மக்கள் நலன் கருதித் தற்போது சுட்டிக்காட்டவேண்டிய தேவை எழுந்துள்ளது.

இன்னும் சில நாள்களில் மாரிகாலம் முனைப்புப்பெற உள்ளது. இதனால் அபிவிருத்திப் பணிகள் நடைபெறும் வீதிகளில் வெள்ளநீர் பெருமளவில் தேங்கும் வாய்ப்பு உண்டு.

ஊடகங்கள் முன்வைத்த விமர்சனங்கள், வெளிவந்த எதிர்ப்புகள், எல்லாவற்றையும் பொருட்படுத்தாது வீதி அபிவிருத்திப் பணியை வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொண்டு வருகின்றது. அவர்களின் அபிவிருத்தி பற்றிய இலக்கு பாராட்டக்கூடியது.

ஆனாலும் எதிர்வரும் மழைகாலங்களில் விபத்துகள் அதிகம் ஏற்பட வாய்ப்புண்டு. தோண்டிய பள்ளங்களில் வெள்ளநீர் தேங்குவதற்கான வாய்ப்பு உள்ளதால் வாகனச் சாரதிகளுக்குப் பள்ளம் எது? பாதை எது? என இனங்காண்பது சிக்கலுக்குரியதாகவே இருக்கும். இதனால் லொறி தடம்புரளல், வாகன விபத்துக்கள், வாகன நெரிசல்கள் - இதன் பிரதிபலனாக தேவையற்ற உயிரிழப்புகள் என்பன ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. அண்மையில்கூட வல்லை மாற்றுப்பாதையில் பாதையின் சீரின்மையால் சாரதி ஒருவரின் உயிர் அநியாயமாகப் பறிபோயுள்ளது. எனவே வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளே! தற்போதைய நிலையில் வீதி அபிவிருத்தியை வேகமாக முன்னெடுங்கள், இல்லாவிட்டால் பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதையாக வீதி விபத்துக்களால் ஏற்படும் மக்களின் எதிர்ப்பு அலைகள் உங்களை நோக்கித் திரும்பிவிடும்.

# இவ்வாரம் முதல் சனிக்கிழமைகளில் சகல தபால் நிலையங்களும் மூடப்படும்

## அமைச்சு வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, ஒக்.12

நாடளாவிய ரீதியில் சனிக்கிழமைகளில் தபால் நிலையங்களை மூடுவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் இந்தவாரம் தொடக்கம் அமுலுக்கு வருகின்றது என தபால் தொலைத்தொடர்பு திணைக்களத்தின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சு அதிகாரிகளும், திறைசேரி அதிகாரிகளும் அண்மையில் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின் எடுக்கப்பட்ட இம்முடிவு இந்தவாரம் முதல் அமுலுக்கு வரும் என அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

நாடெங்கும் சுமார் 4,000 தபால் நிலையங்கள் சனிக்கிழமைகளில் செயற்படுகின்றன. இதன்காரணமாக அரசுக்கு வருடாந்தம் 45 கோடி ரூபா நஷ்டமேற்படுகின்றது. இந்த நஷ்டத்தைத் தவிர்ப்பதற்காகவே சனிக்கிழமைகளில் தபாலகங்களை முற்றாக மூடுவதற்கு முடிவெடுக்கப்பட்டது.

எனினும், ஒருசில தபாலகங்கள் சனிக்கிழமைகளில் லாபமீட்டுகின்றன. அத்தகைய தபாலகங்கள் பற்றிய விவரமடங்கிய அறிக்கையொன்றை திறைசேரி கோரியுள்ளது.

அதற்கமைய சனிக்கிழமைகளில் திறக்கக்கூடிய தபாலகங்கள் பற்றிய இறுதி முடிவு எடுக்கப்படும். சனிக்கிழமைகளில் இயங்கும் பல தபாலகங்களில் ஒரு முத்திரையேனும் விற்பனையாகாத நிலைமையும் கண்டறியப்பட்டுள்ளது - இவ்வாறு அந்த அதிகாரி தெரிவித்தார். (சி)

# நுகேகொட 'லீசிங்' நிறுவனத்தில் ரூபா 14 லட்சம் கொள்ளை

கொழும்பு, ஒக். 12

நுகேகொட ஹைலெவல் வீதியிலுள்ள லீசிங் நிறுவனமொன்றில் கடந்த வெள்ளிக்கிழமை ஆயுததாரிகளால் சுமார் 14 லட்சம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது என மிரிஹான பொலிஸார் தெரிவித்தனர்.

வாடிக்கையாளர்களைப் போல் புகுந்த மூவர் அங்கிருந்தவர்களை அச்சுறுத்திவிட்டு பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இவர்கள் மூவரும் வாடிக்கையாளர்கள் போல உள்ளே நுழைந்து நிலைமையை அவதானித்த பின் திடீரென தம்மிடமிருந்த துப்பாக்கிகளையும் , கத்தியையும் காட்டி பணியில் இருந்தவர்களை அச்சுறுத்தி அவர்களை அறையொன்றுக்குள் தள்ளிப் பூட்டிய பின் பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கொள்ளையர்கள் பற்றி இதுவரை எந்த தகவலும் கிடைக்கவில்லை. மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன என மிரிஹான பொலிஸார் தெரிவித்தனர். (சி)

# இலங்கையில் மனித உரிமை மீறல்கள்; சர்வதேச நாடாளுமன்றில் பிரேரணை

## ஐ.தே.கவின் ஜயலத் எம்.பி.தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.12

இலங்கையில் நடைபெற்றன எனக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான பிரேரணைகளை ஜெனிவா நகரிலுள்ள சர்வதேச நாடாளுமன்றச் சங்கத்திடம் சமர்ப்பித்துள்ளார் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பனர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

பி.பி.சி உலக செய்திச்சேவைக்கு அவர் வழங்கிய செவ்வியின்போதே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

தமது பிரேரணைகளை சர்வதேச நாடாளுமன்றச் சங்கம் ஏற்றுக் கொண்டது என்றும், அது தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கு அந்தச் சங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது என்றும் ஜயலத் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஜயலத் ஜயவர்தனவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணைகள் பொதுக்கூட்டத் தொடரின்போது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படமாட்டாது என ஜெனிவாவுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறியுள்ளார். (சி)

# பொலிஸ் பரீட்சை ஒத்திவைப்பு

கொழும்பு,ஒக்.12

இலங்கை அரச வர்த்தமானி அறிவித்தலின்படி, கொழும்பு 10, மருதானை ஸ்ரீ விபுலசேன மாவத்தையில் எதிர்வரும் 16 ஆம்திகதி நடைபெறவிருந்த பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர்களுக்கான எழுத்து மூலப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

மீண்டும் இப்பரீட்சை நடைபெறும் தினமும் அதற்கான அனுமதிப் பத்திரங்களும் பரீட்சார்த்திகளுக்கு காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும் என பொலிஸ் பரீட்சைகள் பிரிவு அறிவித்துள்ளது.

விண்ணப்பதாரிகள் இது பற்றிய மேலதிக விவரங்களை அறிந்து கொள்ள 011-2430362 அல்லது 011-2436607 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (சி)

# 1,60,000 மாணவர்களுக்கு பார்வைக் குறைபாடுகள்

கொழும்பு,ஒக்.12

நாடளாவியரீதியில் பாடசாலை மாணவர்களில் 1,60,000 பேர் பார்வைக் குறைபாட்டு நோய்க்கு உட்பட்டுள்ளனர் என சுகாதாரத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேபோன்று 4, 50,000 மாணவர்கள் பார்வைக் குறைபாட்டு நோய் அச்சுறுத்தலுக்கு உட்பட்டுவருகின்றனர் என்றும் சுகாதார அமைச்சின் புள்ளிவிவரங்களில் குறிப்படப்பட்டுள்ளது.

சிறார் போஷணைப் பற்றாக்குறை, நீரிழிவு மற்றும் தொடர்ந்து சூரிய வெளிச்சத்தை உற்றுநோக்கும் பழக்கம் போன்றவை பார்வை குறைப்பாட்டு நோய்க்கு முக்கிய காரணங்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் பார்வை குறைபாட்டால் அல்லலுறும் நோயாளர்களுள் அதிகரிக்கும் அறிகுறிகளை கொண்ட 18,000 பேர்வரை உள்ளனர்.

அதேவேளை, வயது முதிர்வு மற்றும் குறைபார்வைக் கோளாறு போன்றவற்றால் நான்கு லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்

இதனடிப்படையில், எதிர்வரும் 2020 ஆம் ஆண்டளவில் பார்வைக் குறைபாட்டை கட்டுப்படுத்துவதற்கான விசேட வேலைத்திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (சி)

# இறுதி யுத்தத்தில் தீவிரமாகச் செயற்பட்ட 947 புலி உறுப்பினர் மீது அடுத்த மாதம் வழக்கு

கொழும்பு,ஒக்.12

நடந்து முடிந்த யுத்தத்தின்போது தீவிரமாகச் செயற்பட்ட 947 புலி உறுப்பினர்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அடுத்த மாத ஆரம்பத்தில்வழக்குதொடரப்படவுள்ளதாக நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

இவர்களுள் கட்டுநாயக்க விமான நிலையத் தாக்குதல் சம்பவத்தில் கரும்புலி நடவடிக்கைகளை முன்னின்று நடத்திய கென்னடியும் உள்ளடங்குவார்.

அத்துடன், கரும்புலிகளின் தற்கொலைப் படையைச் சேர்ந்த 37 ஆண் - பெண் போராளிகளும், புலிகளின் தாக்குதல்களை தலைமையேற்று நடத்திய 24 பேரும், 10 குண்டுதாரிகளும், படுகொலை சம்பவத்தில் ஈடுபட்ட 27 பேரும், குண்டுகள் பொருத்தும் பிரிவைச் சேர்ந்த 67 பேரும் வழக்குகளுக்கு முகம் கொடுக்கவுள்ளனர்.

வழக்கு தொடரப்படவுள்ள இவர்களுக்கு சார்பாக ஆஜராகுவதற்கு உள்நாட்டுச் சட்டத்தரணிகளுக்கு அனுமதியுண்டு. வெளிநாட்டுச் சட்டத்தரணிகள் ஆஜராக முடியாது.

நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்கள் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்படவில்லை என சர்வதேச நீதியமைச்சர்கள் சுட்டிக்காட்டி வந்துள்ளதையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது - இவ்வாறு நீதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி)


## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ
உதவியாளராகக் கடமையாற்றும்
செல்வி சி.பாலசுப்பிரமணியம்
அவர்களின் அன்புத் தாய்
அமரர் பாலசுப்பிரமணியம் சிவபாக்கியம்
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.
நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம், உடுவில்.
(இ/571850)



## 31ம்நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 16 07 1930



இறப்பு 12 09 2010

அமரர் சின்னப்பு வெள்ளைக்குட்டி

12.09.2010 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்ப தலைவனின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 12.10.2010 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளது. இக்கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அண்ணாசிலையடி, கரணவாய். இங்ஙனம் குடும்பத்தினர்


# யுத்தத்தில் பெற்றோரால் கைவிடப்பட்ட சிறுவர்கள் தொடர்பாக 639 முறைப்பாடுகள்

கொழும்பு,ஒக்.12

இலங்கையின் வட பகுதியில் போர்ச்சூழல் நிலவியபோது பெற்றோர்களால் கைவிடப்பட்ட பிள்ளைகள் தொடர்பான 639 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கில் மீள்குடியேற்றப்பட்ட மக்களால் இந்த முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பிள்ளைகளைக் கண்டுபிடித்துப் பெற்றோரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஆணையாளர் சரத் அபேகுணவர்தன கூறியுள்ளார்.

வட மாகாணச் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் மூலம் 12 பிள்ளைகள் கண்டுபிடிக்கப்பட்டுப் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தச் சூழலில் பெற்றோரால் தவறவிடப்பட்ட பிள்ளைகள் சிறுவர் இல்லங்களில் இருக்கின்றார்களா என்பது தொடர்பாக ஆராய்வதற்காக ஏனைய மாகாணங்களில் உள்ள சிறுவர் பாதுகாப்புத் திணைக்களங் களின் ஒத்துழைப்பை வட மாகாண சிறு வர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம் கோரியுள்ளது.

இதற்கமைய இந்த மாதத்தின் நடுப் பகுதியில் இந்த விடயம் தொடர்பாக அனைத்து மாகாணங்களையும் சேர்ந்த சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்கள ஆணையாளர்களை ஒன்றுகூட்டிப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஆணையாளர் சரத் அபேகுணவர்தன மேலும் தெரிவித்துள்ளார். (த)

# கடந்த ஒன்பது மாதங்களில் நாட்டில் 50 பெண்கள் கொலை

கொழும்பு,ஒக்.12

இவ்வாண்டில்இதுவரை இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் 50 பெண்கள் கொலை செய்யப்பட்டுள்ளதுடன் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக 3,406 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் பொலிசார் குறிப்பிட்டுள்ளனர்.

இதில் 773 பாரிய குற்றச் செயல்கள் தொடர்பலான முறைப்பாடுகளும் அடங்குவதாகப் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு பெண்களுக்கு எதிரா 3,248 வன்முறைகள் பதிவானதாகவும் இவற்றுள் 109 பெண் கள் கொலையுண்ட சம்பவங்கள் உள்ள டங்குவதாகவும் பொலிசார் தெரிவித்த னர்.

பெண்களுக்கு எதிராக வன்முறைகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக மேல் நீதிமன்றத்திலும் நீதவான் நீதிமன்றங்களிலும் வழக்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் குறிப்படுகிறது. (த)

# முஷாரப் தலையைக் கொண்டுவந்தால் ரூ. 100 கோடியும் 1000 ஏக்கர் நிலமும்!

## பலுசிஸ்தான் முன்னாள் தலைவரின் மகன் தலால் அக்பர் புக்தி அறிவிப்பு

இஸ்லாமாபாத், ஒக். 12

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரபின் தலையை வெட்டி கொண்டு வருவோருக்கு பாகிஸ்தான் நாணயப்படி ரூ. 100 கோடியும், 1000 ஏக்கர் நிலமும் பரிசாக அளிக்கப்படும் என்று பலுசிஸ்தான் முன்னாள் தலைவர் நவாப் அக்பர் புக்தியின் புதல்வர் அறிவித்துள்ளார்.

பாதுகாப்புப் படையை ஏவிவிட்டு எனது தந்தை நவாப் அக்பர் புக்தியை பர்வேஸ் முஷாரப்தான் கொன்றார். எனது தந்தையை கொன்ற அவரை சும்மாவிடமாட்டேன். அவரை தீர்த்துக்கட்டுவேன் என்று தலால் அக்பர் புக்தி சபதம் எடுத்துள்ளார் .

குவெட்டாவில் சனிக்கிழமை செய்தியாளர்கள் கூட்டத்தில் தலால் அக்பர் புக்தி மேலும் தெரிவிக்கையில், ''முஷாரபை கொல்வதற்கு ஏராளமான நியாயமான காரணங்கள் உள்ளன. இராணுவத் தளபதியாக இருந்த முஷாரப், தனது அதிகார பலத்தின் மூலம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை 1999இல் தூக்கியெறிந்து ஆட்சியை கைப்பற்றினார்.

தனது கட்டுக்குள் பாதுகாப்புப் படை இருக்கிறது என்பதற்காக அதை ஏவிவிட்டு பலுசிஸ்தானில் தொடர்ந்து அப்பாவி மக்களைக் கொன்று குவித்தார். 2007இல் லால் மசூதியில் பாதுகாப்புப் படையினரை நுழையவிட்டு அப்பாவிகளைச் சுட்டுத் தள்ளினார்.

இப்படி அடுக்கடுக்கான மன்னிக்க முடியாத கிரிமினல் குற்றங்களை செய்த முஷாரப் உயிருடன் வாழ்வதற்கே தகுதியற்றவர். அவரைக் கொன்றே தீரவேண்டும்.

நாட்டில் இராணுவப் புரட்சியை ஏற்படுத்தியதற்கே அவருக்கு மரண தண்டனை கொடுத்திருக்க வேண்டும். ஆனால், அடுத்து ஆட்சிக்கு வந்த அரசு இதை செய்யத் தவறிவிட்டது.

அவரை பாதுகாப்பாக அது தப்பிக்க விட்டது. இதனால் அவர் லண்டனில் உலா வருகிறார். முஷாரபை இப்படியே விடக்கூடாது. அவரை தீர்த்துக்கட்டுவது அவசியம்.

இதனால் அவரது தலையை யார் வெட்டிக் கொண்டு வந்தாலும் அவர்களுக்கு ரூ.100-கோடி, 1000 ஏக்கர் நிலத்தை பரிசாகக் கொடுப்பதுடன் அவர்களை கௌரவிக்கவும் காத்திருக்கிறேன்'' என்றார்.

தலால் அக்பர் புக்தியின் அறிவிப்பால் முஷாரப் கொந்தளிப்பு அடைந்துள்ளார். தலால் அக்பர் புக்தி சொல்வதுபோல் அவரது தந்தையை நான் கொல்லவில்லை. பாதுகாப்புப் படை வீரர்களுடனான மோதலில் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நவாப் அக்பர் புக்தியின் சாவுக்கும், எனக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை எனக் குறிப்பிட்டுள்ளார். தலையை எடுத்திடுவேன் என்று சொல்பவர்களைக் கண்டு அஞ்சி ஓடுபவன் நானல்ல. எத்தகைய மிரட்டலையும், சவாலையும் துணிந்து எதிர்த்து நின்று சந்திக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பவன் நான் என்றும் முஷாரப் தெரிவித்துள்ளார்.

(சி)

# தீவிரவாதிகளை அவர்களின் காதுகள் 'ஸ்கான்' மூலம் அம்பலப்படுத்திவிடும்

## விமான நிலையங்களில் புதிய நடைமுறை வரும்

லண்டன், ஒக். 12

உலகில் தீவிரவாதம் பெருகிவிட்டது. எனவே தீவிரவாதிகளைக் கண்டுபிடிக்க விமான நிலையங்களில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

போலி கடவுச்சீட்டு மூலம் பயணம் செய்வதால் கைரேகை பரிசோதிக்கப்படுகிறது. ஆயுதங்கள் எடுத்துச் செல்லப்படுகின்றனவா? என்பதை அறிய உடல் முழுவதும் எஸ்க்ரே மூலம் ஸ்கேன் செய்யப்படுகிறது.

தற்போது புதிய முறையை கடைபிடிக்கலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். பொதுவாக மனிதர்களின் காது அமைப்பு ஒவ்வொருவருக்கும் மாறுபடும்.

எனவே, விமானத்தில் பயணம் செய்பவர்களின் காதுகளை ஸ்கேன் செய்தால் போதும். அதிலிருந்தே பயணம் செய்பவர் தீவிரவாதியா? அல்லது சாதாரண நபரா? எனத் தெரிந்துவிடும்.

இது சரியான திட்டம் என்று பிரிட்டனிலுள்ள சவுதாம் டன் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஏனெனில், முகத்தில் மேக் அப் போட்டு உருவத்தை மாற்ற முடியும். மேலும் முக பாவனைகள் மூலமும் தப்பிக்க முடியும். ஆனால், மனித உறுப்புகளில் காது தனிச்சிறப்பு வாய்ந்தது. அது ஆளுக்கு ஆள் மாறுபடும்.

எனவே காதின் அமைப்பைத் துல்லியமாக ஸ்கான் செய்தாலே போதும். கடவுச்சீட்டுடன் வருபவர் அசலா? அல்லது போலியா? எனத் தெரிந்துவிடும் எனத் தெரிவித்துள்ளனர். இக்கருத்து உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது.

(சி)

# நோபல் பரிசு பெற்றவரின் மனைவி பீஜிங் நகரிலிருந்து வெளியேற்றம்

பீஜிங், ஒக். 12

அமைதிக்கான நோபல் பரிசு இந்த ஆண்டு சீனாவைச் சேர்ந்த ஜனநாயக தலைவர் லி ஜியா போவுக்கு கிடைத்துள்ளது. இவரை அரசு சிறையில் அடைத்து வைத்துள்ளது.

இவர் மனைவி லி ஷியா கணவருக்கு ஆதரவாகவும், சீன அரசுக்கு எதிராகவும் பேட்டி கொடுத்துள்ளார். இதைத் தொடர்ந்து இவரை பீஜிங்கிலிருந்து சீன அரசு வலுக்கட்டாயமாக வெளியேற்றியுள்ளது.

லி ஜியாபோ சிறை வைக்கப்பட்டிருக்கும் ஜின்ஷவ் நகருக்கு அரசு இவரை கொண்டுபோய் வைத்திருக்கிறது. அரசு என்னை வீட்டுச் சிறையில் அடைத்து வைக்கத் திட்டமிட்டிருக்கலாம் என்று லி ஷியா கூறுகிறார்.

லி ஷியா தங்கியிருக்கும் வீட்டிலிருந்து பொலிஸாரால் வெளியேற்றப்படவிருக்கிறார் என்பதை முன்கூட்டியே அறிந்த அவரது ஆதரவாளர்களில் 100இற்கும் மேற்பட்டவர்கள் அவரது வீட்டுக்கு முன் திரண்டனர்.

அங்கு 30இற்கும் மேற்பட்ட பொலிஸார் கூடி இருந்தனர். அவர்கள் ஜின்ஷவ் நகருக்குச் செல்லும்படி லி ஷியாவை கேட்டுக்கொண்டனர். இதற்கு அவர் மறுத்துவிட்டார். இதைத் தொடர்ந்து அவரை கட்டாயப்படுத்தி அங்கிருந்து அழைத்துச் சென்றனர் என அங்கு கூடியிருந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே அவரை கடந்த 8ஆம் திகதி முதல் காணவில்லை என லியு ஜியாபோவின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

நோபல் பரிசு பெற்ற தகவலை கணவரிடம் சொல்வதற்காக அவரை பொலிஸார் அழைத்துச் சென்றனர் எனக் கூறப்படுகிறது. ஆனால், இத்தகவலை அறிய முயன்ற பத்திரிகையாளர்களைப் பாதுகாப்புப் படையினர் அனுமதிக்கவில்லை.

வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு அவர் பேட்டியளிக்கக் கூடும் என்பதால், அவரை அடையாளம் தெரியாத இடத்தில் வீட்டுச் சிறையில் சீன அரசு அடைத்துள்ளது என சிலர் கூறுகின்றனர்.

இதற்கிடையே சிறையிலுள்ள கணவனை சந்தித்து நோபல் பரிசு பெற்ற தகவலை ஜியோபோவின் மனைவி தெரிவித்துள்ளார் என ஹொங்காங்கில் உள்ள மனித உரிமை அமைப்பு, ஜியோபோவின் மாமியாருக்கு அனுப்பியுள்ள செய்தியில் தெரிவித்துள்ளது. (சி)



இஸ்ரேல் வந்திருந்த பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் பேர்னாட் கூச்சனர் (இடது), ஸ்பெயின் வெளியுறவு அமைச்சர் மிகூல்ஏஞ்சல்(வலது)ஆகியோர் இஸ்ரேல் ஜனாதிபதி ஷிமன்பியர்ஸை ஜெருசலேமில் சந்தித்துப் பேசுகின்றனர்.

# பங்களாதேஷ் ஆற்றில் பஸ் பாய்ந்து 40 பேர் பலி

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் பயணிகள் பஸ் ஆற்றில் பாய்ந்து விபத்துக்குள்ளானது. இவ்விபத்தில் 40 பேர் பலியாயினர். மேலும் நீரில் மூழ்கியவர்களைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது.

பங்களாதேஷின் மேற்கு டாக்காவில் அமீன்பசார் நகரை நோக்கி 50 பேருடன் பயணிகள் பஸ் சென்று கொண்டிருந்தது. செலாஹ்பூர் பாலம் அருகே ஞாயிற்றுக்கிழமை மாலை 5.45மணியளவில் வந்து கொண்டிருந்தபோது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து இந்த பஸ் துராக் நதியில் பாய்ந்தது.

பஸ்ஸில் பயணித்த 50 பேர் ஆற்றில் மூழ்கினர். சம்பவம் நடந்து 12 மணிநேரமாகியும் மூழ்கிய பஸ்ஸை கண்டுபிடிக்க முடியாமல் போனது.

இதனால் 22 பேர் கொண்ட குழுவினர் படகு மூலம் பஸ்ஸை தேடினர். இவற்றில் 40 பேர் பலியாயினர் என்றும், ஒரு சிலர் உயிருடன் (நீச்சல் தெரிந்தவர்கள்) தப்பித்துள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தினர் மீட்புப் பணியில் ஈடுபட்டுப் பலியானவர்களின் சடலங்களை மீட்டனர். விபத்தில் உயிர் தப்பிய தபான்குமார் என்பவர் தெரிவிக்கையில்,

''சம்பவ இடத்திற்குப் பொலிஸார் தாமதமாக வந்துள்ளனர். உள்ளூர்வாசிகள்தான் மீட்புப் பணியில் தீவிரம் காட்டினர். மேலும் மீட்புப்படையினரும் குறைந்த அளவே வந்திருந்ததால் உயிருக்குப் போராடியவர்களைக் காப்பாற்ற முடியாமல் போனது'' என்றார்.

# இனவெறிச் செயற்பாடுகளில் ஈடுபட்ட ஆஸி. பொலிஸார் நால்வர் பதவிநீக்கம்

மெல்போர்ன், ஒக். 12

இனவெறிச் செயலில் ஈடுபட்ட பொலிஸார் 4 பேர் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். 5 பேருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

இனவெறி ஈ-மெயில்களை சுற்றுக்குவிட்ட 15 பொலிஸார் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆவுஸ்திரேலியாவில் பொலிஸ்துறையில் வேலை செய்பவர்கள் மத்தியில் ஈ-மெயில் மூலமாக ஒரு விடியோ கிளிப்பிங் சுற்றுக்கு விடப்பட்டது. அந்த விடியோ இந்தியாவில் எடுக்கப்பட்டது.

அதில் ரயிலில் கூட்டமாக இருக்கிறது. இதனால் ரயில் கூரை மீதும் மக்கள் பயணம் செய்கிறார்கள். ரயில் ஒரு நிலையத்தில் நின்றபோது கூரை மீது பயணம் செய்த ஒருவர் எழுந்து நிற்கிறார். அப்போது அவர் தலைக்கு மேலாக செல்லும் மின்சார கம்பியை தன் ஒரு கையால் பிடிக்கிறார். இதில் மின்சாரம் தாக்கி அவர் பலியாகிறார்.

இந்தக் காட்சியை ஆவுஸ்திரேலிய பொலிஸார் ஈ-மெயில் மூலம் சுற்றுக்கு விட்டனர். அத்தோடு அந்த விடியோ காட்சிக்கு கீழே ஆவுஸ்திரேலியாவில் இந்திய மாணவர்கள் பிரச்சினைக்கு இது தான் சரியான தீர்வு என்றும் குறிப்பிட்டிருந்தனர்.

மனிதாபிமானம் இல்லாமல் இனவெறியைத் தூண்டும் வகையில் அமைந்த இந்தக் குறிப்புக்கு இந்திய அரசு கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. இந்தியாவுக்கான ஆவுஸ்திரேலிய தூதரை அழைத்து இந்தியா தன் கண்டனத்தை தெரிவித்தது.

பொலிஸ் அதிகாரிகளின் இந்தச் செயலுக்கு விக்டோரிய மாநில பிரதமர் ஜோன் பிரம்பி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது விக்டோரியா மாநில மக்களின் எண்ணத்துக்கு எதிரானது. மனிதாபிமானத்துக்கு எதிரானது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதைத் தொடர்ந்து ஆவுஸ்திரேலிய அரசு விக்டோரியா மாநிலத்தில் இனவெறியுடன் கூடிய இந்த விடியோ கெசட்டை சுற்றுக்கு விட்ட 4 பொலிஸ் அதிகாரிகளை பதவி நீக்கம் செய்தது.

இந்த விடியோ காட்சியை சுற்றுக்கு விட்டது தொடர்பாக 15 பொலிஸ் அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஓர் அதிகாரி பதவி இறக்கம் செய்யப்பட்டார். 5 பொலிஸாருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

மேலும் 15 பொலிஸார் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்தச் சம்பவத்தில் பொலிஸ் துறையிலுள்ள உயர் அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

விசாரணையில் 3 பொலிஸ் அத்தியட்சகர்கள் பிடிபட்டனர். பொலிஸ் கணினிமுறை மூலம் இந்த ஈ-மெயில்கள் அனுப்பப்பட்டுள்ளன. பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும் இதில் பிடிபட்டனர்.

# அமெரிக்க ஏவுகணைத் தாக்குதல்; பாகிஸ்தானில் 7 தீவிரவாதிகள் பலி!

பெஷாவர், ஒக். 12

பாகிஸ்தானில் பழங்குடிகள் அதிகம் வசிக்கும் வடக்கு வசிரிஸ்தான் பகுதியில் தீவிரவாதிகளின் நிலையை குறிவைத்து அமெரிக்கப்படை ஞாயிற்றுக்கிழமை ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது.

உலக அரங்கில்

7 தலிபான் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலில் இரு வாகனங்கள் தீ பற்றி எரிந்து சாம்பலாகின என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆப்கானிஸ்தானின் எல்லைப் பகுதியை ஒட்டி அமைந்திருந்த கட்டடம் ஒன்றுக்குள் தீவிரவாதிகள் முகாமிட்டிருக்கின்றனர் எனத் தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து 4 ஏவுகணைகளை வரிசையாக ஏவி அந்தக் கட்டடத்தை அமெரிக்கப் படைதகர்த்தது.

இத் தாக்குதலில் கட்டடத்துக்குள் இருந்த 7 தீவிரவாதிகளும் கொல்லப்பட்டுள்ளனர். வடக்கு வசிரிஸ்தான் பகுதியில் சமீபகாலமாக நேட்டோ படை வாகனங்களைக் குறிவைத்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

சமீபத்தில் நேட்டோ படைக்கு எண்ணெய் ஏற்றிச் செல்லவிருந்த 15 டேங்கர் லொறிகளை தலிபான்கள் தீ வைத்துக் கொளுத்தினர். இதையடுத்து பாகிஸ்தானில் தலிபான்களுக்கு எதிரான நடவடிக்கையை நேட்டோ படை துரிதப்படுத்தியுள்ளது.

# 11 ஆயிரம் சிறைக்கைதிகளை விடுவிக்க மியான்மர் இராணுவ அரசு முடிவு

யாங்கூன், ஒக். 12

தேர்தலில் வாக்குப்போட வசதியாக சிறைக்கைதிகள் 11 ஆயிரம் பேரை விடுவிக்க மியான்மர் இராணுவ அரசு முடிவு செய்துள்ளது.

மியான்மரில் 20 ஆண்டுகளுக்கு மேலாக இராணுவ ஆட்சி நடந்து வருகிறது. ஜனநாயகத்துக்காகப் போராடிய அரசியல் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

மியான்மரிலுள்ள 43 சிறைச்சாலைகளில் மொத்தம் 50 ஆயிரம் சிறைக்கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், ஐ.நா. சபை, உலக நாடுகள் ஆகியவற்றின் வற்புறுத்தலின் பேரில், தேர்தல் நடத்த அரசு முடிவு செய்தது. எதிர்வரும் நவம்பர் மாதம் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலில் வாக்கு போடுவதற்கு வசதியாக 11 ஆயிரம் சிறைக்கைதிகளை விடுவிக்க அரசு முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து அரசு அதிகாரி ஒருவர், செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில், ''விரைவில் குறிப்பிட்ட அளவு சிறைக்கைதிகளை விடுதலை செய்ய முடிவு செய்துள்ளோம். தேர்தலில் அவர்கள் வாக்குப் போடுவதற்கு ஏதுவாக அவர்களின் தண்டனை காலம் குறைக்கப்பட்டு, முன்கூட்டியே விடுதலை செய்யப்படுகிறார்கள்'' என்றார்.

# 'உதயன்' வெள்ளிவிழா கூடைப்பந்தாட்டம்; வேம்படி, சென்றல் மைதானங்களில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 12

'உதயன்' பத்திரிகை நிறுவனத்தின் வெள்ளி விழாவையொட்டி நடைபெறவிருக்கும் இருபாலருக்கும் இடையிலான லீக் முறையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை யாழ்.மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி உயர்தரப் பாடசாலை ஆகியவற்றின் கூடைப்பந்தாட்ட திடல்களில் ஆரம்பமாகின்றது.

வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை கூடைப்பந்தாட்ட திடலில் பி.ப. 3 மணிக்கு இடம்பெறவுள்ள பெண்களுக்கான ஆட்டத்தில் பட்டர்பிளை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இராமநாதன் விளையாட்டுக் கழக அணிமோதவுள்ளது.

பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் சென்றலைட்ஸ் (சொக்ஸ்) விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பற்றீசியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் (புளூஸ்) விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஒல்கோல்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-6-23)

## தாச்சிப் போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.12

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டு சங்கத்தினரால் உடுவில் சிந்து விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றுவரும் தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டம் இன்று பிற்பகல் 4 மணியளவில் இடம் பெறவுள்ளது.

இதில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி குமரநகர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது என விளையாட்டு ஏற்பாட்டுக் குழுத் தலைவர் அறிவித்துள்ளார். (6-23)

## 13வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் ஏழாலை ஸ்ரீமுருகன் ம.வி சம்பியன்

வலி வடக்கு,ஒக்.12

உடுவில் கல்விக் கேட்டப் பாடசாலை அணிகளுக்குஇடையே



நடைபெற்ற 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் சம்பியனாகியது.

ஏழாலை மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயமும் சுன்னாகம் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

போட்டியின் ஆரம்பம் மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற போதும் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் விரைவாகக் கோல்களைப் பெற்று முன்னணியில் காணப்பட்டது.

முதல் பாதி ஆட்டம் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் 3:0 கோல்கள் என்ற நிலையில் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய அணியினர் ஸ்ரீமுருகன் வித்தியாலயத்துக்கு கடும் நெருக்கடியைக் கொடுக்க ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தால் ஒரு கோலை மட்டுமே பெற முடிந்தது.

ஆட்ட நிறைவில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் 4:0 என்ற கோல் கணக்கில் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயத்தை வெற்றி பெற்று, உடுவில் கோட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (த-6-86)

## விளையாட்டு கழகங்களுக்கு நிதியுதவி

பருத்தித்துறை,ஒக்.12

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்ட நிதியிலிருந்து அல்வாய் வடக்கு நண்பர்கள் விளையாட்டு கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக 50 ஆயிரம் ரூபாவும், அல்வாய் மேற்கு சிற்றி விளையாட்டுக் கழகத்துக்கு தளபாடக் கொள்வனவுக்காக 50 ஆயிரம் ரூபாவும், பருத்தித்துறை சித்தி விநாயகர் விளையாட்டுக் கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்களுக்கு 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (த-190)

## இன்றைய ஆட்டங்கள்

வலி வடக்கு,ஒக்.12

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

*சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயம் எதிர் சுன்னாகம் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்.

*ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் எதிர் இணுவில் மத்திய கல்லூரி.

*ஏழாலை மகா வித்தியாலயம் எதிர் இணுவில் இந்துக் கல்லூரி.

**18 வயதுப்பிரிவு**

*இணுவில் மத்திய கல்லூரி எதிர் சுன்னாகம் மயிலணி வித்தியாலயம். (த-86)

## சுப்பிரமணியம் ஞாபகார்த்தக் கிரிக்கெட்; யூத் வி.கவை வென்றது கலைமகள்

வலி வடக்கு,ஒக்.12

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் சுப்பிரமணியம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.மாவட்ட மென்பந்து கிரிக்கெட் கழகங்களுக்கிடையே நடத்தும் 16 ஒவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டத்தில் ஏழாலை கலைமகள் விளையாட்டுக் கழகம் 6 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

தெல்லிப்பழை பூமா விளையாட்டுக் கழக மைதாகத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் சங்கானை யூத் விளையாட்டுக் கழகமும் ஏழாலை கலைமகள் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சங்கானை யூத் விளையாட்டுக் கழகம் 14 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 51 ஓட்டங்களை பெற்றது.

நிரஞ்சன் 13ஓட்டங்களையும் சிந்து 10 ஓட்டங்களையும் பெற்றன. கலைமகள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த டெல்மன் 14 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக் களையும் இம்ரான் 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் தினேஸ், ஆயீசன் முறையே 5, 20 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கலைமகள் விளையாட்டு கழகம் 12 ஒவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 52 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

சயந்தன் 14 ஓட்டங்களையும் டிலான் 12 ஓட்டங்களையும் பெற்றனர். யூத் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஜருசன் 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் சிந்து 5 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (த-6-86)

## போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம்

அச்சுவேலி ஒக்-12

அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவை முன்னிட்டு அச்சுவேலி சாயி வீடியோ நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட மாணவர்களுக்கான வீதியோட்டப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எட்டுக்கிலோமீற்றர் வீதியோட்டப் போட்டியில் முதல் பத்து இடங்களையும் பெற்றுக்கொண்டோர் விவரம் வருமாறு:-

ஞா.தர்மசீலன், க.நிசாந்தன், ர.பிரதீபன், ச.சஜிந்தன், ர.யதுர்னன், ந.தனுயன் ம.சுஜந்தன், க.டிலுக்சன், கு.நேருஜன், தி.திலக்ஸன் ஆகியோர் மேற்படி போட்டியில் வெற்றி பெற்றுள்ளனார். (க-201-11)

அகில இலங்கைப் பாடசாலைகளின் கிரிக்கெட்

## கவாஸ்கரின் அதிரடி ஆட்டம் கைகொடுக்க இறுதிக்குள் நுழைந்தது சென்.பற்றிக்ஸ்

யாழ்ப்பாணம், ஒக்.12

கவாஸ்கரின் அதிரடி ஆட்டமும் துல்லியமான பந்து வீச்சும் கை கொடுக்க சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 94 ஓட்டங்களால் கொழும்பு சென்.பெனடிக் கல்லூரி அணியை வெற்றி கொண்டு இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இலங்கைப் பாடசாலை துடுப்பாட்டச் சங்கம் நடத்திவரும் 'லெமனற்' கிண்ணத்திற்கான அகில இலங்கை ரீதியிலான துடுப்பாட்டப் போட்டியில் பிரிவு III இன் அரையிறுதியாட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு ஆனந்தாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் கொழும்பு சென்.பெனடிக்ற் கல்லூரி அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது. நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர் மானித்தது.

இதில் 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 230 ஓட்டங்களைப் பெற்றது. இதில் காவாஸ்கர் ஆட்டமிழக்காமல் 69 ஓட்டங்களையும்.

அலஸ்ரின் 34 ஓட்டங்களையும், ரியூடர் 33 ஓட்டங்களையும், நோபட் 29 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் சென்.பெனடிக்ற் கல்லூரி அணி வீரர்களான ஸ்ரீமால் பெர்ணன்டோ 10 ஓவர்கள் பந்து வீசி 33 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் மதுரமதுசங்கர் 10 ஓவர்கள் பந்து வீசி 41 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

231 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.பெனடிக்ற் கல்லூரி அணி 34.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 136 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இதில் மதுரமது சங்கர் 37 ஓட்டங்களையும் மிசாற் பெரேரா 18 ஓட்டங்களையும், திலின சில்வா 16 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர்களான கவாஸ்கர் 5.5 ஓவர் பந்து வீசி 37 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் நோபட் 4 ஓவர்கள் பந்து வீசி 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக் களையும் வீழ்த்தனர். (த-6-23)




## இறுதியாட்டத்துக்கு தெரிவான அணிகள்

வலி வடக்கு ஒக்.12

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு பெண்கள் அணிகளுக்கு இடையே நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டி அரையிறுதி ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கும் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி முதல் இரண்டு நேர் சுற்றுக்களை 25: 20, 25 : 21 புள்ளிகள் என்ற அடிப்படையில் அருணாசலம் வித்தியாலயத்தை வெற்றி பெற்று இறுதியாட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றது.

மற்றுமொரு அரையிறுதி ஆட்டத்தில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியும் மானிப்பாய் மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டதில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களை மகாஜனக் கல்லூரி 25:15,25: 05 புள்ளிகள் என்ற அடிப்படையில் மானிப்பாய் மகளிர் கல்லூரியை வெற்றி பெற்று இறுதியாட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (த-6-86)



யாழ்.மத்திய கல்லூரி கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஜெயா கனகநாயகம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ்.மத்திய கல்லூரி இல்லங்களுக்கு இடையே நடத்திய ருவென்ரி - 20 கிரிக்கெட் இறுதியாட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் நேற்று இரவு கல்லூரியின் சிமித் மண்டபத்தில் இடம் பெற்றது.

முதலிடத்தைப் பெற்ற புள்ளோ இல்ல அணித்தலைவர், இரண்டாமிடத்தைப் பெற்ற லிஞ்ச் இல்ல அணித்தலைவர் பிரமத விருந்தினராகக் கலந்துகொண்ட கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பிரான்ஸ் கிளைத் தலைவர் முத்துகுமாரு வெற்றிக்கிண்ணங்களை வழங்குவதைப் படங்களில் காணலாம். (படங்கள்:தமிழினியன்)

## சச்சின் 49ஆவது சதம், விஜய் முதலாவது சதம்

# ஆஸிக்கு இந்தியா பதிலடி!

பெங்களூர், ஒக். 12

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சச்சின், முரளி விஜய் ஆகியோர் சதமடிக்க, இந்திய அணி உத்வேகம் பெற்று பதிலடிகொடுக்கும் வகையில் சிறப்பாக ஆடிவருகிறது.

இந்தியா-ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி பெங்களூரில் நடைபெற்றுவருகிறது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி, முதல் இன்னிங்ஸிற்காக 478 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர், தனது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி, நேற்றுமுன்தினம் ஆட்ட நேர முடிவின்போது 02 விக்கெட்டுகள் இழப்புக்கு 128 ஓட்டங்களைப் பெற்றது.

மீண்டும் நேற்றுத் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த இந்திய அணிக்கு, சச்சின்-விஜய் ஆகியோரின் சதம் கைகொடுத்தது.

71ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடிவரும் சச்சின், தனது 49ஆவது சதத்தை அடித்து முத்திரை பதித்துள்ளார். அதேவேளை, ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 11 சதங்களை அடித்துள்ளார். இந்த ஆண்டில் அவர் அடித்த 6ஆவது சதம் (9 டெஸ்ட்களில்) இதுவாகும்.



சதம் அடித்த சச்சின் டென்டுல்கர், கடவுளுக்குத் தனது நன்றிகளைத் தெரிவிக்கிறார். தொடர்ந்து ஆடும் அவர் 200 ஓட்டங்களைக் குறிவைத்துள்ளார்.

8ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடிவரும் தமிழக வீரர் விஜய், தனது முதலாவது சதத்தை அடித்துள்ளார்.

நேற்றைய ஆட்ட நேர முடிவின் போது இந்திய அணி, 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 435 ஓட்டங்களைப் பெற்றது. இன்று ஆட்டத்தின் நான்காம் நாள் ஆகும்.

## கொமன்வெல்த் போட்டிகளில் முதல் 10 நாடுகள் பெற்ற

### பதக்கங்களின் பட்டியல்

(நேற்று மாலை வரையானது)

| நாடு | தங்கம் | வெள்ளி | வெ.கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஆஸ்திரேலியா | 62 | 39 | 38 | 139 |
| இந்தியா | 30 | 23 | 27 | 80 |
| இங்கிலாந்து | 26 | 47 | 34 | 107 |
| கனடா | 23 | 15 | 26 | 64 |
| தென்னாபிரிக்கா | 11 | 11 | 09 | 31 |
| நைஜீரியா | 08 | 07 | 11 | 26 |
| மலேஷியா | 06 | 07 | 07 | 20 |
| கென்யா | 06 | 04 | 05 | 15 |
| சிங்கப்பூர் | 05 | 05 | 06 | 16 |
| ஸ்கொட்லாந்து | 04 | 08 | 06 | 18 |

* இலங்கை ஒருவெள்ளிப் பதக்கத்தையும், ஒரு வெண்கலப் பதக்கத்தையும் பெற்று 23ஆவது இடத்தில் உள்ளது.

# ஐ.பி.எல். போட்டிகளை நாசமாக்கும் செயல்!



''பஞ்சாப், ராஜஸ்தான் அணிகளின் ஒப்பந்தங்களை ரத்து செய்தமையானது, சட்டத்திற்கு முரணான செயல். இது ஐ.பி.எல். போட்டிகளை நாசமாக்கும் செயல்.''

- இவ்வாறு இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் முன்னாள் தலைவரான லலித்மோடி கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

இதனை அவர் தனது 'டுவிட்டர்' இணையதில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

''எல்லா அணிகளுக்கும் விதி ஒரே மாதிரித்தான். எல்லாவற்றுக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. என்னைப் பொறுத்தவரை இதில் எந்தவித சந்தேகமும் கிடையாது.

எனவே, இந்த நடவடிக்கை முற்றிலும் சட்டத்திற்குப் புறம்பானது. ஐ.பி.எல். போட்டிகளை வளப்பதற்குப் பதிலாக பழிவாங்கும் நடவடிக்கையில் இந்திய கிரிக்கெட் சபை ஈடுபட்டுள்ளது. இதனால், ஐ.பி.எல். போட்டிகள் பாதிக்கும்.

இந்திய மக்களைப் பெருமைப் படுத்திய ஐ.பி.எல். போட்டிகளை, தனிப்பட்ட காரணங்களுக்காக அழிக்கும் நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்'' - என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் உரிமையாளர்களில் ஒருவரான ஷில்பா ஷெட்டி இந்த முடிவு மிகவும் அதிர்ச்சியளிக்கும் வகையில் உள்ளது எனக் கூறியுள்ளார்.

அவரது கணவர் ராஜ்குந்த்ரா, இந்த விடயத்தில் சட்டபூர்வ நடவடிக்கை எடுப்பது குறித்து ஆலோசித்து வருகிறார் எனத் தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட் சபை இதே போல ஏனைய அணிகளையும் பழி வாங்கினால், 4ஆவது ஐ.பி.எல். போட்டி நடப்பது சந்தேகம்தான் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''இதுபோன்று நடக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. இது அநாகரிகமான செயல்.'' - என்று அணியின் உரிமையாளர் நடிகை பிரீத்தி ஜிந்தா தனது அதிர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

பஞ்சாப் மற்றும் ராஜஸ்தான் அணிகளை அடுத்த ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்க முடியாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது, கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## கள்ள நுழைவுச் சீட்டு விற்ற பெண் கைது!

டில்லி, ஒக். 12

கொமன்வெல்த் போட்டிகளுக்கான நுழைவுச் சீட்டுகளைக் கள்ளச் சந்தையில் விற்ற பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

டில்லியில் நடந்து வரும் கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளைக் காண்பதற்காக வரும் ரசிகர்கள் கூட்டம் எதிர்பார்த்ததை விட மிகவும் குறைவே.

இந்நிலையில் கொமன்வெல்த் போட்டிகளுகான நுழைவுச் சீட்டுகளை கள்ளச் சந்தையில் விற்ற டில்லியை சேர்ந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## மிஸ்பா அணித்தலைவரா? வாசிம் அக்ரம் அதிர்ச்சி!

''பாகிஸ்தான் டெஸ்ட் அணியின் தலைவராக மிஸ்பா உல் ஹக் நியமிக்கப்பட்டமை அதிர்ச்சியளிக்கிறது.'' - என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் வாசிம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான், தென்னாபிரிக்கா அணிகள் 2 'இருபது/20', 5 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட பெரும் தொடரில் விளையாடவுள்ளது.

இத்தொடருக்கான பாகிஸ்தான் அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இதில் டெஸ்ட் அணியின் தலைவராக மிஸ்பா உல் ஹக் நியமிக்கப்பட்டுள்ளார். தேசிய அணியிலிருந்து புறக்கணிக்கப்பட்ட இவர், மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

# உதைபந்தாட்டத்திலிருந்து விரைவில் ஓய்வு!

''கடந்த 5 ஆண்டுகளாக எனது குடும்பத்தினருடன் சேர்ந்து கிறிஸ்மஸ், புத்தாண்டு எதையுமே நான் கொண்டாடியதில்லை. உதைபந்தாட்டம் எனக்குக் கடும் சோர்வைக் கொடுத்துள்ளது. இதனால், ஓய்வுபெறும் எண்ணம் அடிக்கடி வருகிறது.''

- இவ்வாறு ஆர்ஜென்ரீனா அணியின் முன்கள வீரரான கார்லஸ் டாவெஸ் கூறியுள்ளார்.

ஆர்ஜென்டினாவின் முன்கள வீரரான கார்லஸ் டாவெஸ், 2009 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் மான்செஸ்டர் யுனைடெட் அணியிலிருந்து விலகி, மான்செஸ்டர் சிட்டியில் இணைந்தார்.



சிட்டிக்காக அவர் சிறப்பாக விளையாடி வந்தாலும் பயிற்சியாளர் ரோபர்ட்டோ மான்சினிக்கும் டாவெஸூக்கும் இடையே கருத்து முரண்பாடு உள்ளது.

அணியின் ஆடை மாற்றும் அறைகளில் இவர்கள் இருவருக்கும் அடிக்கடி வாக்குவாதம் ஏற்படுவது வழமை. இந்நிலையில் நேற்று முன்தினம் கார்லெஸ் டாவெஸ் அளித்த பேட்டியில்,

''தொடர்ச்சியாக விளையாடுவதால் எனக்கு உதைபந்தாட்டம் மீது வெறுப்பு ஏற்படுகிறது. கடந்த 5 ஆண்டுகளாக இங்கிலாந்தில் விளையாடி வருகிறேன். கிறிஸ்மஸ் தினத்தன்றோ புத்தாண்டு தினத்தன்றோ நான் எனது குடும்பத்தினருடன் சந்தோசமாக இருக்க முடியவில்லை.

உதைபந்தாட்டத்தை நான் விரும்பி விளையாடினாலும், எனது சொந்த வாழ்க்கையில் நிறைய விடயங்களை இழந்து விட்டேன். இதனால், ஓய்வுபெறும் எண்ணம் அடிக்கடி வருகிறது. உதைபந்தாட்டம் எனக்கு சொல்லமுடியாதளவுக்கு சோர்வைத் தந்துள்ளது.

இந்தப் பருவகாலம் முடியும்போது எனது ஓய்வு முடிவும் வெளியாகலாம்.''- என்றார். 26 வயது நிரம்பிய கார்லஸ் டாவெஸ், ஆர்ஜென்ரீனா அணியின் முன்கள வீரர்.

## தங்கம் வென்ற நைஜீரிய வீரர் மீது ஊக்க மருந்துச் சர்ச்சை

100 மீட்டர் ஓட்டத்தில் தங்கம் வென்ற நைஜீரிய வீரர் ஊக்க மருந்துச் சர்ச்சையில் சிக்கியுள்ளார். இதனால், அவரது பதக்கம் பறிபோகும் நிலை காணப்படுகிறது.

கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் 100 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்றவர், நைஜீரியாவைச் சேர்ந்த ஒசாயாமி.

தற்போது, அவர் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்து பயன்படுத்தியமை தெரிய வந்துள்ளது. இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

# இங்கிலாந்து அணிக்கு பயிற்சியளிக்க பெக்காமே சரியான நபர்!

''இனிவரும் காலங்களில் இங்கிலாந்து அணியின் பயிற்சியாளராகப் பொறுப்பேற்க, டேவிட் பெக்காம் முன்வர வேண்டும். இங்கிலாந்து அணிக்கு அவர்தான் சரியான பயிற்சியாளராக இருப்பார்.''

- இவ்வாறு இங்கிலாந்து அணியின் முன்னணி வீரரான வேயர்ன் ரூனி கூறியுள்ளார்.

ஐரோப்பிய கிண்ண உதைபந்தாட்டத் தொடர் முடிந்ததும், 2012ஆம் ஆண்டுடன் இங்கிலாந்து அணியின் பயிற்சியாளர் பேபியோ கெபேலோவின் ஒப்பந்தம் முடியவுள்ளது.

பயிற்சியாளராக அவர் தொடர்வது உறுதியற்ற நிலையே காணப்படுகிறது. கெபேலோவுக்குப் பின்னர் ஓர் இங்கிலாந்துக்காரரைத்தான் பயிற்சியாளராக நியமிக்க வேண்டும் என்பதில் இங்கிலாந்து உதைபந்தாட்டச் சங்கம் தெளிவாக இருக்கிறது. இங்கிலாந்து அணியின் முன்னாள் பயிற்சியாளரான ஸ்ரீவ் மக்லரைனுக்கு மீண்டும் பயிற்சியாளர் வாய்ப்பு வழங்கப்படலாம் என்ற கருத்தும் நிலவுகிறது.

இந்நிலையிலேயே இங்கிலாந்து அணியின் பயிற்சியாளராகப் பொறுப்பேற்க டேவிட் பெக்காம் முன்வர வேண்டும் என்று அந்த அணியின் இளம் வீரரான வேயர்ன் ரூனி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-


பெக்காம் இங்கிலாந்து அணிக்காக பல்வேறுபட்ட முறைகளில் பங்காற்றியுள்ளார். கடந்த உலகக் கிண்ணப் போட்டியில் அவரது பயிற்சித் திறமை, வீரர்களுடன் அவர் கொண்டுள்ள உறவு முறை என்பன சிறப்பாக இருந்தன.

எனவே, இங்கிலாந்து அணியின் பயிற்சியாளராகப் பொறுப்பேற்க பெக்காம் முன்வர வேண்டும். அவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இங்கிலாந்து அணிக்கு அவர்தான் சரியான பயிற்சியாளராக இருப்பார்.''

- இவ்வாறு அவர் கூறினார்.

தற்போது 35 வயது நிரம்பிய பெக்காம், மான்செஸ்டர் யுனைடெட், ரியல் மாட்ரிட், ஏ.சி.மிலான் போன்ற முன்னணி அணிகளுக்காக விளையாடியுள்ளார். தற்போது, அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் கலக்சிக்காக விளையாடி வருகிறார்.

புகழ்பெற்ற பயிற்சியாளர்களான பேபியோ கெபேலோ, சர் அலெக்ஸ் பெர்குசன், லியார்னடோ போன்றவர்களுடன் பணியாற்றிய அனுபவம் பெக்காமுக்கு நிறையவே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



வேயர்ன் ரூனி

## வேலை ஆள்கள் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள
ஆடை விற்பனை நிலையத்துக்கு
நன்கு அனுபவம் உள்ள
விற்பனையாளர்கள் தேவை.
**சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும்.**

Date:-13/10/2010

Time:-11.00-3.00

இடம்:-213, 1/1 கஸ்தூரியார் வீதி,
லலிதா கட்டடம் 1 ஆம் மாடி,
(ராஜா தியேட்டர் அருகாமை)
யாழ்ப்பாணம்.

T.P:-0773604830


## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

Further to our advertisement appeared on 03rd October, 2010, inviting applications for the following posts should be read as follows:

Faculty of Science

Senior Professor/Professor in Marine Biology instead of Senior Professor/Professor in Fisheries Biology

Faculty of Arts

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in English Language Teaching instead of Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II / Lecturer (Probationary) in Teaching of English as a Second Language.

REGISTRAR
University of Jaffna, Jaffna,
08.10.2010

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 05 . 09 . 1957



இறைவன் மடியில் 04 . 10 . 2008

**அமரர் பாலசிங்கம் கனகநாயகம் (நூவர்)**

எமது உள்ளக் கோயிலிலே குடிகொண்டிருக்கும்
அன்புத் தெய்வமே!
எம் உணர்வோடு கலந்து உயிரோடு ஒன்றிய
தங்களின் ஆசீர்வாதம் எங்களை
மேலும் நல்வழிப்படுத்த
இறையடியில் இளைப்பாறும் புனித பாதங்களை
வணங்கி இரண்டாம் ஆண்டினை
நினைவு கூருகின்றோம்.

குமார வீதி,
நல்லூர்.

(104541)

என்றும் உங்கள்
மனைவி, பிள்ளைகள்.

## நீங்காத நினைவலைகள்



| ஏழாண்டு | | ஓராண்டு | |
|---|---|---|---|
| வேலுப்பிள்ளை முத்துக்குமாரு | | முத்துக்குமாரு பரிமளம் | |
| பிறப்பு | இறப்பு | பிறப்பு | இறப்பு |
| 01.04.1929 | 17.01.2003 | 29.07.1939 | 22.09.2009 |

திதி: பஞ்சமி

ஓராண்டு ஆனாலும் -எங்கள்
ஈரவிழி காயவில்லை
ஓயாது தேடுகின்றோம்- காணவில்லை உங்கள் முகம்
ஆலமரமாய் நீங்கள் இருந்தீர்கள் -அதில்
விழுதாக நாங்கள் இருந்தோம்
ஆலமரம் சாய்ந்ததே- இன்னும் ஆறவில்லை
எங்கள் நெஞ்சம்
பாரினில் பலயுகம் கழிந்தாலும் -என்றும்
மறவோம் உங்கள் நினைவுகளை
பார்போற்ற வாழ்ந்தீரே- நாங்கள்
வாழ்ந்திடுவோம் நீங்கள்
நடந்த பாதையிலே...

என்றும்
உங்கள் நினைவுடன்:
மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

பழைய வீதி,
கோப்பாய்தெற்கு, கோப்பாய்.

(105338)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## VACANCY
## POST OF BURSAR

Applications are invited by me up to 11th November 2010, from suitably qualified persons for the post of BURSAR.

Applications should be on prescribed form issued by the University. Application forms and particulars for the above post should be obtained from the Office of the Senior Assistant Registrar / Establishments [Non -Academic] of this University on a payment of Rs. 100/- for each application form at the People's Bank, University of Jaffna Branch or at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms and details by post are requested to send a Money Order / Postal Order to the value of Rs. 100/- drawn in favour of the Bursar of this University together with self addressed Rs. 5/- Stamped envelope of 23X10 c.m in size.

The envelope containing duly filled application form must bear "Post of Bursar" on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the Registrar on or before 11th November 2010

**QUALIFICATIONS:**

1. (a) Should possess a Membership of the Institute of Chartered Accountants of Sri Lanka or its equivalent.

   AND

   (b) Should possess at least six (06) years of experience in Accounting and/or Auditing in an executive capacity after acquiring the qualifications at 1(a) above.

   OR

2. A holder of the post of Deputy Accountant/ Deputy Bursar/Deputy Internal Auditor who is confirmed in that post and possesses three (03) years of satisfactory service in that post with qualification at 1(a) above. At least one (01) year out of the above (03) years of experience should be after acquiring the qualification at 1(a) above.

   OR

3. A holder of the post of Senior Assistant Accountant/Senior Asst. Bursar/Senior Assistant Internal Auditor who is confirmed in that post and possesses ten (10) years of experience in accounting and/or /auditing in an executive capacity and at least eight (08)years of satisfactory service in the post of Senior Assistant Accountant/ Senior Assistant Bursar/Senior Assistant Internal Auditor with qualification as at1(a) above. Three (03) years of such experience should be after acquiring the qualification at 1(a) above.

   OR

4. A holder of the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor and confirmed in that post with Masters Degree in Accountancy/Finance/Management from a recognized University/HEI and possesses the Intermediate qualification of the Institute of Chartered Accountants of Sri Lanka (ICASL) or its equivalent with not less than twelve (12) years of experience in accounting and /or auditing in an executive capacity after successfully completion of the above professional examination. At least ten (10) years of such experience should be in the post of Senior Assistant Accountant/Senior Assistant Bursar/Senior Assistant Internal Auditor or above of the Commission or of higher Educational Institution.

   OR

5. A person holding a Degree from a recognized University/HEI, who possesses a qualification of Higher National Diploma in Accountancy(HNDA) conducted by the Sri Lanka Institute of Advanced Technological Education (SLIATE) or its predecessor with not less than fourteen (14) years of experience in accounting and/or auditing in an executive capacity after obtaining the HNDA. At least eight (08) years of such experience should be in the post of Deputy Accountant/Deputy Bursar/Deputy Internal Auditor in the Commission/HEI and confirmed in that post.

   OR

6. Employees who are eligible in terms of Commission Circular No: 927 of 19.07.2010 can also apply.

**Note:**
Accounting and/or Auditing' experience means, experience gained in an executive capacity in Accounting and/or Auditing in a State or Reputed Private Sector Organization.

**Method of Recruitment** : Selection by a structured interview

**Salary Scale:**
Rs.45, 905-2X800; 12X850; 4X900-61,305/- p.m.

**AGE:**
Not more than 45 years. This age limit will not be applicable to those who are employed in the public sector organization.

**Sabbatical leave entitlement:**

The holder of the post of Bursar will become eligible for one year paid sabbatical leave or two years no pay sabbatical leave on completion of 07 years of service. The Bursar proceeding abroad on sabbatical leave to enrich his administrative capacity will be eligible to receive passage for himself/herself and his/her spouse.

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3. Gratuity payment
4. Employment Trust Fund benefits
5. Free medical care

Applications from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through their appointing authority. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete, illegible applications and applications received after the closing date will be rejected.

Registrar.
University of Jaffna.
2010.10.11

## அறிவித்தல்

### மானிப்பாய் கிராம உப அலுவலகம்

ஆதனப் பெயர் மாற்றம்
வட்டாரம் 04
பந்தியடி (யாழ்.மானிப்பாய் வீதி) ஒழுங்கை
ஆதன இல.169

வட்டாரம் 04 பந்தியடி ஒழுங்கை ஆதன இல 169 இல் அமைந்துள்ள ஆதனமானது வைரமுத்து வீரசிங்கமும் பெண் பூமணியும் என்பவர்களால் சீதனமாக வழங்கப்பட்டு நடராசா உதைசேகர் பெண் வினோலியா என்பவர்களால் 2883 - 26.06.2002 ஆம் திகதி எழுதப்பட்ட உறுதிமூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என்பதைத் தெரியப்படுத்தி, எமது ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றம் செய்வதற்காக பெயர் மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளனர். இவ்வாதனத்துக்கு உரிமைகோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்துமூலமாக 14 நாள்களுக்குள் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து நடராசா உதைசேகர் பெண் வினோலியா எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

செயலாளர்,
வலி.தென்மேற்கு பிரதேச சபை,மானிப்பாய். (104543)

## சைவ பரிபாலன சபையின் பரீட்சைகள்

யாழ்.சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் நடைபெறும் தமிழ் மொழி, சைவநெறி பாடங்களுக்கான பரீட்சை எதிர்வரும் 29ஆம், 30ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

மாணவர்களுக்கான சுட்டிலக்கங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சைக்கு பாடசாலை அதிபர் கள், ஆசிரியர்கள் ஒத்துழைப்பை வழங்குமாறு சைவ பரிபாலனசபை பரீட்சைச் செயலாளர் இரா. செல்வவடிவேல் அறிவித்துள்ளார். (த-204)

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் கட்டட நிர்மாண வேலைகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தகாரர்களுடனான முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் சம்பந்தப்பட்டவர்களைக் கலந்து கொள்ளமாறு கேட்கப்பட்டுள்ளது. (204)

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி செல்லம்மா

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் கைதடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லம்மா (10.10.2010) ஞாயிற்றுக் கிழமையன்று காலமானார்.

அன்னார் நடுவிலான் சின்னத் தம்பியின் அன்பு மனைவியும் காலம்சென்றவர்களான ஐயாத்துரை, செல்லத்துரை மற்றும் சறோஜா தேவி, பொன்னுத்துரை(லண்டன்), செல்வம், நந்தாவதி, இராசதுரை,புவனேஸ்வரி,நாகேஸ்வரி,இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் செல்வராணி(டென்மார்க்), கமலாதேவி, நாகேந்திரம், சித்திராதேவி (லண்டன்), மனோகரன் , ஆனந்தராசா, தவராணி, ஸ்ரீஸ்கந்தராசா,யோகரத்தினம், அருட் செல்வம் ஈகியோரரன் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2010 ) செவ்வாய்க்கிழமை நாவற்குழிச் சந்தி, அருணா பேக்கரி லேன் என்னும் முகவரியில் நடைபெற்று பூகவுடல் ாகனக் கிரியைக்காக பி.ப. ஒரு மணியளவில் ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

நாவற்குழிச் சந்தி,
அருணா பேக்கரி லேன்

தகவல்:
குடும்பத்தினர்

(சி/571863)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில்:
31.10.1978

ஆண்டவன் அடியில்:
23.09.2009

திதி: பஞ்சமி

### அமரர் கந்தசாமி பிரபாகரன்

வருடம் ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
ஆயிரம் உறவுகள் இங்கிருந்தாலும் அப்பாவை போலாகுமா?
உங்கள் இரண்டு பிள்ளைகளும் அப்பா எங்கே என கேட்கின்றனரே
நாதர் முடிமேல் இருப்பதுவும் நாசம் செய்யுமென்று யாருக்குத்தெரியும்
பால் என்று நினைத்து உங்கள் கையில் இரத்தத்தை அல்லவா குடித்தது
வைத்தியசாலையில் உங்கள் மனைவி கைப்பற்றி எனக்கு
எனக்கு ஒன்றும் ஆகாது என்று கூறினீரே...
அந்த ஆண்டவனுக்கும் பொறுக்கலையோ....

நித்திய புன்னகை நிலவே
நினை இழந்து...
ஆண்டொன்று ஆனதுவோ
ஆறவில்லை எங்கள் துயர்
வெய்துயிர் புலம்புகின்றோம்-எம்
வேதனை நீங்கிட-நீ
விண்ணைத் தாண்டி வருவாயா?

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், அப்பா, அம்மா, சகோதரர்கள்.

குடமியன், வரணி (சி-571851)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



விகிர்தி ஆண்டு ஆவணித்திங்கள் 28 ஆம் நாள் பின் இரவு 1.30 மணியளவில் (14.09.2010) செவ்வாய்க் கிழமை ஷஷ்டித் திதியில் சிவபதம் எய்திய எமது அன்பிற்கும் பாசத்திற்குமுரிய

### செல்வன் சிவசுதன் அரவிந்

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (13.10.2010) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து, அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)*


37/20, பிறவுண் வீதி,
முதலாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## அழிவற்ற கல்விமானின் 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
28.09.1946

விண்ணில்
12.10.2005



### அமரர் உயர்திரு கணபதி இராசதுரை

(B.ed, B.A (Pol.Sc), MA (Ed),S.L.P.S-1)

முன்னாள் அதிபர்- யாழ்பாணம் மத்திய கல்லூரி (1996- 2005)
அச்சுவேலி ம.வி, முல்லைத்தீவு, ம.வி
நடேஸ்வராக் கல்லூரி, கட்டுவன்புலம் ம.வி

பதிவைத்து வளர்த்தெடுத்த பயன்மிகு கல்வி கோவே!
ஒளிதைத்துக் கல்விவானில் ஒளிர்ந்திட்ட பெருஞ்சுடரே!
கதியென்று கல்விப்புலம் உனைநம்பி வாழ்ந்திருக்க
விதியென்று வீழ்ந்தனையோ? விழிசிந்தி விம்முகிறோம்
விண்ணுறையும் விளக்கே தோன்றாத் துணையாம்
எம்மனக்கோயிலிலே வருடமாய் இணைந்திருந்தீர்
மைந்தருக்கு தெய்வப்பலம் தந்து நின்றிருந்தீர்
ஆத்மீக வலுவாக குடும்பத்தை முருகேற்றி
ஆழ்மன சக்தியாய் எம்மை எல்லாம் நெறிப்படுத்தி
சக்தியாய் பலமாய் உறுதுணையாய்
எங்கள் மனங்களில் நிறைந்து நின்றீர்
விழி நீர் பாய சிந்தி உமை நினைத்து உலறுகின்றோம்.

க.இராசேந்திரம், அதிபர்,
கிளிநொச்சி பாரதி வித்தியாலயம்.

குடும்பத்தினர்,
சகோதரர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும்,
விளையாட்டுத்துறைக்கு மெருகூட்டியவருமான

### அமரர் சொர்ணலிங்கம் பாலகிருஷ்ணன்

எமது கல்லூரியின் 1952ஆம் ஆண்டு ஆசிரியராகக் கடமையேற்று வந்த சொர்ணலிங்கம் பாலகிருஷ்ணன் அவர்கள் சிறந்த விலங்கியல் ஆசிரியராகவும், எமது கல்லூரி துடுப்பாட்ட வீரர்களுக்குப் பயிற்றுநராகவும் விளங்கி எம்கல்லூரியின் துடுப்பாட்ட வளர்ச்சிக்கு அரும் பாடுபட்ட பெருந்தகையாவார். கல்லூரி விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியராகவும் (Prefect of Games) கடமையாற்றிக் கல்லூரி விளையாட்டுத்துறையின் பெருவெற்றிகளுக்கும் காரணகர்த்தாவாகத் திகழ்ந்தவராவார். 30 வருடகாலமாக எமது கல்லூரிக்காக அரும்பெரும் சேவையாற்றிய அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
பழையமாணவர் சங்கம்.

கொக்குவில் இந்துக்கல்லூரி.

# ஆட்டைத் திருடி தப்பியோடியோரில் கிணற்றில் தவறி வீழ்ந்தனர் இருவர்!

## நெடுங்குளத்தில் நேற்று இரவு சம்பவம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

கொழும்புத்துறை, நெடுங்குளம் பகுதியில் ஆட்டைக் களவாடிச் சென்ற திருடர் கோஷ்டியில் இருவர் அப்பகுதியில் உள்ள கிணற்றில் தவறி விழுந்துவிட்டனர். பிரதேச வாசிகளால் பிடிக்கப்பட்ட இருவரும் நையப்புடைக்கப்பட்டனர்.

நேற்றிரவு 9 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

அந்தப்பகுதியில் உள்ள வீடு ஒன்றில் ஆடு ஒன்றைத் திருடிய சிலரை அப்பிரதேச மக்கள் கலைத்துச் சென்றனர். அவ்வேளை அவர்களில் இருவர் அப்பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் தவறி வீழ்ந்துவிட்டனர். அவர்களை கிணற்றிலிருந்து மீட்ட மக்கள் நையப்புடைத்தனர்.

யாழ். பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததை அடுத்து, அங்கு சென்ற பொலிஸார் இருவரையும் கைதுசெய்து பொலிஸ்நிலையத்தில் தடுத்துவைத்து விசாரணை நடத்தி வருகின்றனர். (ஒ-ஐ-15)

## வடமாகாணத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்ட அரச அதிபர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

வடமாகாண ஆளுநர், பிரதம செயலாளர் மற்றும் வடக்கின் அரச அதிபர்கள் ஆகியோர் வவுனியாக் கூட்டத்தில் தெரிவிக்க வேண்டிய விடயங்கள் எவை என்பது குறித்தும் நேர ஒழுங்குகள் தொடர்பாகவும் கலந்துரையாடி முடிவெடுக்கப்பட்டது.

ஒவ்வொரு மாவட்டத்தின் பிரச்சினைகள் தொடர்பாகவும் அந்தக் கூட்டத்தில் தகவல்களைத் தெரிவிக்க அரச அதிபர் ஒவ்வொருவருக்கும் பத்து நிமிடங்கள் ஒதுக்கப்படும்.

நாளை வவுனியாவுக்கு வருகை தரும் ஜனாதிபதி செயலக அதிகாரிகளிடம் அரச அதிபர்கள் கூட்டத்தில் தெரிவிக்கவுள்ள விடயங்கள் குறித்து முன் ஆயத்தமாக விளக்கம் அளிக்கப்படும் - என்று அரச அதிபர் பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்தார். (ஒ-15)

## கெவிளியாமடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனால் கெவிளியாமடு குடியேற்றம் தொடர்பான விவகாரம் அங்கு முன்வைக்கப்பட்டது.

இதுதொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் அங்கு தெரிவித்தவை வருமாறு-

கெவிலியாமடுவில் 40 குடும்பங்கள் குடியேற்றப்பட்டிருந்தன. அதன் பின்னர் தற்போது 210 குடும்பங்களாக அதிகரித்துள்ளன.

நான் ஆதாரம் இல்லாமல் பேசு கிறேன் என்று சிலர் கூறுகிறார் கள். என்னிடம் சகல ஆதாரங்களும் உள்ளன. தேவை என்றால் அவற்றை சமர்ப்பிக்க நான் தயார்.

இப்பிரதேசத்தில் அத்துமீறிய குடியேற்றங்களை மாகாண முத லமைச்சர், மாவட்ட அரச அதிபர், மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் உட்பட சம்பந்தப்பட்ட விவசாயிகள் அடங்கிய குழுவினர் சென்று பார்வையிட வேண்டும் - என்றார்.

அரியநேத்திரனின் முறைப்பாட்டை அடுத்து, கெவிளியா மடு பிரதேசத்தில் குடியேறியுள்ள சிங்களக் குடும்பங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கு மாறு பட்டப்பளைப் பிரதேச செய லாளருக்கு உத்தரவிடப்பட்டது. அத்துடன், அப்பகுதியை முதலமைச்சர் மற்றும் அரச அதிபர்கள் அடங்கிய குழுவினர் நேரில் சென்று பார்வையிடவும் தீர்மா னிக்கப்பட்டது.

பிரதி அமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன், மாவட்ட அரச அதிபர், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பல அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர். (உ-சி)

## 20வருடங்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலை நிர்வாகத்திடம் இராணுவத்தினரால் கையளிக்கப்பட்டது. எனினும் உடனடியாகக் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலைமை இருந்தது.

பாடசாலைக்குச் சொந்தமான 240 பரப்புக் காணியில் மிதிவெடி அபாயம் இல்லையென உறுதிப் படுத்துவதற்கும் வகுப்பறை களைச் சுத்தம் செய்வதற்கும் கால அவகாசம் இராணுவத்துக்குத் தேவைப்பட்டது. அந்தப் பணி கள் நிறைவடைந்த நிலையில் நேற்றையதினம் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட் டன.

இந்த வருடம் இறுதிப் பகுதி வரை தரம் 10 தொடக்கம் உயர் தரம் வரையான வகுப்புகளே அங்கு இடம்பெறவுள்ளன. 42 வகுப்பறைகளைக் கொண்ட இந்தப் பாடசாலையில் தற்போது 7 வகுப்பறைகள் மட்டுமே கற்றல் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு ஏற்ற நிலையில் உள்ளன. ஏனையவை புனரமைப்புச் செய் யப்பட வேண்டியுள்ளன. அதன் காரணமாகவே மற்றைய வகுப்பு களை நடத்த முடியாத நிலைமை காணப்படுகிறது.

ஏனைய வகுப்புக்கள் வழமை போன்று தற்காலிகக் கட்டடத் தில் இயங்கவுள்ளன.

சுமார் 400 மாணவர்களும் 20 ஆசிரியர்களும் வயாவிளானில் கற்றல், கற்பித்தல் செயலில் ஈடுபடவுள்ளனர். இவர்களுக்கென இலங்கைப் போக்குவரத்துச் சபை யின் பஸ் சேவை காலையும் மாலையும் பாடசாலை வரை இடம் பெறவுள்ளது.

நேற்றைய ஆரம்ப நிகழ்வில் சிவில் இராணுவ அதிகாரி எல். கே.எக்கநாயக்க, வயாவிளான் பகுதிக் கட்டளை அதிகாரி கேணல் ரவிபத்திரவிதான உள் ளிட்டோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஒ-14)

## ஆணைக்குழு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டம் கடந்த காலங்களில் பல்வேறு இன்னல்களைச் சந்தித்திருக்கின்றது. யுத்தத்தின் போது பலர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்; பலர் காணாமல் போயிருக்கிறார்கள்; பலர் அங்கவீனமடைந்திருக்கின்றார்கள்.

இது தொடர்பான விளக்கங்கள், சாட்சியங்களை அளிப்பதற்காக மாவட்டத்தின் முக்கிய அமைப்புகளின் முக்கிய பிரதிநிதிகள் சென்றிருந்த வேளை பலர் திருப்பி அனுப்பப்பட்டுள் ளனர்.

மட்டக்களப்பு, ஓட்டமாவடி, செங்கலடி ஆகிய மூன்று இடங்களிலிருந்தும் சாட்சியமளிப்பதற்காக பாதிக்கப்பட்ட பலரும் அலைந்து திரிந்த போதிலும் தங்களுக்கு அனுமதி மறுக்கப் பட்டுள்ளது என மக்கள் பலர் என்னிடம் தெரிவித்துள்ளனர்.

சாட்சியமளிக்கச் சென்று வந்த மக்களும் அங்கு நடைபெற்ற விசாரணைகள் தங்களைப் பொறுத்த வரையில் திருப்திகரமாக அமைய வில்லை எனவும் தெரிவித்திருக்கின்றனர்.

- இப்படி நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் தெரிவித்தார். (உ-சி)

# குடாநாடு, முல்லைத்தீவு மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

## அரச அதிபர்கள் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்

அத்துமீறிய மீன்பிடித்தல் மற்றும் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்துவதை நிறுத்துவது தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாக நேற்றைய பத்திரிகையாளர் சந்திப்பின்போது அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட கடல் பரப்பில் குடாநாட்டு மீனவர்கள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடிப்பதாக முல்லைத்தீவு மீனவர் சங்கங்களினால் முல்லைத்தீவு அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டிருந்தது. இது தொடர்பில் இரு அரச அதிபர்களும் மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் இதுதொடர்பில் கலந்துரையாடித் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

யாழ். மீனவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் அத்துமீறி மீன்பிடிக்கக் கூடாது. அத்துடன் யாழ். மீனவர்கள் தடைசெய்யப் பட்ட றோலர், தங்கூசி, வலை என்பவற்றைப் பாவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அவற்றை உடனடியாக நிறுத்திவிட வேண்டும்.

காரைநகர் பகுதிகளில் 15 றோலர் படகுகள் மீன்பிடியில் ஈடுபடுகின்றன என்றும் வடமராட்சி கள்ளப்பாட்டுப் பகுதிகளிலும் வல்வெட்டித்துறைப் பகுதிகளிலும் 3 றோலர் படகுகள் மீன்பிடியில் ஈடுபடுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. இவை சட்டத்தினால் தடைசெய்யப்பட்டுள்ளன என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

**இந்திய மீனவர்களின் பிரசன்னம்**

காங்கேசன்துறை முதல் காரைநகர் வரையிலான கடற்பகுதிகளில் இந்திய மீனவர்களின் பிரசன்னம் அதிகமாக உள்ளதாக மீனவ சங்கங்கள் முறையிட்டன. இது தொடர்பில் விவரமாக ஆராய்ந்து அது தொடர்பான பூரண அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் அதன் பின்னரே தன்னால் உரிய தீர்மானத்துக்கு வரமுடியும் என்றும் பதில் அளித்தார் அரச அதிபர். (ஒ-15)

## நல்லிணக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செங்கலடிப் பிரதேச செயலகத்திலும் மக்களைச் சந்தித்து விசாரணை மேற்கொண்டு சட்சியங்களைப் பதிவு செய்தது.

9ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு சாட்சியமளிக்கச் சென்று கதிரையில் அமர்ந்தபோது நேரம் முடிவடைந்துவிட்டதாகத் தெரிவித்து சாட்சியமளிக்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை.

இன்று (நேற்று) 11ஆம் திகதி செங்கலடி பிரதேச செயலகத்திற்கு சாட்சியமளிக்கச் சென்றபோது காலை 8.45 மணி முதல் மு.ப 11.30 மணி வரை பகிரங்க சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

தொடர்ந்து இரகசிய சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன. தான் அங்கு சாட்சியமளிக்க முற்பட்டபோது பகிரங்க சாட்சியத்திற்கான நேரம் முடிவடைந்ததினால் சாட்சியமளிக்க முடியாதென தெரிவித்து சந்தர்ப்பம் வழங்கவில்லை.

இவ்விடயமாக நான் அந்த இடத்திலேயே வைத்து ஆணைக்குழுவின் தலைவரிடம், எனக்கு சாட்சியமளிக்க சந்தர்ப்பம் வழங்கப்படாமைக்கான வருத்தத்தினைத் தெரிவித்த கடிதத்தினை ஆணைக்குழு அங்கத்தவர் மூலம் சமர்ப்பத்துள்ளேன்.

இவ்விடயத்தை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளேன்.

- இப்படி அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். (சி)

## தாய்லாந்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்படுத்தவே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது எனவும், இவர்களை அனுப்பிவைக்கும் பிரதான முகவர்கள், உதவி முகவர்கள், சந்தேக நபர்கள் தப்பியோடிவிட்டனர் எனவும் தாய்லாந்து குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

அத்துடன் நேற்றுகாலை இடம்பெற்ற சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையின்போது கைதுசெய்யப்பட்டு சிறப்பு முகாமிற்கு கொண்டு செல்லப்பட்ட வேளை தாய்லாந்து குடிவரவு திணைக்கள அதிகாரிகளைத் தாக்கிவிட்டு 15 இலங்கையர்கள் தப்பியோடிவிட்டனர் எனவும், இதனைத் தொடர்ந்து தாய்லாந்து இராணுவமும், கனேடியன் இன்ரர்போலும் தொடர்ந்து தேடுதல்களை நடத்தி வருகின்றன எனவும் கூறப்படுகின்றது. (சி)

## 4 சிப்பாய்களுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனு மீதான தீர்ப்பை எதிர்வரும் 20 ஆம் திகதி வழங்குவதாகக் கூறிய நீதிவான் பெ.சிவகுமார், அவர் களைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது முக்கிய சாட்சிகளாக சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண் மற்றும் அவரது சகோதரன்,பெண்ணின் 10 வயது மகன் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

சகலரின் சாட்சியங்களும் பூர்த்தியடைந்ததைத் அடுத்து, படையினர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி கொஸ்வத்த பிணை மனுவைத் தாக்கல் செய்தார்.

வழக்கு விசரணைகள் பூர்த்தியடைந்துவிட்டன. குறிப்பிட்ட நான்கு சிப்பாய்களும் பணியிலிருந்து தற்காலிகமாகப் இடைநிறுத்தப்பட்டுள்ளனர். அவர்களால் சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் ஏதும் வராது. எனவே அவர்களைப் பிணையில் விடுமாறு அவர் தமது மனுவில் கோரினார்.

இந்த மனுவை ஆட்சேபித்த பாதிக்கப்பட்டோர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.இரட்ணவேல், தற்காலிகமாகப் பணியிலிருந்து இவர்கள் இடைநிறுத்தப்பட்டதாலும், இராணுவத்தினர் என்ற காரணத்தால் மக்களை அச்சுறுத்த வாய்ப்புள்ளது.

மக்கள் மீள்குடியேறும் நேரத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மேலும் இவர்கள் பிணையில் விடப்பட்டால், மேலும் மீளக்குடியேறும் மக்களை அது பாதிக்கும்.

பாரதூரமான குற்றம் என்பதால் இதற்கு 20 வருட சிறைத் தண்டனை விதிக்கப் படலாம்.இந்தத் தண்டனையில் இருந்து தப்புவதற்காக அவர்கள் தலைமறைவாகலாம்.

இந்தக் காரணங்களால் இவர்களைப் பிணையில் செல்ல அனுமதிக்கக்கூடாது என்று தனது ஆட்சேபத்தைத் தெரிவித்தார்.

பிணை மனு தொடர்பாக தீர்ப்பு எதிர்வரும் 20 ஆம் திகதி வழங்கப்படும் என்று நீதிவான் தெரிவித்தார். (ஒ-ஐ)


**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்**



மண்ணில் 02 - 11 - 1916

விண்ணில் 12 - 09 - 2010

அமரர் **கதிரன் சிலம்பு**

12.09.2010 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிசெய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (12.10.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து கலந்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ரூபன், றஞ்சி,
8, சாத்திரியார் வீதி,
அரியாலை.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

**வெளிவந்துவிட்டது**

டயறிகள் - 2011
- DESK DIARY
- SLIM DIARY
- SPONCH DIARY
- MANAGEMENT DIARY

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

**அன்னை புத்தகசாலை**

யாழ்ப்பாணம் 222 9881 · சாவகச்சேரி 227 0003

உங்கள் பிள்ளையின்

**வெற்றிப்பயணம் - 9**

தரம் 1, 2, 3, 4 மாணவர்களுக்குரிய பரீட்சை வினாத்தாள்

**விற்பனையாகிறது**

**ஸ்ரீலங்காவின் NO. 1**

**தேவை**

கமடா ஒப்செற் மெசின் ஓடக்கூடியவர் (மெசின்மைன்டர்)
பகுதிநேரமாகவோ, முழுநேரமாகவோ தேவை

T.P. :- 0718474325

**New Medi Care Hospital**

யாழ். பிரபல கண் சத்திரசிகிச்சை நிபுணர் சாவகச்சேரி நியு மெடி கெயர் மருத்துவமனையில் 18.10.2010 தொடக்கம் பிரதி திங்கட்கிழமைகளில் காலை 8.00- 12.00 மணிவரை நோயாளர்களை பார்வையிடுவார். கண் நோய் தொடர்பான வைத்திய ஆலோசனைகளையும்,சிகிச்சைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

No.32, Kachchai Road, Chavakachcheri.
T.P.: 021 3735505- 021 4920949

**THE SCIENCE CORNER**

Clock Tower Lane, Jaffna.

BIOLOGY - 2012 A/L

ஆரம்பம் - 13/10/2010

BATCH - I
WED - 3.00-4.00 P.M.

BATCH - II
THU - 5.00-6.00 P.M.

By S.பொன்திலகரன்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.